

# தமிழரசு

16-9-1989 ரூ.1




மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 31.8.89 அன்று மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி அலெக்சாண்டர் அவர்கள் தலைமையில் சென்னையில் டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத்தினைத் தொடங்கி வைத்தார். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2020

சுக்ல-ஆவணி-31

மலர்:20 16-9-1989 இதழ்:6


# இந்த இதழில்...


அண்ணாவின் ஆதரவும் பெரியாரின் பரிவும்
—முதல்வர் கலைஞர் ... 2

தமிழ்த்தென்றல் திரு.வி.க.
பிறந்த நாள் விழா ... 5

அண்ணா திருத்தசாங்கம்
—கவிஞர் வைரமுத்து ... 7

மானுடத்தின் எரிமலை
—கவிஞர் இளந்தேவன் 8

தமிழ்நாடு
டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்
பல்கலைக்கழகம் - தொடக்க விழா ... 9

அவருக்கு அவரேதான் நிகர்!
—மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன் ... 11

எண்ண அலைகள்
— கி. வீரமணி ... 12

அய்யா - அண்ணா சில நினைவுகள்
—இராம. சுப்பையா ... 14

தீரர் சத்திய மூர்த்தி
திருவுருவச் சிலைத் திறப்பு விழா ... 17

தஞ்சாவூர் மாவட்டத்தில்
குடிமராமத்துப் பணிகள் ... 20

சாண எரிவாயுக் கலன் ஒரு சமய சஞ்சீவி ... 24

ஈரோட்டில் கொடுமணல்
அகழாய்வுக் கண்காட்சி ... 26

ஊசிமலைக் கிராமம் தத்து எடுக்கப்பட்டது ... 27

கோழிச் செல்வம் காப்போம் ... 28

மாணவர் பக்கம் ... 30

வெள்ளை மனங்கொண்ட அண்ணா ... 33
—புலவர் தமிழ்ப்பித்தன்

தீர்ப்பளியுங்கள்
—பேரறிஞர் அண்ணா சிறுகதை ... 34

அண்ணாவின் கடைசிக் கட்டுரை
—திருவாரூர் முத்துராமன் ... 39

சகலலோகச் சக்கரவர்த்தி
சம்புவராயர் —மாமூலன் ... 42

ராஜ கம்பீர ராஜ்யம் ... 45
-நடன. காசிநாதன்.




★ நான் ஒரு பகுத்தறிவுவாதி என்று கருதிக் கொண்டிருக்கிறேன். பகுத்தறிவுக்கு ஒத்த எதுவும் எனக்கு விரோதம் அல்ல. பகுத்தறிவுக்கு ஒவ்வாத எதுவும் எனக்கு நட்பும் அல்ல. இதுதான் எனது நிலை.

★ என் தொண்டெல்லாம் நம் மக்கள் உலக மக்களைப் போல சரிசமமாக வாழ வேண்டும், அறிவிலே முன்னேற வேண்டும் என்பதற்குத் தான்.

-தந்தை பெரியார்.



★ முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளை நிலமாக்கிட வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த இயந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபடுவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உற்பத்தி, விநியோகம் ஆகியவற்றில் ஈடுபட்டு, அதனை நேர்மையான முறையில் நடத்திடுவோர், இவர்களெல்லாம் என் நண்பர்கள், என்வணக்கத்துக்கு உரியவர்கள்.

★ திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம், அவர் வாழ்ந்த மண்ணில் வாழத் தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும்.

-பேரறிஞர் அண்ணா

## தந்தை பெரியார்- பேரறிஞர் அண்ணா சிறப்பிதழ்

## முதல்வர் கலைஞர்

# அண்ணாவின் ஆதரவும் பெரியாரின் பரிவும்

**நா**ன் எழுதி நடித்த 'பழனியப்பன்' நாடகத்தை நூறு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டவர் 'திராவிட நடிகர் கழகம்' என்ற பெயரால் ஒரு கலை மன்றத்தைத் துவக்கி, கழகப் பிரசார நாடகங்களை நடிப்பது என்ற தீர்மானத்துடன் என்னை அணுகினார். நானும் அதற்கு ஒப்புதல் அளித்து, முதல் முதலாக நாடகக் குழு விழுப்புரத்தில் முகாமிட்டது. என்னையும் அந்த மன்றத்தில் இணைந்து நடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் எழுதும் நாடகத்தில் மட்டுமே நடிப்பது என்ற நிபந்தனையுடன் அதற்கு ஒப்புக் கொண்டேன்.

**'கருணா போய் வருகிறேன்'!**

ஒரு நாள் நாடகத்திற்குத் தலைமை வகிக்கப் பெரியார் வந்திருந்தார். இன்னொரு நாள் அண்ணா வந்திருந்தார். அவரிடத்திலேயே நாடக மன்ற உரிமையாளர் பத்து ரூபாய் கடன் கேட்டு வாங்கிய நிகழ்ச்சியையும், அண்ணா புன்னகையோடு அந்தப் பத்து ரூபாயைக் கொடுத்த நிகழ்ச்சியையும், நாடகம் முடிந்து ஊருக்குப் போகு முன், அண்ணா அவர்கள் என் முதுகில் தட்டி, ''கருணா, போய் வருகிறேன்'' என்று அன்பொழுகக் கூறியதையும் என்னால் மறக்கவே முடியாது.

**தி**ராவிடம் திராவிடர் என்ற உத்வேகத்தை நாட்டில் எழுப்புவதற்காக 'திராவிட நாடு' என்கிற கிழமை இதழை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் துவக்கினார்கள். அதனையொட்டித் திராவிடர்க் கழகம் என்ற பெயரால் ஒரு துணை மன்றம் போன்ற அமைப்பினை அண்ணா அவர்கள் காஞ்சிபுரத்தில் உருவாக்கினார். அந்தத் துணை அமைப்பு எதிர்காலத்தில் நாடு தழுவிய இயக்கமாக ஆகுமென்று அன்று யாரும் எதிர்பார்த்திட்டதில்லை.

நீதிக் கட்சியின் பொதுச் செயலாளராக அண்ணா அவர்கள் இருந்ததால் கட்சி வளர்ந்திடவும், புதிய வேகம் கொண்டிடவும், புதிய குறிக்கோள் பெற்றிடவும் வழிமுறை காண வேண்டுமென்று அண்ணா அவர்கள் துடித்தார்கள். நீதிக் கட்சியில் இருந்த பெரும் தலைவர்கள் மாட மாளிகை, மல்லிகை மஞ்சம், கூட கோபுரம், கொட்டு முழக்கு என்றெல்லாம் ஆடம்பரப் பிரியர்களாக இருந்தார்கள். குடிசைகளும், அங்கேயெழும் குரல்களும் அவர்கள் காதில் விழ வாய்ப்பில்லை. அத்தகையோர் பிடியிலிருந்த நீதிக் கட்சியை அண்ணா விடுவிக்க முயன்றார்.

1944-ஆம் ஆண்டில் தான் சேலத்தில் நீதிக் கட்சி மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து பெரியாரை இறக்கி விட நீதிக்கட்சிச் சீமான்களும், கோமான்களும் முயன்றார்கள். அப்படி நடைபெற்று விடாமல் பெரியாரின் தலைமையைக் காப்பாற்ற அண்ணா நாடெங்கும் சூறாவளிப் பயணம் செய்து, கட்சித் தொண்டர்களின் ஆதரவைப் பெருக்கினார்.

எதிர்ப்புகளை முறியடிக்கவும் நீதிக் கட்சியை ஏழைகளின் இல்லத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்ற தன்னுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், இந்திய விடுதலையில் தனக்கிருந்த அழிக்க முடியாத பற்றினை வெளிப்படுத்திக் கொள்ளவும் அண்ணா அவர்கள் சேலம் மாநாட்டில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். சரித்திரப்புகழ் படைத்த அந்தத் தீர்மானத்திற்கு 'அண்ணாதுரை தீர்மானம்' என்று பெயர்.

**அண்ணா ஏற்படுத்திய புதிய திருப்பம்**

நீதிக் கட்சி என்ற பெயரை மாற்றித் திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட வேண்டுமென்றும், வெள்ளையன் ஆட்சியால் தரப்பட்ட 'சர்', 'ராவ் பகதூர்', 'திவான்பகதூர்' போன்ற பட்டங்கள் துறக்கப்படவேண்டுமென்றும், கௌரவ நீதிபதி மற்றும் நியமனப் பதவி கொண்டவர்கள் அவைகளை இராஜினாமாச் செய்யவேண்டுமென்றும், தங்களுடைய பெயருக்குப் பின்னால் உள்ள சாதிப் பெயரை விட்டொழிக்க வேண்டுமென்றும் அண்ணாவின் தீர்மானம் முழக்கமிட்டது.

35-மணி நேர விவாதத்திற்கு அந்தத் தீர்மானம் உள்ளாகியது. கட்சியின் ஆய்வுக் குழு அண்ணாவின் தீர்மானத்தை வன்மையாக எதிர்த்தது. பின்னர் பொது மாநாட்டினில் அண்ணாவின் தீர்மானத்தை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டுப் பிறகு இறுதியில் அண்ணா விளக்கவுரை வழங்கினார். அதனைக் கட்சித் தோழர்களும், பொதுமக்களும் தங்கள் ஆர்வமிகுந்த கையொலிகளால் வரவேற்றவாறு இருந்தனர். அதனைக் கண்ட நீதிக் கட்சிப் பெரிய மனிதர்கள் ஒவ்வொருவராக மாநாட்டை விட்டு வெளியேறினார்கள். இறுதியில் அண்ணா தீர்மானம் இடி முழக்கமெனக் கையொலிகளுக்கிடையே நிறைவேறியது. பெரியார் தலைமையை அண்ணா காப்பாற்றியது மட்டுமல்ல, நீதிக் கட்சிக்கு ஒரு புதிய திருப்பத்தையும் தந்தார்.



**பு**துவையில் கழக மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டு, அதற்கான ஏற்பாடுகளில் அனைவரும் முழுமூச்சாக ஈடுபட்டோம். இரவெல்லாம் நாடக வேலை, பகலில் மாநாட்டு வேலை!

மாநாடு, சீரும் சிறப்புமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் எங்கள் எண்ணம் போல் முடித்துவிட்டனர்.

பெரியார், அறிஞர் அண்ணா, அழகிரிசாமி மற்றும் கழகத் தலைவர்கள் மாநாட்டில் பங்கு கொண்டனர்.

மாநாடு காலை பத்து மணிக்குத் தொடங்கிற்று; மாநாட்டில் கலகம் விளைவிக்கத் திட்டமிட்டவர்களும் ஒன்று, இரண்டு, பத்து நூறாக, மாநாட்டு முகப்புக்கெதிரே கூடி எதிர்ப்பு முழக்கங்கள் செய்திடத் தொடங்கினர்.

''திராவிடத் தலைவர்களே! திரும்பிப் போங்கள்!'' என்பதே அவர்களது கூச்சலாக இருந்தது.

''வா! 'என்றழைப்பதுதான் தமிழர் பண்பு! 'போ!' என்று கூறக் காரணம் யாதோ?'' என்று தொடங்கி, அறிஞர் அண்ணா அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அந்த உரையினைத் தொடர்ந்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட அடுத்த வினாடியே கொடி மரத்தை வீழ்த்தி விட்டார்கள் எதிரிகள்!

அவ்வளவுதான், அமளி தொடங்கி விட்டது. பெரியாரையும் அண்ணாவையும், ஏனைய தலைவர்களையும் வண்டிகளிலும் ரிக்ஷாக்களிலும் ஏற்றிப் பாதுகாப்பாக அனுப்பி விட்டுப் பாரதிதாசனும், நானும், காஞ்சி கல்யாணசுந்தரம் ஆகியோரும் வீதியில் நடந்து வந்து கொண்டிருந்தோம்.

**அந்தச் சம்பவம் இனிக்கிறது!**

திடீரென ஒரு பெருங்கூட்டம் எங்கள் மூவரையும் சூழ்ந்து கொண்டது. நாங்கள் மூவரும் திசைக்கொருவராக ஆகி விட்டோம். பாரதிதாசனை யாரோ அழைத்துக் கொண்டு ஓடி ஒரு வீட்டில் ஒளித்து விட்டார்கள். அவரது காலணியொன்று தெருவிலே கிடந்தது. அதனைக் கருவியாகக் கொண்டு என்னைத் தாக்கினார்கள். பெரிய லாடம் அடிக்கப்பட்ட பூட்ஸ்!

அது எப்படியிருந்திருக்கும் என்று கூற வேண்டியதில்லை. அப்பொழுது வலித்தது. ஆனால் இப்பொழுது நினைத்தாலும் அந்தச் சம்பவம் இனிக்கிறது.

அந்த நீண்ட தெருவில் ஒரேயொரு வீட்டில் மாத்திரம் கதவு திறந்திருந்தது. வாயிற்புறத்தில் இரண்டொரு பெண்கள் நின்று கொண்டு இருந்தார்கள். நான் வீட்டிற்குள்ளே நுழைந்தேன். வீட்டிற்குள்ளே நுழைந்த என்னை அந்தப் பெண்கள் தடுக்கவில்லை. திண்ணையில் இருந்தவாறு எந்தவிதச் சலனமும் இன்றி இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வீட்டிற்குள் சென்ற நான், தொடர்ந்து வந்த கூட்டத்தினர் என்னைப் பிடித்து விடாமலிருக்கக் கதவைச் சாத்தினேன். அதற்குள் கூட்டத்தினர் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். நான் கதவிடுக்கின் மறைவில் நின்று கொண்டு அந்த வீட்டை ஒருமுறை பார்த்தேன். தாழ்வாரத்திலும் கூடத்திலும் மதுப் புட்டிகள் இறைந்து கிடந்தன. காலி செய்யப்பட்ட புட்டிகளும், காலி செய்யப்படாத புட்டிகளும் ஏராளமாக இருந்தன. அந்த வீடு தான் கலகக்காரர்கள் சதித் திட்டம் தீட்டிய இடம் என்பதைப் பிறகு புரிந்து கொண்டேன். உள்ளே நுழைந்தவர்கள் கதவின் மறைவில் இருந்த என் தலைமயிரைப் பிடித்திழுத்துத் தெருப்புறத்தில் தள்ளினார்கள். 'க்யூ' வரிசையில் நிற்பது போல நின்று கொண்டிருந்த கலகக்காரர்கள் ஆளுக்கொரு அடி என்னை அடித்தார்கள். நான் மயக்கமுற்றேன். சுருண்டு விழுந்தேன். நான் இறந்துவிட்டதாகக் கருதி, சாக்கடை ஓரத்தில் தூக்கியெறிந்து விட்டுப் போய்விட்டார்கள்.



★ பட்டாளிகளுடைய கடமை சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய **கண்ணியம்** தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கிறது.

அவர்களுடைய **கட்டுப்பாடு** தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த முயற்சி எடுத்துக் கொண்டாலும், ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கிறது.

*பேரறிஞர் அண்ணா*



இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இரண்டு மணிநேரம் கழித்துத்தான் நான் கண் விழித்துப் பார்த்தேன். எங்கேயோ வீட்டுத் தாழ்வாரத்தில் நான் படுக்க வைக்கப்பட்டிருந்தேன். முதிர்ந்த ஒரு தாயும் ஒரு சிறுமியும் ஓர் இளைஞனும் என் அருகே இருந்தார்கள். நான் கண் விழித்துப் பார்த்தபோது அந்தத் தாய் சொன்ன வார்த்தை என் நெஞ்சில் அப்படியே பதிந்து விட்டது.

''ஐயோ, யார் பெற்ற பிள்ளையோ! இப்படிச் சாகக் கிடக்கிறதே?'' என்பதுதான் அந்தத் தாயின் வாயிலிருந்து வந்த கனிவு மிக்க வாசகம்.

இதற்கிடையில் காலையில் கலைக்கப்பட்ட கழக மாநாடு மீண்டும் மாலையில் கூட்டப்பட்டு அழகிரிசாமி அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது அவர் சொன்ன வாசகம் தான், ''காலையில் சில கவலை தரத்தக்க நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்'' என்பதாகும்.

**காயங்களுக்கு மருந்திட்ட பெரியார்**

என்னுடைய நிலைமை என்னவாயிற்று என்று தெரியாமல் தலைவர்கள் ஊரெல்லாம் ஆள் அனுப்பித் தேடியிருக்கிறார்கள். பெரியாரும், அண்ணாவும் என்னைக் காணாமல் துடித்துப் போயினர். விடியற்காலை நாலு மணிக்குத் தலைவர்கள் தங்கியிருக்கும் இடம் தெரிந்து அவர்களிடம் போய்ச் சேரப் புறப்பட்டேன். மீண்டும் என்னைத் தெருவில் கண்டால் கலகக்காரர்கள் உயிரைப் பறித்துவிடக் கூடுமென்று அஞ்சிய எனக்கு உதவி செய்த வீட்டார் என்னை மாறுவேடத்தில் போகுமாறு வலியுறுத்தினர். அவர்களே அதற்கான ஏற்பாடுகளையும் செய்து, முஸ்லீம் வேடத்தில் என்னை அனுப்பி வைக்கத் திட்டமிட்டனர். கைலி, நீண்ட ஜிப்பா, தலையில் குல்லாய் இவைகளுடன் ரிக்ஷா ஏறி, தலைவர்கள் இருக்குமிடம் சென்றேன். பெரியார் கண்ணுறங்காமல் என்னைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். என்னைக் கண்டதும் ஆரத் தழுவிக் கொண்டு, ''சுகமாக இருக்கிறாயா?'' என தழுதழுத்த குரலில் கேட்டார்.

அதற்குப் பிறகு அவரே என் காயங்களுக்கெல்லாம் மருந்திட்டார். ''என்னுடன் வா, போகலாம்'' என்று ஆணையிட்டார். நானும் அவருடன் புறப்படத் தயாரானேன்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகுதான் பெரியாரின் ஈரோட்டுக் 'குடியரசு' அலுவலகத்தில் துணையாசிரியனாகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

''குடியரசு துணை ஆசிரியனாக இரு!'' என்று பெரியார் பணித்ததோடு மட்டுமல்லாமல், அந்த இதழில் என்னைக் கட்டுரைகள் எழுத அனுமதித்து, அதனைப் படித்து மகிழ்ந்தார். எனக்கு மாதம் நாற்பது ரூபாய் சம்பளம். அதில் பிற்பகலும் இரவும் பெரியார் வீட்டில் சாப்பிடுவதற்காக இருபது ரூபாய் பிடித்துக் கொள்வார்கள். காலைச் சிற்றுண்டி, மாலைச் சிற்றுண்டிக்கு மாதம் பத்து ரூபாய் ஆகிவிடும். இதரச் செலவுகள் ஐந்து ரூபாய், மீதம் ஐந்து ரூபாயை என்னை அண்டி வந்த அருமை மனைவிக்கு - பத்மாவிற்கு மாதந்தோறும் திருவாரூருக்கு மணியார்டர் செய்து வந்தேன்.

எப்படியோ பிள்ளை சம்பாதிக்கிறான் என்று என்னைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் உற்ற சகோதரிகளுக்கும் பெருமகிழ்ச்சிதான்.


காலை எட்டு மணிக்கெல்லாம் பெரியார் வீட்டில் அவர் முன்னால் அமர்ந்து அன்று வருகிற தபால்களை அவர் பார்த்து அது பற்றிய விளக்கங்களை அறிவித்து அதனைச் செயல்படுத்துகிற வழிவகைகளை நாங்கள் தொடங்கிவிட வேண்டும். பிறகு அலுவலக வேலை. மாலையில் பெரியார் அலுவலகம் வருவார்.

'குடியரசு' இதழில் நான் எழுதிய அண்ணாமலைக்கு அரோகரா! என்ற கட்டுரையைப் பெரியார் பெரிதும் பாராட்டினார். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றிய கட்டுரையாகும் அது. அதற்குப் பிறகு பெரியாரைக் கவர்ந்த மற்றொரு கட்டுரை 'தீட்டாயிடுத்து!' என்ற துணைத் தலையங்கமாகும்.

ஒவ்வொரு நாளும் இரவு பெரியார் வீட்டில் உணவு முடிந்ததும், பெரியார் தன் வீட்டு மாடியில் காற்றோட்டமான பகுதியில் எங்களை உட்கார வைத்துக் கொண்டு, சமுதாயச் சீர்திருத்தங்கள், அரசியல் மாற்றங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் நீண்ட நேரம் விளக்கங்கள் அளிப்பார். எங்களுக்குத் தூக்கம் வருவதைத் தெரிந்து கொண்ட பிறகே அவர் தூங்கக் கிளம்புவார்.

ஓராண்டுக் காலம் 'குடியரசு' அலுவலகத்தில் பணியாற்றிப் பெரியாரிடம் கல்வி கற்கும் மாணவனாக இருந்தேன். அதற்குப் பிறகு கோவையிலிருந்து எனக்கொரு அழைப்பு வந்தது. திரைப்படத்திற்கு வசனம் எழுத வேண்டுமென்ற அழைப்புத்தான் அது. அழைப்பை அனுப்பியவர் ஏ.எஸ்.ஏ. சாமி அவர்களாவார். என்னுடைய நண்பர் முத்துக் கிருஷ்ணன் என்பாரின் துணையுடன் கோவை சென்று, திரு. சாமியிடம் விவரங்களை அறிந்தேன். கோவை ஜூபிடர் நிறுவனத்தின் சார்பில் எடுக்கப்பட்ட 'இராஜகுமாரி' என்ற படத்திற்கு நான் வசனம் எழுத வேண்டும் என்று கூறப்பட்டது. பெரியாரிடம் தெரிவித்தேன். அவரும் போய் வா! என்று விடை கொடுத்தார்.

**—'நெஞ்சுக்கு நீதி'**
**என்னும் நூலிலிருந்து**



# தமிழ்த் தென்றல் திரு.வி.க. பிறந்தநாள் விழா

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் 107-வது பிறந்த நாள் விழா, தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் சென்னையில் உள்ள இராணி சீதை மன்றத்தில், 27.8.89 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேராசிரியர் டாக்டர் தமிழண்ணல் அவர்களுக்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதினையும், ரூ.10,000 பணமுடிப்பையும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இவ்விழாவின் துவக்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறைச் செயலாளர் டாக்டர் ஔவை நடராசன் வரவேற்புரையாற்றினார்.

**தலைமையுரை**

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தமது தலைமையுரையில்-

"தமிழாசிரியராக இருந்து, தொழிற் சங்கவாதியாக இருந்து, அரசியல் வாதியாக, சிறந்த எழுத்தாளராக-பேச்சாளராக வளர்ந்த தமிழ்ப்பெரியார் அவர். தந்தை பெரியார் அவர்கள் சென்னைக்கு வந்தால், திரு.வி.க. இல்லத்திலே தங்கும் ஒரு காலமும் இருந்தது. அறிஞர் அண்ணா அவர்களைப் பெரிதும் போற்றிப் புகழ்ந்தவர் திரு.வி.க. பெண்ணடிமை தீர மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் போராடிய நேரத்தில், திரு.வி.க.வும் அதற்காக அரும்பாடு பட்டார்'' என்று திரு.வி.க. அவர்களின் பெருமையைப் போற்றினார்.

விருதினைப் பெற்றுக்கொண்டு பேராசிரியர் டாக்டர். தமிழண்ணல் அவர்கள் ஏற்புரை வழங்கினார்.

**சிறப்புரை**

விருது வழங்கி விழாப் பேருரை நிகழ்த்திய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்புரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

''ஒரு காலத்தில் தமிழ்நாட்டு அரசியல் சரித்திரத்தில், மூன்று பெரும் அரசியல் தலைவர்கள் ஜாதியின் பெயராலேயே நாயக்கர், நாயுடு, முதலியார் என்று அழைக்கப்பட்டார்கள். நாயுடு என்று டாக்டர் வரதராஜுலு அவர்களையும், நாயக்கர் என்று தந்தை பெரியாரையும், முதலியார் என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களையும் குறிப்பிடுவதுண்டு. அந்த ஜாதிப் பெயர்களால் அன்றைக்குப் பிரபலமான தலைவர்கள், அவர்கள் ஆற்றிய தொண்டின் காரணமாக, அந்த ஜாதிகள் ஒழிந்து - பெரியார் என்றும் டாக்டர் வரதராஜுலு என்றும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. என்றும், இன்றைக்கு ஜாதி நீக்கப்பட்ட பெயர்களை முழங்குகின்ற அளவிற்கு வளர்ந்திருக்கின்றோம்.

''பெருமைவாய்ந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள விருதை - எஞ்சி இருக்கின்ற சில விருதுகள், கடந்த காலத்திலே வழங்கப்படாமல் இருந்தவை வழங்கப்பட்டதைப் போல - இந்தப் பிறந்தநாள் விழாவில், இந்த விருதினை யாருக்கு வழங்கலாம் என்று நானும் பேரன்பிற்குரிய கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களும் சிந்தித்த நேரத்தில், டாக்டர் தமிழண்ணல் எங்கள் நினைவுக்கு வந்தார்.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் உள்ள நெற்குப்பை எனும் வளம் பொருந்திய சிற்றூரிலே பிறந்து, தமிழை மேலும் மேலும் வளமாக்குகின்ற பணியிலே ஈடுபட்டிருக்கின்ற தமிழண்ணல் அவர்கள் இங்கே எனக்கும் பேராசிரியருக்கும் ஒரு வேண்டுகோளை வைத்தார். பாலர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை, இருமொழிக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டும் என்றார்.

தமிழறிஞர்கள் கூறுவதை - தமிழை ஆள்பவர்கள் கூறுவதை - தமிழ்நாட்டை ஆள்கின்ற நான் வேண்டுகோளாக எடுத்துக்கொள்ளுவதில்லை; அன்புக் கட்டளையாக ஏற்றுக்கொண்டு, நானும் பேராசிரியரும் அதை எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கு நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம்.

—விழா முடிவில், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு. கு. சிவஞானம் நன்றி கூறினார்.

**– நமது செய்தியாளர்**

# புதிதாகச் சூட்டப்பட்ட புகழ்ப் பெயர்கள்

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்ற பெயர் மாற்றப்பட்டு - 'பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது. (3.4.89)

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமக் கட்டடத்திற்குத் 'தாளமுத்து நடராசன் மாளிகை' என்று பெயரிடப்பட்டது. (14.4.89)

செங்கல்பட்டைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்குச் 'செங்கை அண்ணா மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது. (1.6.89)

மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற ஏற்பாடாக வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவிற்காக ரூ.5000/- வழங்க திருமண உதவித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்திற்கு 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்' எனப் பெயரிடப்பட்டது. (3.6.1989)

தமிழகத்திலுள்ள எல்லா ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கு இளங்கலைப் பட்டப்படிப்பு வரை கல்வி இலவசம் என அரசு அறிவித்தது. இந்த இலவசக் கல்வித் திட்டத்திற்கு 'ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் படிப்புத் திட்டம்' என்று பெயர் வைக்கப்பட்டது. (3.6.89)

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு சுதந்திரப் போராட்ட வீரர் 'சுப்பிரமணிய சிவா மாளிகை' எனப் பெயரிடப்பட்டது. (11.6.89)

திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்குத் 'திண்டுக்கல் - காயிதே மில்லத் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது. (11.6.89)

சென்னையில், கத்திப்பாரா சந்திப்பிலிருந்து அண்ணா நகர் வரையிலான சாலைக்குப் 'பண்டித ஜவஹர்லால் நேரு சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது. (23.6.89)

சென்னையில் - எத்திராஜ் மகளிர் கல்லூரி அமைந்துள்ள சாலைக்குப் பிரபல வழக்கறிஞரும் கல்வியாளருமான எத்திராஜ் அவர்கள் பெயரில் 'எத்திராஜ் சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது. (4.8.89)

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் அமைகின்ற இடத்திற்கு 'மருது பாண்டியர் நகர்' என்றும், அங்கே கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டடத்திற்கு 'பன்னீர் செல்வம் மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. (11.8.89)


இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைகிற இடத்திற்கு 'சேதுபதி நகர்' என்றும், அங்கே உருவாகும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்குச் 'சிங்கார வேலர் மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன. (11.8.89)

காமராசர் மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரிலே அமையவிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அமைகின்ற இடத்திற்கு முன்னாள் முதலமைச்சரான குமாரசாமி ராஜா பெயரில், ''குமாரசாமி ராஜா நகர்'' என்றும், அங்கே கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு 'ஏ.வி.பி. ஆசைத்தம்பி மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

கன்னியாகுமரியில் உள்ள நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்திற்குக் 'கவிமணி தேசிக வினாயகம்' பெயர் சூட்டப்பட்டது. (17.8.89)

சென்னையில், ஸ்ரீ நாராயணகுரு மண்டபம் அமைந்திருக்கும் சாலைக்கு 'நாராயண குரு சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது. (3.9.89)

—தொகுப்பு: ராஜு



*அண்ணாவை அறிஞர் அண்ணா என்று சொல்லக் காரணம் அவரது அறிவின் திறம் தான். அவரது ஆட்சிக் காலத்தில் எந்தத் தமிழனுடைய உரிமையையும் அவர் புறக்கணிக்கவில்லை. அதனாலேயே தமிழர் சமுதாயத்தினுடைய அன்பை இதுவரை யாரும் பெற்றிராத அளவுக்கு அண்ணா பெற்றிருக்கிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருக்கிறது! நாட்டில் எல்லாக் கட்சியாருடனும், எல்லா மக்களுடனும், மிக்க அன்புக்குரியவராகவும் நேசமாகவும் இருந்து வந்தார்.*



# அண்ணா திருத்தசாங்கம்



கவியரசு வைரமுத்து

(நாமம்)

மழலை மொழிக்கிளியே! மன்னவனின் தூய
அழகுப் பெயரை அறிவி-பழச்சாறாய்ச்
சொன்னாலும் தேனின் சுவையொழுகும் அப்பப்பா!
அண்ணா துரையென்றே ஆடு!

(நாடு)

அன்புப் பசுங்கிளியே! ஆடகப்பொன் மன்னவனின்
இன்பமிகு நாட்டை இயம்பிடு-மென்தும்பி
பூவாடத் தேன்வழியாப் பொன்மழைஎன் றஞ்சிவிடும்
சாவாத் தமிழகமே சாற்று!

(நகர்)

சீரெல்லாம் செப்பும் செழுங்கிளியே! மன்னவனின்
ஊரென்ன கொஞ்சம் உரைத்திடு-வேறென்ன!
மாஞ்சோலைப் புள்ளும் மலர்த்தமிழைப் பாடிவரும்
காஞ்சியே அண்ணனூர் காண்!

(ஆறு)

பாடுங் கிளியே! பழத்தமிழாய் நெஞ்சத்தில்
ஆடுந் தலைவனவன் ஆறென்ன?-பாடும்
பழகு தமிழ்படித்த பால்மழலை வேந்தன்
அழகுக் கவிமொழியே ஆறு!

(மலை)

சின்னஞ் சிறுகிளியே! சீதளப் பாட்டிசைத்த
மன்னவன் கொண்ட மலையென்ன?-பொன்னனைய
தாளாப் பெருமை தமிழ்போலச் சேர்ந்தவன்
மாளாப் புகழே மலை.



(ஊர்தி)

சீர்பாடும் கிள்ளாய்! செழுந்தமிழ் வேந்தனவன்
ஊர்தியின் பேரை உரைத்திடு-சீர்நல்கும்
பூந்தமிழைப் போற்றிப் புதுக்கவிகள் பாடிவரும்
தீந்தமிழ் நெஞ்சமவன் தேர்.

(படை)

சந்தக் கிளியே! சரித்திர நாயகனின்
சொந்தப் படையென்ன? சொல்லிவிடு-பந்தைப்போல்
எம்பிப் பகைவர் இடுப்பொடிக்கும் மன்னவனின்
தம்பிப் படையதுவே தான்!

(முரசு)

முத்துக் கிளியே! முரசின் பெயர்சொன்னால்.
சித்தங் களித்திடுவேன் செப்பிடு-வித்தகர்க்கு
நாவால் ஒலியெழுப்பி நாட்டில் படைதிரட்டும்
மூவாத் தமிழே முரசு.

(தார்)

இன்கிளியே! எங்கள் இதயத்தில் பண்ணிசைக்கும்
தண்டமிழ் வேந்தனவன் தாரென்ன?-தென்புலவர்
பாட்டு மலர்தொடுத்த பைந்தமிழாம் மாலையினைச்
சூட்டுவ ராமென்றே சொல்!

(கொடி)

பாட்டு மொழிக்கிளியே! பார்புகழும் வேந்தனவன்
நாட்டுங் கொடியை நவின்றிடு-நாட்டினில்
சுற்றும் பகையைச் சுழன்றாடி ஏற்றிடுவான்
வெற்றிக் கொடிதான் விளம்பு!



# மானுடத்தின் எரிமலை



மானுடத்தின் எரிமலையே! மருட்டும் சாதி
மயக்கத்தைப் போக்கவந்த மருந்தே! எங்கள்
கூனிவிட்ட முதுகினிலே எலும்பைத் தட்டிக்
கோணல்களை நிமிர்த்திவிட்ட கொள்கைக் கோவே!
தேனிடத்தில் மனம்வைத்த ஈக்க ளைப்போல்
திராவிடத்தின் இளைஞர்களை ஆக்கும் தீரா!
கானகத்துத் தமிழ்ச்சிங்கம் நீதான்! உன்றன்
கர்ஜனையைக் கேட்டவரும் சிங்கம் ஆவார்!

அறப்போர்க்குக் கிளம்பியவர் உனக்கு முன்னால்
ஆயிரம்பேர் இருந்தார்கள்! இன்பம் தன்னைத்
துறப்போராய் அவரில்லாக் கார ணத்தால்
தொடரவில்லை போர்ப்பயணம்! தொய்ந்து போனார்!
மறப்போர்க்குக் கிளம்பியவர் உனக்கு முன்னே
மாநிலத்தில் கோடிப்பேர்! பொதுந லத்தை
மறப்போராய் அவரிருந்த தாலே அந்த
மறப்போரை நினைப்போரை எங்கும் காணோம்!

ஓரிரவா ஒருபகலா அறப்போர்! அந்த
உறக்கமற்ற இரவுகளே சாட்சி சொல்லும்!
ஆருனக்குத் துணைவருவார் ஐயா! அந்த
அரும்புரட்சிப் பயணத்தில் துணிந்து சென்றாய்!
காரிருளே வாழ்க்கையென்று தமிழச் சாதி
கருதிவிட்ட வேளையிலே, எங்கிருந்தோ
ஓர்இளைய கதிரவனாய் உதய மானாய்;
ஒளியென்றால் என்னவென்று நாங்கள் கண்டோம்!

சுமாராக ஆறுபத்து வருடம் வாழ்க்கைச்
சுகத்தையெல்லாம் நினைப்பதற்கு நேர மின்றி
அமாவாசை இருளினிலே கிடந்த நாட்டின்
அறியாமை விலகுதற்குப் போர்தொ டுத்தாய்!
இமாலயமே உனைஎதிர்த்த போதும் உச்சி
ஏறி, அதை மிதிக்காமல் விட்ட தில்லை!
சமாதான நடவடிக்கை என்ப துன்றன்
சரித்திரத்தில் கிடையாது! சமரே உண்டு!

வாழைமட்டை தீப்பற்றி எரியும் வண்ணம்
வார்த்தைகளை நீயெறிந்தாய்! அதனால் அன்றோ
கோழைகளும் நரம்புமுறுக் கேறி இன்று
கொடுமைகளின் குரல்வளையை நெறிக்கின் றார்கள்!
ஊழைமட்டும் நம்புங்கள் என்று கத்தும்
உபதேச மனிதர்களின் இருண்ட நெஞ்சத்
தாழைமட்டும் நீதிறக்கா விட்டால் நாட்டில்
தமிழ்ச்சாதி சூனியத்தில் மறைந்தி ருக்கும்!

ஏடெல்லாம் போர்ப்பரணி! எழுது கின்ற
எழுத்தெல்லாம் தீப்பூக்கள்! இளைஞர் உள்ள
வீடெல்லாம் பாசறைகள்! வெப்பம் பொங்கும்.
விழியெல்லாம் வேற்படைகள்! பரந்த இந்த
நாடெல்லாம் போர்க்களமே என்று மாற்றி
நடத்துகிறாய் அறப்போரை! நமனும் அஞ்சும்
ஈடில்லா ஈரோட்டுச் சுடரே! என்றும்
இறப்பில்லாத் தத்துவமே! வாழ்க! வாழ்க!



கவியரசர் இளந்தேவன்




# தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம்

## மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்தார்.

டாக்டர் எம். ஜி. ஆர் மருத்துவப் பல்கலைக் கழகத் தொடக்க விழா 31-8-89 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழாக் கட்டட அரங்கில் நடைபெற்றது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்து விழாப் பேருரை ஆற்றினார்.

மேதகு தமிழக ஆளுநர் மற்றும் பல்கலைக் கழக வேந்தர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகக் கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டிச் சிறப்புரை ஆற்றினார். மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் பொன்முடி அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றுப் பேசினார்.

**மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்புரை ஆற்றும்போது குறிப்பிட்டதாவது:-**

**''முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்**
**தகநக நட்பது நட்பு''**

என்ற நட்பின் இலக்கணத்துடன் இவ்விழா தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்தியாவின் வரலாற்றிலே 1857-ஆம் ஆண்டு மிகவும் முக்கியமானதாகும். அந்த ஆண்டில்தான் முதல் சுதந்திரப் போராட்டம் (Indian Mutiny) என்னும் கிளர்ச்சியின் மூலம் நாடெங்கிலும் பரவலாக நமது மக்கள் அந்நியர் ஆட்சிக்குச் சூளுரை விடுத்தனர். அதே ஆண்டில்தான் சென்னைப் பல்கலைக் கழகமும் நிறுவப்பட்டது. கடந்த 130 ஆண்டுகளுக்கு மேலான காலகட்டத்தில் மேல்நிலைக் கல்வி வசதிகளில் தமிழ்நாட்டில் பெருமளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளோம்''.

''சென்னைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டபோது பழைய மெட்ராஸ் மாகாணம் என்று சொல்லப்பட்ட பிரதேசங்களுக்கு எல்லாம்-அதாவது தமிழ்நாடு மட்டுமல்லாமல் தற்போதைய ஆந்திரம், ஒரிஸ்ஸா, கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய பக்கத்து மாகாணங்களின் பகுதிகளையும் உள்ளிட்ட மிகப் பெரியதொரு மாகாணத்திற்கு ஒரே ஒரு பல்கலைக் கழகம்தான் இருந்தது. கடந்த காலத்தில் கல்லூரிகளின் எண்ணிக்கை பெருகியதன் அடிப்படையில் இப்போது தமிழ்நாட்டில் மட்டும் சென்னை, அண்ணாமலை, மதுரை காமராசர், பாரதிதாசன், பாரதியார் ஆகிய ஐந்து பல்கலைக் கழகங்களில் பல்வேறு துறைகளில் பட்டப் படிப்பு வசதிகள் இருக்கின்றன.''.

''அதே நேரத்தில் ஒவ்வொரு துறையிலும் அறிவு வளர்ச்சி குறிப்பாக, அறிவியல் துறையில் அறிவின் வளர்ச்சி மிகவும் விரைவாக வளர்ந்துள்ளதைக் காண்கிறோம். இந்தப் பின்னணியில்தான் செயல்முறை அறிவியல் துறைகளுக்குத் தனித்தனிப் பல்கலைக் கழகங்களைப் படிப்படியாகத் தமிழ்நாட்டில் நிறுவியுள்ளோம்.

முதலாவதாக, கோவையில் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது. அடுத்து, சென்னையில் அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தினோம். இன்று டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுகிறது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று நாம் தொடங்கவிருக்கும் கால்நடை விஞ்ஞானப் பல்கலைக் கழகமும் அதே நோக்கத்தின் அடிப்படையில்தான் அமையும்.

**இரண்டாம் அட்டை சொல்லும் கட்டுரை**

**சென்னையில் மருத்துவ வல்லுநர்கள்:**

"அமெரிக்காவில் பாஸ்டன் நகரம் மருத்துவ வசதிகளுக்குப் பெயர் பெற்றது. அதே மாதிரியாக இன்று இந்தியாவில் சென்னை நகரமும் பெருமளவிற்குப் பெயர் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது. பல ஆண்டுகளாகவே சென்னையில் பல்வேறு மருத்துவத் துறைகளில் தலைசிறந்த வல்லுநர்கள் இருந்திருக்கிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் பரிசோதனைக்கும் மருத்துவத்திற்கும் பலவித நவீன வசதிகளும் பெருகியுள்ளன. இதன் காரணமாக, தமிழ்நாட்டிலிருந்து மட்டுமின்றி, இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும்கூட சென்னைக்கு நோயாளிகள் மருத்துவத்திற்கு வருகின்றார்கள். இவ்வாறு தனியார் துறைகளில் இருக்கும் வல்லுநர்களிடமும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் தொடர்புகொண்டு அவர்களின் அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்திக்கொண்டு மருத்துவக் கல்வியை வளர்த்திட தமிழ்நாட்டில் நல்ல வாய்ப்புள்ளது.

"தமிழ்நாட்டில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகமும், தன்னாட்சி நிறுவனமான 'தாமரை'யும் தோளோடு தோளாக ஒத்துழைத்து தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வியையும், மருத்துவ ஆராய்ச்சியையும் கணிசமாக மேம்படுத்த செயல்படுவார்கள் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டார். உரையின் இறுதியில்


**"இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண**
**நன்னயம் செய்து விடல்"**

என்னும் குறளோடு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்." என்றார்.

**மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையுரை ஆற்றும்போது:-**

"மேலை நாடுகளில் 400 பேருக்கு ஒரு மருத்துவர் வீதம் மருத்துவர்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் 5,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற வீதத்தில்தான் இருக்கிறார்கள்.

"மேலும், படித்து மருத்துவர் ஆகிறவர்களும் கிராமப்புறங்களில் பணியாற்ற முன்வருவதில்லை. தமிழ்நாட்டில் 80 சதவீத மருத்துவர்கள் நகரங்களிலேயே வேலை பார்க்க விரும்புகிறார்கள். நகரங்களில் 620 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற வீதத்திலும் கிராமப்புறங்களில் 5,000 பேருக்கு ஒரு மருத்துவர் என்ற வீதத்திலும் மருத்துவர்கள் இருக்கிறார்கள். மருத்துவர்கள் மேலும் மேலும் படித்துவிட்டு வந்தாலும்,



நகரப் பகுதிகளிலேயே வேலை பார்ப்பார்கள்.

"கிராமப்புறங்களிலோ, பாமர மக்கள் நோய் வந்தால், மருத்துவமனைக்குச் செல்லவேண்டும் என்ற ஆரம்ப அறிவுகூட இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வி அறிவு புகட்டி, மருத்துவ வசதிகளை அவர்களும் பெறும்படி செய்யவேண்டும். மருத்துவர்கள் சேவையோடு சுகாதார உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்து நோய் வராமல் தடுப்பதற்கான பணிகளில் சுகாதார உதவியாளர்களை ஈடுபடுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

டாக்டர் எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தினைத் தொடங்கி வைத்துப் பேசிய மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் குறிப்பிட்டதாவது-

"இந்தியாவிலேயே இரண்டாவது மருத்துவப் பல்கலைக் கழகமாக டாக்டர் எம.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் அமைகிறது. மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிகளுக்கு இது பெரிதும் பயன்படப் போகிறது.

"தமிழ்நாடு மருத்துவத் துறையில் நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டது. 1835-ஆம் ஆண்டிலேயே சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. 1000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பெறக்கூடிய 8 மருத்துவக் கல்லூரிகள் இந்த எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். மருத்துவக் கல்வியில் புதிய அமைப்புகளை ஏற்படுத்திக் கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தும். மக்களுக்குப் பயன்படக் கூடிய மருத்துவத் தேவைகள் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இந்தப் பல்கலைக் கழகம் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.


**மக்களுக்குச் சேவை செய்யும் பல்கலைக் கழகம்:**

"மருத்துவப் பல்கலைக் கழகங்கள் மருத்துவப் பட்டதாரிகளையும் வல்லுநர்களையும் உருவாக்கக்கூடியவை மட்டுமல்ல, மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மை கொண்டவர்களையும் உருவாக்குபவை. ஒவ்வொரு ஆண்டும் 13,000 மருத்துவப் பட்டதாரிகள் உருவாக்கப்படுகின்றனர், அதே சமயத்தில் தேவைக்குக் குறைவாக 8,000 செவிலியர்களைத்தான் நம்மால் உருவாக்க முடிகிறது என்பது வருந்தத்தக்கது. இந்த மருத்துவப் பல்கலைக் கழகம் நாட்டுபுற மக்களுக்குச் செலவற்ற மருத்துவ வசதி அளிப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்".

விழா முடிவில் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் நன்றி கூறினார்.

**—நமது செய்தியாளர்**

(இரண்டாம் அட்டைப் புகைப்படம் உதவி: 'இந்து' நாளிதழ், சென்னை.)



# அவருக்கு அவரேதான் நிகர்!

—மாண்புமிகு கல்வி அமைச்சர்
**பேராசிரியர் க. அன்பழகன்**

எளிமையான தோற்றம்; விரைவான நடை; புன் முறுவல் பூத்த முகம். சிறிது குள்ளமான உருவம், என்ற வர்ணனைக்குரியவர் ஒருவர் இன்று தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற்று விட்டார். அவர்தான் அறிஞர் அண்ணா.

அவரது கட்சியினருக்கோ-தளபதி; கூட்டுத் தோழர்களுக்கோ-அண்ணன்; தலைவருக்கோ-அன்பன்; மாற்றுக் கட்சியினருக்கோ-அறிவுச் சுடர்; இலக்கியத்திற்கோ-புத்தொளி.

அவர் இரவிலே விடியற்காலை வரையில் கண் விழித்திருப்பதையும், காலை எட்டு மணி வரையில் உறங்குவதையும், பிற்பகலிலே கண்ணயர்வதையும் காண நேரும் பலரும், இவர் ஏன் இயற்கைக்கு விரோதமாக இரவிலே விழித்துப் பகலிலே உறங்க வேண்டும் என்று எண்ணுவது இயற்கை. மேலும், வெளியூர்களுக்குப் பேச அழைத்து அவர் வரவில்லையென்றே கூறினாலும், வர இயலாமற் போனாலும், உடனே 'சோம்பேறி' என்ற பட்டமளிக்கத் தவறுவதில்லை தோழர்கள். அவரது 'உழைப்பின்' திறத்தை உணராததாலேயே, பலர் இவ்வித முடிவுக்கு வந்து விடுகிறார்கள்.

சிந்தனையாளர்களுக்கு இரவிலே நெடுநேரம் வரையில் உறக்கம் வருவதில்லை. நம் நாடு வெப்ப நாடாகையால், பகலிலே அறிவு வேலை எதுவாயினும் இரவிலே செய்வதைவிடச் சிறிது கடினமேயாகும். இன்னும் பலப்பல நண்பர்களும், பொதுமக்கள் தொடர்பும் கொண்ட ஒருவரது வாழ்க்கையில் பகல் நேரம் பலரால் பங்கிட்டுக் கொள்ளப்படுவதும், இரவு மட்டுமே தனித்துத் தமது பணியைச் செய்வதற்கு ஏற்றதாக அமைவதும் அனைவரும் அறிந்தது.

எண்ணங்களிலேயே மிதந்து கொண்டிருக்கும் அண்ணா, அன்றாட நடைமுறை நிகழ்ச்சிகளிலே அதிக நினைவு செலுத்துவதில்லை. நாள்தோறும் குளிப்பதோ, வேளைப்படி உண்பதோ கூட அவரால் முடிவதில்லை.

அவரது அகன்ற நெற்றியும், கூர்ந்த நாசியும், பரந்த கண்களும், அவரைக் காணும்போதே அவரது அறிவுத் திறனை நன்கு புலனாக்குகின்றன. அவர் உரையாடத் தொடங்கினாலோ, ஒவ்வொரு சொல்லும் முத்து உதிர்த்ததென ஒளிவிட்டுச் சிறக்கும். பிறருக்குப் புலப்படாமல், குற்றமுள்ள நெஞ்சை மட்டும் குத்திக் காட்டும் வகையிலே, ஒவ்வொரு சொல்லும் இரு பொருள் ஏந்தி நிற்கும். அவரது பேச்சு, எப்படித் தடைபடாது முன்பின் முரணின்றி, உணர்ச்சி வெள்ளமாகக் கொட்டுகிறதோ, அப்படியேதான் அவரது எழுத்தும் தெளிவு பெற்று, வலிவு கொண்டு திகழ்கிறது என்பதோடு, ஒருமுறை எழுதியதை மறுமுறை மாற்றவோ திருத்தவோ தேவையில்லாத அளவுக்கு, அவரது சிந்தனை ஆற்றல் சிறப்படைந்துள்ளது. அப்படி, பல கட்டுரைகள் ஒரே இரவிலேயே மலரும்.

கட்டாய இந்தி நுழைக்கப்படுவதை எதிர்த்து நடத்திய போரில், ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணர்ச்சியூட்டிப் பலப்பல இளைஞர்களைச் சிறை புகச் செய்து, தானும் சிறைப்பட்டு, இந்தி எதிர்ப்பு இயக்கம் வெற்றி பெறக் காரணமானார்.

பெரியாரின் பணியைப் புரிந்து கொள்ள மறுத்தவர்களையும், ஒப்புக் கொள்ளச் செய்த பெருமை அவருக்கே உரியதாம்.

அவர் எதையும் ஆழ்ந்து சிந்தித்தே ஏற்றுக் கொள்வார். சரியென்றுபட்டுவிட்டதை மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்யவும் இறுதி வரையிலே முயல்வார்.

அவருக்கு உதாரணமாக ஒருவரைக் குறிப்பிட எண்ணினேன். பேச்சுக்குச் சிசரோவும், எட்மண்ட் பார்க்கும் வந்தனர்; உரையாடலுக்கோ, சார்லஸ் லாம்பும், பெர்னாட்ஷாவும், பெரியார் இராமசாமியும் புறப்பட்டனர்; கதைக்கோ, வெல்ஸும், மாப்பஸானும் தோன்றினர். சீர்திருத்தத்திற்கோ ரூசோவும், இங்கர்சாலும் வந்தனர்; நாடகத்திற்கோ ஸோபாக்கிளிஸும், ஷேக்ஸ்பியரும் காட்சியளித்தனர்.

இவ்வெல்லாத் துறையிலும் திறம் படைத்த அறிஞர் அண்ணா அவர்களுடன் யாரை ஒப்பிடுவது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

உதாரணம் ஏன்? அவருக்கு அவரேதான் நிகர்!

(1948-இல் வெளிவந்த 'அறிஞர் அண்ணாதுரை' என்ற நூலிலிருந்து...)

# எண்ண அலைகள்

## கி.வீரமணி

அதிசயத் தலைவர் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி எழுத வேண்டும் என்று அமரும் போது எத்தனை எத்தனையோ எண்ண அலைகள் கிளம்புகின்றன!

பொது வாழ்க்கையைக் காங்கிரஸ் கட்சியிலிருந்து துவக்கிய தந்தை பெரியார் அவர்கள் அதில் எவ்வளவு முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார் என்றால், இவரது 'அன்பார்ந்த எதிரி'யான திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் 1925-இல் இவருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். ஒரு கார்டு அதில் எவ்வளவு செய்திகள் அடங்கியிருக்கின்றனவென்று பாருங்கள்.

வ.வெ.சு அய்யரின் குருகுல நிகழ்ச்சி, தீண்டாமை ஒழிப்பில் காந்தியாருடன் ஏற்பட்ட சிலகருத்து வேறுபாடுகள் ஆகிய இவைகள் காரணமாக மாறுபட்ட உணர்வுடன் பெரியார் அவர்கள் இருப்பதைக் கண்டு இராஜாஜி அவர்கள் பெரியார் அவர்களது தொண்டின் தனி முக்கியத் துவத்தைச் சரிவர உணர்ந்துள்ளவர் என்ற காரணத்தால் அவரை எவ்வளவு வற்புறுத்துகிறார் பாருங்கள்!

''எந்த விஷயம் எப்படி இருந்த போதிலும் நாம் இன்னும் ஒரு வருஷம் மகாத்மா ஆணைப்படி வேலை செய்து கொண்டு வரவேண்டும். தாங்கள் எல்லா விஷயங்களையும் மறந்தோ, ஒருபுறம் வைத்தோ எப்படியாவது இது வரையில் நடத்தின மாதிரியே பிடிவாதமாய்-எல்லா காரியத்திலும் நாம் ஒரே கட்டாய்- மகாத்மா மனதிற்கு நோவு உண்டாகாதபடி அவர் திட்டத்தை நடத்திக் கொடுக்க வேண்டும்.''

தேசீய இயக்கத்தில் மிகவும் தீவிரமாக எப்படி இருந்தார் தந்தை பெரியார் என்பதற்கு இதைவிடச் சான்று வேறு வேண்டுமா?

அன்னை நாகம்மையாரைத் தன் கொள்கை வயப்படுத்துவதானாலும், மதுவிலக்கு, கதர், கோர்ட்டுக்களை பகிஷ்கரித்தல் ஆகிய திட்டங்கள் ஆனாலும் அவைகளைத் தனது வீட்டிலிருந்தே தொடங்கி பொது வாழ்க்கைக்குத் தனி இலக்கணம் வகுத்தவர் அவர்!

'ஆயிரக்கணக்கான தென்னை மரங்களை-தனது தோட்டத்தில் உள்ளதை வெட்டி வீழ்த்தியது முதல், தனக்குச் சேர வேண்டிய கடன் பத்திரங்களை 'மேடோவர்' கூடக் கொடுக்காமல் விட்டெறிந்ததுவரை, கதர் மூட்டைகளைத் தனது தோளில் தூக்கித் கொண்டு சந்தைக்குச் சந்தை விற்றது முதல், செயற்பாடு தனது இல்லத்திலிருந்து தொடர்கிறது என்ற நெறிமுறையை அவர் உருவாக்கிக் கொண்டவர். அதன் இரகசியம் அவர் மனநிறைவுடன் தான் கொண்ட மனித சமுதாயப்பணியில் கடுமையாக ஈடுபட்டு உழைத்ததுதான்.

கருத்து வேறுபாடு காரணமானாலும், சில நேரங்களில் கடுமையாக விமர்சனம் செய்தாலும் தனிப்பட்ட முறையில் அவர்கள் ஒவ்வொருவருடன் பழகும் பான்மை ஒப்புவமை இல்லாத ஒன்றாகும்! அது மட்டுமல்ல.


சுயமரியாதை பற்றி இந்த நாட்டு மக்களுக்குச் சொல்லிக் கொடுத்த அந்த மாபெரும் தலைவர் நமது சுயமரியாதை பிறருக்கு மரியாதை காட்டுவதில்தான் அடங்கியிருக்கிறது என்பதை முழுமையாக உணர்ந்து பின்பற்றியவர் ஆவார்.

பொது அவையில் கட்டுப்பாட்டுடன் செயலாற்றி மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழ்ந்தார்கள்!

பெரியாரை எதிரிகளாக எண்ணிடுவோர்கூட அவர்களது 'நயத்தக்க நாகரிகம்' கண்டு தங்கள் கருத்துக்களை மாற்றிக் கொண்டவர்கள் உண்டு.


சிலருக்கு வெள்ளை உடை - கறுப்பு மனம். தந்தை பெரியாருக்கோ, கறுப்பு உடை - வெள்ளை மனம்.

அவர்கள் எளிமைக்கோர் எடுத்துக்காட்டாக வாழ்நாள் முழுவதும் விளங்கியவர். ஒரு சாதாரண சட்டை, 5 முழக் கைலியாக்கப்பட்ட வேட்டி, சமுதாய அழுக்கைப் போக்க அதிக அக்-



# எங்கள் அண்ணா வாழ்க!

-கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம்



எழுத்தாலும் பேச்சாலும் நாட கத்தில்
இணையில்லா நடிப்பாலும், திரைப் படத்தில்
அழுத்தமிகும் சமதருமக் கதைக ளாலும்
அடுக்குமொழிச் சீர்திருத்த வசனத் தாலும்,
எழுச்சியுற ஏழையரின் உணர்வைத் தூண்டி
இயக்கத்தை எல்லாரும் ஆத ரித்து
முழக்கமிடும் முழுவெற்றித் தமிழர் ஆட்சி
முளைத்திடவும் செய்தஎங்கள் அண்ணா வாழ்க!

கறை காட்டிய அவர்கள் தனது துணி அழுக்கைப் பற்றிக் கவலைப்படுவதே கிடையாது.

சிக்கனத்தையும் எளிமையையும் கருதி பல நேரங்களில் சாலை ஓரங்களில் நமது நாட்டுத் தாய்மார்கள் இட்டிலி சுட்டு விற்பதை வாங்கி வரச் சொல்லி அதைத் தனது சக தோழர்களுக்குக் கொடுத்துத் தானும் உண்டு பிரச்சாரத் திற்குச் செல்லுபவர் தந்தை பெரியார் அவர்கள்!

தன்னிடத்தில் பணியாற்றக்கூடிய வர்களுக்குக்கூட மரியாதை கொடுத்து நடத்துபவர் தந்தை பெரியார் அவர்கள்.

காலந்தவறாமை, குறித்த காலத்தில் எதையும் செய்தல் (Punctuality) என்பதைத்தந்தை பெரியார் அவர்கள் மிகவும் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர் ஆவார். ஒப்புக்கொண்ட எந்த நிகழ்ச் சிக்கும் முன்னதாகவே சென்று விடு வார்கள். ஒப்புக்கொண்ட நிகழ்ச்சியை ரத்துச் செய்வது என்பது அவர்களுக்கு அறவே பிடிக்காத ஒன்று.

'கடிகாரம் ஓடுமுன் ஓடு' என்று பள்ளிப் பிள்ளைகளைப் பார்த்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடினார். தந்தை பெரியார் அவர்களோ அதைப்பொதுத் தொண் டர்கள் அனைவருக்கும் போதித்துத் தானும் அதை விடாப்பிடியாகக் கடைப்பிடித்தும் வந்தார்கள்! தனது வாழ்க்கை நெறிகளிலே ஒன்றாக அதனை ஆக்கிக்கொண்டார்கள்.

மரியாதை, மதிப்பு என்பதில் அவர்கள் பிறருக்குத் தரும் பாங்கே தனிப்பாங்கு! இயக்கத்தில் அறிமுக மான முக்கியத் தொண்டர்கள் தவிர அனைவரிடத்திலும் அவர்கள் எழுந்து வரவேற்பதும், எழுந்து வழியனுப்பும் பேரன்பும், பண்பும் எவரையும் அதிர்ச் சியில் ஆழ்த்தக்கூடியதொன்றாகும்.

அய்யா அவர்கள் எப்போதும் சதா படித்துக்கொண்டே இருப்பார்கள்! அப்படியே உழைப்பார்கள். சில செய்தித் தாள்களைப் படிப்பதற்கு லென்சுகளையும், 'டார்ச்லைட்' டினை யும்கூடப் பயன்படுத்தி அய்யா அவர்கள் படித்துக்கொண்டே இருப் பார்கள்!

பழைய பதிப்புக்களான வால்மீகி இராமாயணம், புராணங்கள், தமிழ்ப் பேரகராதி, அபிதான சிந்தாமணி போன்றவற்றை அடிக்கடி படித்து குறிப்புக்களைக் கோடிட்டுக் குறித்து வைப்பார்கள். சுட்டிக்காட்டவேண்டிய சில முக்கியப்பகுதிகளின் பக்க எண் களை (Page Numbers) முக்கிய அட்டை யின் இறுதியில் குறித்து வைப்பார்கள்!

செய்தித் தாள்களில் வரும் சில முக்கியக்குறிப்புக்களை அடிக்கடி அவர் களது 'சிட்டை, பேரேடு, குறிப்பு' ஆகிய 'டைரி'யில் கத்தரித்து தானே ஒட்டி வைத்து கூட்டங்களில் படித்துக் காண்பிப்பார்கள்.

நினைவு வன்மையில் அவர்களுக்கு ஈடு அவர்கள்தான். பழைய கால வரலாறு, அரசியல், குடும்ப நண்பர் களின் - குடும்ப உறுப்பினர்களின் விவரங்கள் ஆகியவைகளை உள் ளடக்கி அவர் கம்ப்யூட்டரைப் போல் அக்குடும்ப உறுப்பினர்கள், அவர்கள் தாத்தா, கொள்ளு தாத்தா வரை நீட்டிக் கொண்டே போவது அய்யா அவர்களது வாடிக்கையாகும்.

இப்படி எத்தனை எத்தனையோ எண்ண அலைகள் அய்யா அவர்களது பிறந்த நாளில் அலைமோதுகின்றன.

# அய்யா - அண்ணா
## சில நினைவுகள்

— இராம. சுப்பையா



எனக்குக் கல்யாணம் நடக்கிறப்போ, பெரியார் சுயமரியாதைக் கழகம் ஆரம்பிச்சி ரெண்டு, மூணு வருஷம் இருக்கும். அவருக்கு நாடு பூரா எதிர்ப்பு இருந்த நேரம். எந்த ஊர்லே அவரு கூட்டத்துக்குப் போனாலும், கல்லெறி, சோடாபாட்டில் வீச்சு இப்பிடித்தான். அப்போ, சொ. முருகப்பா, அவரைக் காரைக்குடிக்குக் கூப்பிட்டு ஒரு கூட்டம் போட்டாரு. என்னதான் பேசறார் கேக்கலாம்னு கூட்டத்துக்கு வந்திருந்த எல்லாருக்கும் ஆர்வம். நானும் ரொம்ப ஆர்வமா நின்னுக்கிட்டிருந்தேன். அன்னிக்கு அவரு பேசின விஷயங்கள் எல்லாம் என்மனசில பதிஞ்சு போயி, யோசிக்க வச்சிச்சு. உடனடியா சுயமரியாதைக் கழகத்தில் உறுப்பினராகச் சேந்துட்டேன். அன்னியிலேயிருந்துதான், என்னோட தீவிர அரசியல் ஆரம்பமாச்சு!

### "அசலை மறக்காம அனுப்பிடனும்"

"பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம்"னு பெரியார் ஒரு பதிப்பகம் வச்சிருந்தார். எல்லாம் கட்சிப் புத்தகங்கள்; ஒரு நேரத்தில், அந்தப் பதிப்பகத்தைக் கலைக்க வேண்டி வந்திடுச்சு. அதுக்கு முன்னாடி, அந்தப் பதிப்புக் கழகம் சார்பா வெளியான புத்தகங்கள் எல்லாத்தையும் எப்பிடியும் வித்திடனும்னு ஐயா முடிவு பண்ணினார்.

என்னையும், புதுக்கோட்டை இராம. சின்னையாவையும் கூப்பிட்டு, அந்தப் பொறுப்பை ஒப்படைத்தார். எப்படி விக்கணும்கிற ஐடியாவையும் அவரே குடுத்தாரு.

அப்போவெல்லாம் ரயில்வேயிலே ஒரு வசதி உண்டு. 12.50 ரூபாய்க்கு ஒரு டிக்கட் எடுத்துக்கிட்டா, 15 நாட்களுக்கு, தமிழ்நாட்டுக்குள்ளே எங்கே வேணும்னாலும், நம்ம இஷ்டப்படி போகலாம். எது வரைக்கும் அந்த டிக்கெட் செல்லும்கிறதுக்கு, டிக்கெட்டுக்குப் பின்னாலேயே, ஒரு 'மேப்'பும் இருக்கும் 'Go as you please' டிக்கெட்ன்னு அதைச் சொல்லுவோம். அதுலே ஆளுக்கொரு டிக்கெட் எடுத்துக்கிட்டு, புத்தகக் கட்டுகளையும் தூக்கிக்கிட்டு, ஊர் ஊராப் போய் விக்கனும்கிறதுதான் திட்டம். இந்தத் திட்டம் எங்க இரண்டு பேருக்குமே பிடிச்சிருந்தது.



ரெண்டு பேரும் ஆளுக்கொரு டிக்கெட்டை வாங்கிட்டுப் பயணமாகும் போது, ஐயா சொன்னது இன்னும் அப்பிடியே ஞாபகமிருக்கு. "இந்தாங்கப்பா! புத்தகங்களை வித்திட்டு, அசலை மறக்காம அனுப்பிடனும்"னு சொன்னார். அதாவது புத்தகத்தோட விலையில அசல் எவ்வளவுன்னு சொல்லிடுவார். அந்த அசலை அனுப்பிவிட்டு, மீதமுள்ள தொகையை நாங்க செலவுக்கு வச்சுக்கலாம்.

அசல் திரும்பிப் போனாத்தானே, மறுபடியும் மறுபடியும் புத்தகம் வெளியிட முடியும்? ஆக, யாருக்கும் நஷ்டம் வரக்கூடாது; புத்தகமும் எல்லா ஊர்லே இருக்கிற மக்களுக்கும் போய்ச் சேரணும்.

அந்தப் பதினைந்து நாள்லே, நாங்க இரண்டு பேரும் போகாத ஊரு கிடையாது. பட்டி தொட்டியெல்லாம் போய்ப் புத்தகங்களை விற்பனை செய்தோம். அப்பப்போ ஐயா சொன்ன மாதிரியே அசல் தொகையை அவருக்கு அனுப்பிடுவோம். இப்பிடியே தமிழ்நாடு பூரா சுத்தி, புத்தகங்களை வித்தபோது, எனக்கும் திரு. சின்னையாவுக்கும் எற்பட்ட சுவையான அனுபவங்களை என்னிக்கும் மறக்க முடியாது.

## அண்ணாவோட குறும்பும் புத்திசாலித்தனமும்

1940-மத்தியிலே, சேலத்தில் நடந்த மாநாட்டிலே, "திராவிடர் கழக'த்தைப் பெரியார் தோற்றுவிச்சாரு. அதையொட்டி, 1945-இல், காரைக்குடியில "திராவிடர் கழக மாநாடு" கூட்டினோம். பழைய தென் இந்திய நல உரிமைச் சங்கம், சுய மரியாதை இயக்கம் எல்லாம் மாறி, புதிய பேர்லே, புதுத்தெம்போட திராவிடர் இயக்கம் மக்களிடம் வந்தது. காரைக்குடி மாநாட்டுக்கு வரக் கூடாதுன்னும், மாநாட்டையே நடத்தக் கூடாதுன்னும், மீறி நடத்தினா இரத்தக் களறி வரும்னும், பெரியாருக்கு தந்தி வந்தது. இந்த மாதிரித் தந்தி போக்கு வரத்தெல்லாம், பெரியாருக்குப் புது உற்சாகத்தைக் கொடுத்திடும். வரா தேன்னு எவனாவது பயமுறுத்தினா, அதை வரவேற்புப் பத்திரமா நினைக்கிறவர் அவர்.

மாநாட்டுக்கு முன்னாடியே இன்னொருகூட்டம் போடச் சொல்லி ஐயா கிட்டேயிருந்து தகவல் வந்தது. திருச்சி மாநில மாநாட்டுலே, எடுத்த முடிவுப் படி, மாவட்டந்தோறும் நடத்துறதா இருந்த மாநாட்டுக்கு முன்னாடியே கூட்டம் போடச் சொன்னவுடனே, ஏதோ விஷயம் இருக்குன்னு தெரிஞ்சு போச்சு.

கூட்டத்திலே கலந்துகொள்ள, பெரியார், அண்ணா ரெண்டு பேரும் வந்தாங்க.

அண்ணாவோட, அதுக்குக் கொஞ்சம் முன்னாடிதான் எனக்குத் தொடர்பு வந்தது. அவரோட அற்புதமான பேச்சு யாரையும் ஈர்க்கும். அவரைக் காரைக்குடிக்குக் கூப்பிட்டு, கூட்டம் போட்டதும், அதுவும் பெரியார் பேசற கூட்டமாவே அமைஞ்சதும் எனக்கு மகிழ்ச்சியா இருந்தது. அரசியலுக்கு வந்ததுக்கப்புறம், காரைக்குடியில் அண்ணா பேசின முதல் கூட்டம் அதுதான்னு நெனக்கிறேன். அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செஞ்சிருந்த முறையையும், அங்கே நான் ஓடியாடி வேலை செய்த விதத்தையும் பார்த்த அண்ணா என்கிட்டே ரொம்பப் பிரியமாயிட்டார்.

அன்னிக்கு நடந்த கூட்டத்திலே, அண்ணா, பெரியாருக்கு முன்னாடி, திருவொற்றியூர் சண்முகம் பேசிக் கிட்டிருக்கிறப்போ, அங்கங்கே சில பேர் கலகத்தை ஆரம்பிச்சாங்க. கலகம் செய்யக் கூடும்கிற சந்தேகத்தில், நாங்க தயாராகவே இருந்தோம். கூட்டத்திலே எங்கேயாவது சத்தம் வந்தால், சத்தம் வரஇடத்துக்கு, நானும் தோழர்களும் போய் நின்னுக்குவோம். சத்தம் அடங்கிடும்.

ஐயா பேச ஆரம்பிச்சதும், ஒரு ஆள் ஐயாகிட்டவந்து, ஒரு காகிதத்தைக் கொடுத்திட்டு, வேகமாகக் கீழே இறங்கிப் போயிட்டான்.

அப்போவெல்லாம், ஐயா பேசற கூட்டங்கள்லே, கேள்வி பதில் நிகழ்ச்சி கண்டிப்பா இருக்கும். எந்தக் கஷ்டமான கேள்விக்கும், அப்பவே ஐயா அருமையா பதில் சொல்லுவார். அந்தக் கேள்வி-பதில்களை யாராவது தொகுத்திருந்தா, இன்னிக்கு அதை ஒரு அருமையான புத்தகமாக வெளியிடலாம். அவ்வளவு சுவையா இருக்கும்.

அன்னிக்குக் காரைக்குடிக் கூட்டத்திலேயும், அதுமாதிரி கேள்வியைத் தான், ஐயாகிட்டே கொடுக்கிறாங் கன்னு நெனச்சுகிட்டு, நாங்க எல்லாம் பேசாம இருந்திட்டோம். வழக்கமா, ஐயா முதல்லே 'மைக்'லே அந்தக் கேள்வியைப் படிச்சிட்டு, அப்புறம் தன்னோட பதிலைச் சொல்வார். ஆனா அன்னிக்கு, அந்தத் தாளைப் படிச்சிட்டு, ஒன்னும் சொல்லாம, பக்கத்திலேயிருந்த அண்ணாகிட்ட அதைக் கொடுத்திட்டார். அண்ணா படிச்சுப் பார்த்ததும் லேசா—சிரிச்சுக் கிட்டே, மைக்குக்கு வந்து, பொது மக்களைப் பாத்து, "இங்கே யாரோ, ஒரு தாள்லே தன்னோட பேரை மட்டும் எழுதிட்டு, கேள்வியை எழுத மறந்துட்டாரு. ஆகையினாலே அந்தத் தாளை நம்ம இராம. சுப்பையாவிடம் கொடுக்கிறேன். அவர் உங்களிடம் அதைக் கொண்டு வருவார். அது யாரோட பேரோ, அவுங்க மேடைக்கு வந்து, மீண்டும் தங்கள் கேள்வியைக் கொடுக்கலாம்னு சொல்லிட்டு, அதை எங்கிட்ட தந்தார். அந்தத் தாள்லே, "நான் ஒரு முட்டாள்"னு எழுதியிருந்தது.

இதைக் கேள்வின்னு நெனச்சுகிட்டுப் பெரியார் மைக்லே படிப் பார்ங்கிற நோக்கத்திலே, யார் அதைக் கொண்டு வந்து குடுத்தானோ, அவனே அன்னிக்கு மிகப் பெரிய முட்டாளாயிட்டான்.

அண்ணாவோட குறும்பும், புத்திசாலித்தனமும் ஐயாவையே ஆச்சரியப் பட வச்சிடுச்சு!

## திருக்குறள் மாநாடு

சென்னையிலே திருக்குறள் மாநாடு ஒன்னு கூட்டினாங்க. திரு. வி.க. கலந்துகொண்ட மாநாடு அது. மாநாட்டுக்கு வந்திருந்த கூட்டத்தைப் பார்த்துட்டு, 'அரசியல் மாநாடு கூட இல்லை; திருக்குறள் மாநாட்டுக்கா இவ்வளவு பெரிய கூட்டம்னு' திரு. வி.க.வே அசந்து போயிட்டார்.

★ மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறுவயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

—தந்தை பெரியார்.

★ நமக்குள்ள பொறுப்புகளை உணராமல், கடமைகளை நிறைவேற்றாமல், உரிமைகளைப்பற்றி மட்டும் உரத்த குரலில் வலியுறுத்திக் கொண்டிருந்தால், அந்த நிலை நம்மைப் பிணக்கிலும், ஏமாற்றத்திலும்தான் கொண்டுபோய் விடும்.

-பேரறிஞர் அண்ணா

கூட்டத்தில் பேசும்போது திரு. வி.க., ''திருக்குறள் மாநாடு என்று ஒன்று கூட்டி, நுழைவுக் கட்டணமும் ஏற்படுத்தி, வாயில் காப்போனையும் நிறுத்திவைத்த பிறகும், இத்தனை ஆயிரம் ஆயிரம் மக்கள் கூடியிருக்கிறார்களென்றால், எனது கெழுதகை நண்பர் பெரியாரும், அறிஞர் அண்ணாவும் கூட்டியதாலல்லவா? என்னே வியப்பு! நாட்டிலே பெரியாருக்கும் அண்ணாவுக்கும் எவ்வளவு பெரிய பேராற்றலாய் மக்கள் அமைந்து கிடக்கிறார்கள்'' என்று ஆச்சரியப்பட்டுப் பேசினார்.

**மரியாதையையும் பாசத்தையும் விட்டுட்டுப் பிரிஞ்சுபோக**

அனைவரும் ஆச்சரியப்படுகிற அளவுக்கு, பெரிய சக்தியாய் விளங்கிய பெரியாரும், அண்ணாவும், பிரிய வேண்டிய கட்டாயம் வந்தது.

அப்போ, இயக்கத்திலிருந்த என்னை மாதிரி ஆயிரக்கணக்கான தொண்டர்களுக்கு, ஒரே கலக்கமாகவும், குழப்பமாகவும் இருந்தது. நானெல்லாம், ஐயாவை விட்டு வெளியே வரமாட்டேன்னுதான் எல்லோரும் நெனைச்சாங்க. எனக்கும், ஐயாவைப் பிரியறது சாதாரண விஷயமா இல்லை. அவர் கொடுத்த தைரியமும், அவர் கொடுத்த அரசியல் சிந்தனைகளும் தானே என்னை மனுசனாக்கியவைகள்! ஆகையினாலே, ஐயா மேலே எனக்கிருந்த மரியாதையையும், பாசத்தையும் விட்டுட்டுப் பிரிஞ்சு போக, நான் என் மனசை ரொம்பத் தேத்திக்கிட வேண்டியிருந்தது.

அண்ணா சொன்ன விஷயங்கள் நியாயமாகப்பட்டதாலே, கடைசியா, எல்லாத்தையும் மறந்திட்டு, அண்ணா கூட, கட்சியை விட்டு வெளியேறிட்டேன்.

**தாம்பாளம் தானாவா விழுந்தது**

சிவகெங்கைத் தோழர்கள் ஒரு முறை, ''சிவகெங்கை இராமச்சந்திரனார் பூங்காவை அண்ணாதான் திறந்து வைக்கணும்னு பிடிவாதமாகச் சொல்லிட்டாங்க. நானும், அண்ணா கிட்டே பலமுறை தேதி வாங்க முயற்சி செய்தேன். அவருக்கிருந்த வேலைகளிலே, அவராலே தேதி குடுக்க முடியலை.

ஒருமுறை சோழவந்தானுக்கு அண்ணா தேதி குடுத்திருக்கார்னு தெரிஞ்சுக்கிட்டு, அண்ணாவுக்கு 'டிரங்



இராம. சுப்பையா

கால்' போட்டுப் பேசினேன். ''சோழவந்தானுக்கு வரும்போதே, சிவகெங்கைக்கும் வந்திட்டுப் போகனும்ன்னு கேட்டுக்கிட்டேன். 'சிவகெங்கை, சோழவந்தானுக்குப் பக்கமா''ன்னு கேட்டார். 'ஆமா, குறுக்கு வழியிலே வந்தா, ரொம்பப் பக்கந்தான்'ன்னு ஒரு பொய்யைச் சொல்லிட்டேன். அண்ணாவும் சம்மதிச்சுட்டாரு. 'சோழவந்தானுக்கு அடுத்தநாள் சிவகெங்கை'ன்னு சொல்லிட்டார். எனக்கும், நண்பர்களுக்கும் அளவு கடந்த மகிழ்ச்சி. 'ஆனா, இப்பிடி ஒரு பொய் சொல்லீட்டிங்களே''ன்னு நண்பர்கள் பயந்தாங்க. உண்மை தெரிஞ்சாலும் அண்ணா இதுக்கெல்லாம் கோபிக்க மாட்டாருன்னு சொன்னேன்.

சோழவந்தான் கூட்டத்தன்னிக்கு அண்ணாவைக் கூட்டிட்டுவர, நான் சோழவந்தானுக்கே போயிட்டேன். இரவு சோழவந்தான் கூட்டத்தை முடிச்சிட்டு, நண்பர்களோடு நெடுநேரம் பேசிட்டு, நடு இராத்திரிக்குப் பிறகுதான் அண்ணா தூங்கப் போனார். அண்ணா, காலையில் நேரங்கழிச்சுத்தான் எழுந்திருப்பார். அடுத்த நாளும் அதே மாதிரிதான். காலை பத்து மணிக்கு மேலே ஆயிடுச்சு. அண்ணா தூங்கிக்கிட்டே இருக்கார். சிவகெங்கை பக்கம் தானேன்னு நெனச்சு அவர் தூங்கலாம். ஆனா, எவ்வளவு தூரம் போகனும்னு எனக்குத்தானே தெரியும்!

இதற்கிடையிலே, திருப்புவனம் தோழர்கள் வேறு, அவுங்க ஊர்லே கொடியேத்த, அண்ணாவைக் கூட்டிட்டுப் போகனும்ன்னு காத்திருக்காங்க. எனக்கு என்ன செய்யிறதுன்னே புரியலே.

அண்ணா தூங்கிக்கிட்டிருக்கிற அறைக்குப் போனேன். மணி பதினொன்று, அண்ணா இன்னும் எழுந்திருக்கலை. மேஜையிலே இருந்த தாம்பாளத்தைக் கையிலெடுத்து, கை தவறிக் கீழே விழுகிற மாதிரி 'திடீர்'ன்னு கீழே போட்டேன். அண்ணா சிரிச்சுக்கிட்டே 'முழுச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்! எப்போ சிவகெங்கைக்குப் புறப்படனும்'னு கேட்டார்.

பிறகு, திருப்புவனம் போய்க் கொடியேத்திட்டு, சிவகெங்கைக்குப் போய்க்கிட்டேயிருக்கும்போதுதான், நான் சொன்ன பொய் அண்ணாவுக்குத் தெரிஞ்சுது. ''எப்பிடியோ, என்கிட்டே தேதி வாங்கிட்டீங்க, இனிமே என்ன செய்ய முடியும்?''-சொல்லிச் சிரிச்சார். அப்புறம் அவருக்கே உள்ள புன்சிரிப்போட, ''ஆமா, அறையில அந்தத் தாம்பாளம் தானாவா விழுந்தது?''ன்னு கேட்டார்.

**நெடுநேரம் எழுதுவார்**

தலைமைக் கழக அலுவலகத்தில் பணியாற்றும் போதுதான், அண்ணா எப்பிடி எழுதுவார், எப்போது படிப்பார், எந்த நேரத்தில் எப்பிடிச் சிந்தித்து முடிவெடுப்பார் என்பது மாதிரிப் பல விஷயங்களைப் பக்கத்திலிருந்து பார்க்கிற சந்தர்ப்பம் கிடைச்சது.

அண்ணா எப்போதும் இரவில்தான் எழுதுவார். நெடுநேரம் எழுதுவார். சில நேரங்கள்லே விடிய விடியக் கூட எழுதுவார். கூட்டங்கள்லே பேசி முடிச்சிட்டு, வேற கட்சி விஷயங்களையெல்லாம் முடிச்சிட்டு, இரவு கட்சி அலுவலகத்துக்கு வருவார். அவர் வந்து சேருவதற்கு முன்னாடியே, நாங்க வெள்ளைத்தாள்களை யெல்லாம் ஒழுங்கா அடுக்கி, ஒன்னு, ரெண்டுன்னு வரிசையா நம்பர் போட்டு வச்சிடுவோம். வந்து எழுத உட்கார்ந்தார்னா, எழுதிக்கிட்டே இருப்பார். எழுதுகிறதுக்குச் சளைக்க மாட்டார். ரொம்ப வேகமாகவும் எழுதுவார். எழுதி, எழுதி, ஒவ்வொரு பேப்பரையும் விரலாலே கீழே தள்ளிவிடுவார். ''எழுதித் தள்ளுவது''ன்னு வழக்கிலே சொல்லுவோமே அது அவருக்குத்தான் பொருந்தும். அடுத்த நாள் காலையிலே, மெல்ல நாங்க உள்ளே வருவோம். அண்ணா அசந்து தூங்கிக்கிட்டிருப்பார். அறை பூரா பேப்பர்கள் பறந்துபோய்க் கிடக்கும். எல்லாத் தாள்களையும் எடுத்து நம்பர்ப்படி வரிசையா அடுக்கிடுவோம்.

(''நானும் என் திராவிட இயக்க நினைவுகளும்'' என்னும் நூலிலிருந்து)

# திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி

# திருவுருவச்சிலை திறப்பு விழா

''நெருப்பாக மூண்டெழுந்த அந்நாள் ஆதிக்கத்தை அன்பு நீரூற்றி அணைத்திட்ட பெருமான் காந்தி அண்ணல்-அவர்வழி நின்று தாயக விடுதலைக்குத் தன்னலம் துறந்து களம் புகுந்த - தமிழ்நாட்டு தானைத் தலைவர் பெருமக்கள் அணியணியாய் திரண்டெழுந்து ஆட்சிதனைத் தங்கள் வீரமூச்சால் ஊதிக் கலைத்த செந்தமிழ் மறவர் குடிப்பெருமக்கள்! அவரெல்லாம் சிந்திய வியர்வை வெள்ளம்...பெய்திட்ட குருதிமழை...பொழிந்த கண்ணீர்-சுதந்திரப் போருக்கு உரமாகும்''

-என்று இந்திய விடுதலை வெள்ளிவிழா ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எதிர்காலத் தலைமுறை சுதந்திர இனிமையைச் சுவைக்கவேண்டும் என்பதற்காகப் பாடுபட்ட அத்தகைய தன்னலமற்ற தியாகிகள் வரிசையில் தீரர் சத்தியமூர்த்தியும் ஒருவராவார்.

'நெஞ்சில் பதிந்திருக்க வேண்டியவர்களில் நிரந்தர தியாக வரலாற்றின் நினைவுச் சுவடுகள் அழிந்துவிடாமல் காப்பாற்றிட எண்ணிடும் தமிழக அரசு தனது சொல்லாற்றலினாலும்-செயல் திறனாலும்-சிந்தனை வளத்தாலும்-விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கு வலிவு சேர்த்த தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் திருஉருவச் சிலையை அவர் பிறந்த மண்ணில் திறந்திட நடவடிக்கை எடுத்தது.

தீரர் சத்தியமூர்த்தியின் சிலை திறப்பு விழா கடந்த 21-8-89 அன்று புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தலைமையில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. புதுக்கோட்டை-மதுரை சாலையில் திருமயம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு எதிர்புறத்தில் கம்பீரமாக அமைந்துள்ள தீரர் சத்தியமூர்த்தியின் திருஉருவச் சிலையை மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் திறந்து வைத்தார்.


விழாவில் தீரர் சத்தியமூர்த்தி அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் செயற்கரிய பணியையும் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி துவக்கி வைக்கப்பட்டது. அடித்தள மக்களின் நலனில் அக்கறைகொண்டு ஆயிரமாயிரம் திட்டங்களை நிறைவேற்றிடும் தமிழக அரசின் சாதனைகளை விளக்கிடும் புகைப்படங்களும் இக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன.

விழா தொடக்கத்தில் வரவேற்புரையாற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் ''அறிவாற்றலும் புலமையும் மிக்க தீரர் சத்தியமூர்த்தி, அரசியல் துறையில் மட்டுமன்றி இலக்கியத் துறையிலும் சிறந்து விளங்கினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகச்சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த அவர் தனது செயல் திறனாலும்-சீரிய தொண்டாலும்-வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

விழா தொடக்க உரையாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. குற்றாலிங்கம், ''தீரர் சத்தியமூர்த்தி புதுக்கோட்டை மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த பெருமக்களில் ஒருவராவார். தனது தன்னலமற்ற தொண்டின் மூலமாக மறைந்தும் மக்கள் நெஞ்சில் நிலைபெற்று வாழ்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

திருமயம் ஊராட்சிமன்றத் தலைவர் திரு. சத்தியமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள்

*புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் தீரர் சத்தியமூர்த்தி திருவுருவச் சிலையை மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன், செய்தித் துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. குற்றாலிங்கம் ஆகியோர் உடன் உள்ளார்கள்.*





***தீரர் சத்தியமூர்த்தி) சிலை திறப்பு விழாவில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் இலவச காதொலிக் கருவிகள் வழங்கினார். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்.துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன், அவர்கள் உடன் உள்ளார்.***

திரு. அ. பெரியண்ணன், திரு ஆலவயல் சுப்பையா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. நா. சுந்தர்ராஜ் ஆகியோர் உரையாற்றிய பின்னர், தீரர் சத்தியமூர்த்தி சிலையைத் திறந்து வைத்து மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் சிறப்புரை யாற்றினார். அவர் பேசும்போது குறிப்பிட்ட தாவது:

''ஒரு தேசபக்தருக்கு-ஒரு சுதந்திரப் போராட்ட வீரருக்கு- ஒரு சிறந்த ஜனநாயக வாதிக்கு-இந்த மண்ணுக்குப் பெருமை தேடித்தந்த தலைவருக்கு அமைக்கப்பட்ட சிலையைத் திறந்து வைப்பதற்காக மகிழ்ச்சி யடைகிறேன்.

அவர் பிறந்த இடமான திருமயத்தில் அவரது சிலையைத் தமிழக அரசு அமைத்து, அதைத் திறந்து வைக்க என்னை அழைத் தமைக்காகத் தமிழக முதல்வருக்கும்-செய்தித் துறை அமைச்சருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர்களை ஊக்கப் படுத்துவதிலும்-அவர்களுக்கு உதவி செய்வதி லும் மத்திய அரசுடன் மாநில அரசு போட்டி போடுவது பாராட்டத்தக்கது.

மகாத்மா காந்தி போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் ஆற்றிய தொண்டை யும், செய்த தியாகத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதில் மத்திய அரசுடன் மாநில அரசு போட்டியிட வேண்டும். அந்தப் போட்டியில் மத்திய அரசை மாநில அரசு முந்திச் செல்லவேண்டும் என்று வாழ்த்து கின்றேன்.

சத்தியமூர்த்தி அவர்கள் தமிழ், ஆங்கிலம் என்ற இருமொழிகளிலும் புலமை பெற்றி ருந்ததால்தான், இந்திய அரங்கில் ஏற்றமிகு தகுதியைப் பெற்றார்.

தமிழர்கள் இந்திய அரங்கில் உயர, தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிப் புலமை அவசியமாகும் என்று வலியுறுத்த விழைகின் றேன்.

தமிழக அரசு ஆங்கிலக் கல்விக்கு முக்கி யத்துவம் கொடுக்க வேண்டும். கற்றுக் கொடுப்பவர்களுக்கும் பயிற்சியளிக்க வேண் டும்.

தமிழர்கள் இருமொழிப் புலமை பெற் றால்தான் இந்திய அரங்கில் சரியாசனம் போட்டு அமர முடியும்.''

அதன்பின் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன் உரை யாற்றுகையில்:

''1974-ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தைத் தொடக்கி வைத்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இம்மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த பெருமக்களில் ஒருவரான தீரர் சத்திய மூர்த்தியின் சிலையை அவர் பிறந்த மண்ணில் திறக்க ஆணையிட்டு அதன் அடிப்படையில் இச்சிலை இங்கு திறந்து வைக்கப்படுகிறது.

தமிழக அரசு அடித்தள மக்களின் நலனுக் காகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்ட- மிகவும் பிற்படுத்தப்பட்ட-சீர்மரபினர் மற்றும் ஆதிதிராவிட மக்களின் வாழ்வில் மறுமலர்ச் சியைத் தோற்றுவிக்கும் வகையில் அரசு பணிகளை ஆற்றிவருகிறது.'' என்று குறிப் பிட்டார்.

விழா இறுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி, தலைமைப் பேருரையாற்றிய மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:-

''தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த இந்த அரசு தியாகிகளைக் கட்சி வேறுபாடு கருதாமல் பாராட்டி-போற்றி வருகின்றது.

நாட்டுக்காக உழைத்தவர்களை நினைவு கூர்ந்திட, பல அழியாச் சின்னங்களை உருவாக்கி வருகிறது.

''வ.உ.சி.யின் நூற்றாண்டு விழாவை யும்-அண்ணல் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவையும் முன்பு டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு சிறப்பாகக் கொண்டாடி யது. அண்ணல் காந்தியடிகள், வ.உ.சி. ஆகி யோரின் பெயரால் பல நல்ல பணிகளை அரசு ஆற்றியுள்ளது. ''வ.உ.சி. செக்கிழுத் தார் என்று வரலாற்று ஏடுகளில் படித்தி ருக்கின்றோம். அதை சென்னை மக்களின் பார்வைக்கு காட்சிப் பொருளாகக்கொண்டு வந்து வைத்த பெருமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.

நேரு அவர்களின் நூற்றாண்டு விழாவை யொட்டி சென்னையில் ஒரு நெடுஞ் சாலைக்கு அவருடைய பெயரைச்சூட்ட நமது முதல்வர் ஆணை பிறப்பித்துள்ளார். காம ராஜர் நினைவாலயத்தை அழகுபடுத்தவும், காமராஜர் அவர்களின் உதவியாளராகப் பணியாற்றியவருக்கு உதவிகள் வழங்கவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அனுமதியளித் துள்ளார்.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு வீரஞ்செறிந்த வரலாறுபடைத்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்குப் பாஞ் சாலங்குறிச்சியில் நினைவுக் கோட்டை எழுப்பிய பெருமை தமிழக முதல்வர் அவர் களையே சாரும். காலத்தாலும் கடல் சீற்றத் தாலும் புதையுண்டுபோன பூம்புகாரில் எழுநிலை மாடம் எழுப்பி-பழம்பெருமை போற்றும் நினைவுச் சின்னம்உருவாக்கியதும் நமது முதல்வர்தான்.

திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத் தில் உருவாக்கப்பட்டுள்ள அலுவலக வளா கத்திற்கு விடுதலைப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவாவின் பெயரைச் சூட்டி அவருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் நமது முதல்வர்.

அண்மையில் மதுரையில் வில்லாபுரம் மேம்பாலத்தைத் திறந்து வைத்த நமது

முதல்வர் அவர்கள் அந்தப் பாலத்திற்கு அந்தப் பகுதியின் மிகச்சிறந்த தேசியவாதி யாகிய எஸ்.எம்.ஆர். சுப்பராமன் அவர் களின் பெயரைச் சூட்டினார்கள்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ. 250-இல் இருந்து ரூ. 350-ஆக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்கள்-தியாகிகள் மறைந்தால் அவர்களை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யவும்-வட்டாட்சியர் அந்தஸ்தில் உள்ள அதிகாரிகள் அரசின் சார்பில் மரியாதை செலுத்தவும்-இறுதிச் சடங்கிற்காக ரூ. 1,000 வழங்கவும் தமிழக அரசு ஆணைபிறப்பித்துள்ளது.

இங்கே பேசிய நாடாளுமன்ற உறுப்பி னர் பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்பாலிகா பற்றிப் பேசினார். அவை மாநிலத்தின் உரிமையைப் பறிக்கும் வகையில் அமைந்த நடவடிக்கையாகும். இந்த முயற்சி கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கும்-எண்ணங் களுக்கும் புறம்பானதாகும்.

இந்தியாவைப் பொறுத்த வரையிலும் மாநிலங்கள் அதிகாரம் பெற்ற ஒரு கூட் டாட்சி அமைப்பாக இயங்கவேண்டும் என்பது அரசியல் சட்டத்தை வகுத்த மேதை களின் விருப்பமாகும்.

நாடாளுமன்றப்பெரும்பான்மை பலத்தை வைத்து மாநிலங்களின் அதிகாரங்களை சிதறடிப்பது நல்லதல்ல-மாநிலங்களின் உரி மைகளைப் பறிக்கும் இந்த முயற்சியை எதிர் காலத் தலைமுறை பாராட்டாது-என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசிய மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் தெளிவாக ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். இருமொழிக் கொள்கையின் அவசியத்தை வலியுறுத்தி அவர் தெரிவித்த கருத்து பாராட் டத்தக்கதாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இரு மொழிக் கொள்கைதான் இந்தியாவிற்கு ஏற்புடைய கொள்கை என்பதைத் தீர்க்க மாகச் சிந்தித்துத் தெரிவித்தார். பேரறிஞர் அண்ணா தெரிவித்த கருத்தை வலியுறுத்தும் வகையில் மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு. ப. சிதம்பரம் தெரி வித்ததை நான் பாராட்டுகிறேன்.

இந்திய அரசியல் அரங்கத்தில் தமிழன் உயர இருமொழிக் கொள்கை இன்றியமை யாததாகும். ஒரு காலத்தில் பேரறிஞர் அவர்கள் இருமொழிக் கொள்கையை வலி யுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றிய நேரத்தில் வக்கணை பேசியவர்கள் உண்டு. இது ஏற்பு டையதன்று என்று எதிர்வாதம் புரிந்தவர் களுண்டு. பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று முன்மொழிந்த இருமொழிக் கொள்

★ சுதந்திரம் பெறுவதுகூட எளிது. அதைப் பாதுகாப்பது அதைவிடக் கடினம். பாதுகாப்பது எளிது. சுதந்திரத்தால் ஏற்படும் பலன் எல்லாருக்கும் சேரச் செய் வது கடினம்.

★ வாழ்க்கைக் களத்தில் இறங்குவதற்கு முன்பு பயிற்சியும், பக்குவமும், அடிப்படைக் கொள் கைகளில் தெளிவும் பெறவேண் டிய பருவம் மாணவப் பருவம்.

—பேரறிஞர் அண்ணா

கையை வழிமொழிவதைப் போன்று அமைச் சர் திரு. சிதம்பரம் அவர்கள் இங்கே பேசி யிருக்கின்றார்கள். அவருக்கு நன்றி தெரி வித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசு அடித்தளத்தில் வாழும் ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்காகப் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. 8-வது வரை படித்த ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவி யாக ரூ. 5,000 வழங்கும் மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம் ஒரு மகத் தான சமுதாய நலத்திட்டமாகும்.

மணவாழ்க்கை என்பது எட்டாத கனியோ என ஏக்கப் பெருமூச்சு விட்ட பெண்களின் திருமண வாழ்க்கைக்கு வழி கோலிய மாண்புமிகு தமிழக முதல்வர்- ஒரு மாபெரும் சமுதாய விஞ்ஞானியாவார்.

அரசின் திட்டங்கள் மூலம் விளைகின்ற பயன் குறுக்கீடு இல்லாமல்-இடைத் தரகர் இல்லாமல் சாதாரண மக்களைச் சென் றடைய வேண்டும் என்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. இந்த அரசில் குறைபாடுகள் இருந்தால் அதனை எடுத்துக் கூறுகின்ற நியாயமான விமர் சனங்களை நாங்கள் வரவேற்கின்றோம்

எல்லாத் தரப்பு மக்களின் நலனிலும் அக்கறைகொண்டு காரியங்கள் ஆற்றிவரும் தமிழக அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகிறேன்''.

இவ்வாறு மாண்புமிகு செய்தி-தொழி லாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

விழாவில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத் தின் கீழ் 13 பெண்களுக்கு தலா ரூ. 5,000 வீதம் மொத்தம் ரூ. 65,000 மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் வழங்கி னார்.

சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நலிவுற்ற பெண்களுக்கு மான்யம் வழங்கும் திட்டத்தின் கீழ் 10 பெண்களுக்கு தலா ரூ.330 வீதம் ரூ.3,300 வழங்கப்பட்டது.

விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச நோட்டுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 6 பேருக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

10 பேருக்கு இலவச காதொலிக் கருவி களையும், குடிசை ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் 11 பேருக்கு தலா ரூ. 1,100 வீதம் மொத்தம் ரூ. 12,100 நிவாரணத் தொகை யும் வழங்கப்பட்டது.

ஓட்டுநர்களை உரிமையாளர்களாக்கும் தமிழக முதல்வர் அவர்கள் சிறப்புத் திட்டத் தின் கீழ் மின்சார மோட்டார் பொருத்தப் பட்ட சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, டூரிஸ்ட் கார் ஆகியவை வாங்குவதற்கு மான் யத்துடன் கூடிய கடன் உதவித் தொகை ரூ. 3,06,200 அளவிற்கு மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் டாக்டர் க. சந்திரசேகரன் ஆகியோர் வழங்கி னார்கள்.

இந்த விழாவில் 150 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்களும், 50 பேருக்கு ஓய் வூதியம் பெறுவதற்கான ஆணையும் வழங்கப் பட்டன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட் டத்தின் கீழ் 20 பேருக்கு உதவிகளும் உடைமைகளும் வழங்கப்பட்டன.

ஜீவன்தாரா திட்டத்தின் கீழ் பாசனக் கிணறுகள் அமைத்த ஆதிதிராவிடர் விவ சாயிகள் 5 பேருக்கு மின்சார மோட் டார்கள் வாங்க வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின்கீழ் தலா ரூ. 7,500 வீதம் ரூ. 37,500 வழங்கப்பட்டது. இதில் அரசு மான்யம் ரூ. 12,500 ஆகும்.

சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் 12 பேருக்கு நெல் மினி கிட்டங்குகளும், 6 பேருக்கு சிங்கல்பேட் மினி கிட்களும் வழங் கப்பட்டன.

மக்களின் நெஞ்சில் நிலையாகிவிட்ட விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒருவ ரான தீரர் சத்தியமூர்த்திக்கு தமிழக அரசு சிலை திறந்த நிகழ்ச்சி ஏற்படுத்திய எழுச்சி, என்றும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

-இரெ. மகாலிங்கம்,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
(செய்தி),
புதுக்கோட்டை.



# தஞ்சாவூர் மாவட்டத்தில் குடிமராமத்துப் பணிகள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ.14 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில், 4,846 ஆதி திராவிடக் குடும்பங்களுக்குக் கான்கிரிட் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. சுமார் 250 கிராமங்களில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இதுபோன்ற கான்கிரிட் வீடுகள் ஆதி திராவிடர்களுக்குத் தமிழகத்தில் மட்டும்தான் கட்டித் தரப்படுகின்றன.

மேலும், 529 குளங்கள் ஆழப்படுத்தும் பணிகளும், 1,648 வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணிகளும், ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் தஞ்சாவூர் மாவட்ட வளர்ச்சி முகமையின் மூலம் செய்யப்பட்டு வருகிறது. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மக்கள் தொகைக்கு ஏற்ப அரசு நிதி ஒதுக்கீடு செய்கின்றது. இந்நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப கிராம மக்கள் வேலைகளைத் தீர்மானித்துப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் முதன் முறையாக 100 போரடித் தளம் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் 270 ஜீவன்தாரா கிணறுகள் அமைக்கப்படும். கல்லணையில் ரூ.2 இலட்சம் செலவில் ஒரு கிராமிய அங்காடி கட்டப்பட உள்ளது.

குச்சிப்பாளையம் பஞ்சாயத்திற்கு ரூ.45 ஆயிரம் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அங்குள்ள குளம் 6 அடிக்கு ஆழப்படுத்தப்பட்டுள்ளது. சூலமங்கலம் வெங்கடாகுளம் ரூ.12,200 மதிப்பீட்டில் ஆழப்படுத்தப்பட்டுள்ளது. சூலமங்கலம் வாய்க்கால் ரூ.4,900 செலவீட்டில் தூர் எடுக்கப்பட்டு உள்ளது. அதேபோன்று பசுபதிகோவில் பிரதான வாய்க்கால் ரூ.3,990 செலவில் பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன. அடுத்து சரபோஜிராஜபுரம் வாய்க்கால் ரூ.2,990 செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இதே ஒன்றியத்தைச் சார்ந்த சேந்தனூர் பாசனக் கண்மாய் 5.4 கி.மீ. நிலத்திற்குத் தூர் எடுக்கும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கும்பகோணம் கோட்டத்தில் ரூ.2 கோடியே 15 இலட்சம் அளவிற்கு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பணிகள் செய்யப்பட்டு வருகின்றது. இதில் ஆதி திராவிடர்களுக்கு 840 வீடுகளும், 150 குளங்கள் ஆழப்படுத்தும் பணிகளும், 318 வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணிகளும் முடியும் தருவாயில் உள்ளன.

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 305 பணிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கான அரசு நிதி ஒதுக்கீடு ரூ.42 இலட்சத்து 76 ஆயிரமாகும். இதில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குளங்கள் ஆழப்படுத்துதல் மற்றும் வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் அனைத்தும் ரூ.2 இலட்சத்து 95 ஆயிரம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சோழன்மாளிகை கிராமத்தில் ரூ.12 ஆயிரம் செலவில் நடைபெற்றுள்ள குளம் ஆழப்படுத்தும் பணி ரூ.6 ஆயிரம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. வாய்க்கால் தூர் எடுக்கும் பணி - அண்ணல் அக்ரகாரம் கிராமத்தில் சுமார் ரூ.6 ஆயிரம் செலவில்



மாத்தி வாய்க்கால் தூர் எடுக்கும் பணி - வாளப்பாடி கிராமத்தில் ரூ.12 ஆயிரம் செலவில் மேலகுளம் தூர் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.45 இலட்சம் செலவில் ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள் செய்யப்படுகின்றன. இந்த ஊராட்சி ஒன்றியத்தில் 55 பாசன வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணிகளும் - 24 குளங்கள் ஆழப்படுத்தும் பணியும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. குத்தாலம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்றுள்ள ஊராட்சிப் பணிகள் மிகவும் சிறப்பாகவும், பொதுமக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான தேவைகள்பூர்த்தி செய்யும் வகையிலும் பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஆலங்குடி குளம் ஆழப்படுத்தும் பணி - கடலங்குடி பெரிய வாய்க்கால் தூர் எடுக்கும் பணி - வில்லியநல்லூர் ஆழப் படுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.

கும்பகோணத்திற்கு அருகேயுள்ள சேங் கனூர் ஏ-19 பாசன வாய்க்கால் முன்னதாகத் தூர்ந்து போயும், நெய்வேலி காட்டா மணிக்கால் அடைப்பட்டுப்போயும்இருந்தது. இதுபோன்ற பாசன வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் விவசாயப் பொறியியல் துறை மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தஞ்சாவூர் மாவட்டம் மயிலாடுதுறை கோட்டத்தின் மூலம் 30 பணிகள், ரூ.6 இலட்சத்து 89 ஆயிரம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 260 கிலோ மீட்டர் நிளத்திற்குப் பாசன வாய்க்கால் தூர் வாரப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் ஆகஸ்டு முதல் வாரத்தில் முடிக்கப்பட்டு விடும் என்று தெரிகிறது.

பின்னர் பூம்புகார் செல்லும் வழியில் உள்ள கீழையூருக்கு அடுத்து எருமல் கிராமத்தில் கடந்த மழை வெள்ளக் காலங்களில் சரியான முறையில் வடிகால் வசதி இல்லாததால் 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் ஏக்கர் நெல் பயிர்கள் வெள்ளத்தினால் முழுப் பாதிப்பு அடைந்து வந்துள்ளன இதனைச் சீர் செய்யும் வகையில் சுமார் ரூ.3 இலட்சம் செலவில் புதிதாக இரண்டு வடிகால் சைபன்களும், அய்யாவைய்யனார் பகுதியில் கட்டப்பட்டு வருகின்றது. அய்யாவைய் யனார் சைபனின் வடிகால் பரப்பினை ஆழப்படுத்தும் பணியும் செய்யப்பட்டு உள்ளது. தூர் எடுக்கப்பட்ட மண்மேடு பகுதிகளில் மண் அரிப்பு ஏற்படாமல் இருக்க குறுக்குத்தட்டை என்ற நாணல் போன்ற புல் வகை பயிரிடப்படும்.

அண்மையில், இந்தப் பணிகளையெல்லாம் பார்வையிட்ட தஞ்சாவூர் செய்தியாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்களை மயிலாடுதுறை முகாமின்போது சந்தித்து உரையாடினார்கள். மாவட்டத்தில் நடைபெற்று வருகின்ற மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல்படுத்தப் படுகின்ற குளங்கள் ஆழப்படுத்துதல், வாய்க்கால் தூர் எடுக்கும் பணி போன்ற குடிமராமத்துப் பணிகள் சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டுள்ளதாகத் தங்களது பாராட்டுதல்களைத் தமிழக அரசுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்தார்கள். குளம் ஆழப்படுத்தும்பொழுது மத்தியப் பகுதியில் படிப்படியாகச் சதுர செவ்வக வாக்கில் மண் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் முறைகேடுகள் ஏதும் நடக்காத வகையில் பணிகள் கண் காணிக்கப்படுவது குறித்து நிருபர்கள் பாராட்டுதல்களைத்தெரிவித்தார்கள்.

இம்முறை பிற மாவட்டங்களிலும் பின் பற்றப்பட்டால் குடிமராமத்துப் பணிகள் மக்களின் எதிர்பார்ப்பிற்கேற்பச் செயல் படுத்தலாம் என்கின்ற கருத்தினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ். மச்சேந்திரநாதன், இ.ஆ.ப., அவர்களிடம் தஞ்சைச் செய்தியாளர்கள் தெரிவித்தார்கள். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப. அவர்களும் அப்போது உடனிருந்தார்.

—கோ.தி. மோகன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தஞ்சாவூர் மாவட்டம்

## இளம் கலைஞர்களுக்கு ஊக்கம்

இளம் கலைஞர்களுக்கு ஊக்கம் அளிக்கும் திட்டத்தின்கீழ் வாய்ப் பாட்டு, பரதநாட்டியம், கதாகாலட்சேபம், இசைக் கருவிகளில் வீணை, நாதசுரம், புல்லாங்குழல், ஜலதரங்கம், கோட்டு வாத்தியம், கிளாரினெட் மற்றும் மேலைநாட்டு இசைக் கருவிகளான மாண்டலின், கிதார், சாக்ஸோபோன் ஆகிய இசைக் கருவிகளில் கர்நாடக இசைப் பாணியில் கலை நிகழ்ச்சிகள் நடத்தும் கலைஞர்களும், பக்கவாத்தியங்களான வயலின், மிருதங்கம், கஞ்சிரா, கடம், முகர்சிங், கொன்னக்கோல் ஆகிய இசைக் கருவிக் கலைஞர்களும் இத்திட்டத்தில் பங்குபெறலாம்.

இசைத் துறையில் பங்குபெறும் கலைஞர்கள் விண்ணப்பத் தேதியில் 16 வயது நிரம்பியவராகவும் 30 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பரத நாட்டியத் துறையில் பங்குபெறும் கலைஞர்கள் விண்ணப் பத் தேதியில் 15 வயது நிரம்பியவராகவும் 30 வயதுக்கு உட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

தகுதிவாய்ந்த கலைஞர்களை மன்றம் நேர்முகத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கப்படும் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் நான்கு நிகழ்ச்சிகள் வழங்கப்படும்.

திட்ட விதிமுறைகளையும், விண்ணப்ப படிவங்களையும் பின்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்:- ''செயலாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், 'தென்றல்', கிரீன்வேஸ் சாலை, சென்னை-600028''. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மன்றத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி 30.9.1989.

# விதை தூவும் வானூர்தி





திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள பழனி மலை மேற்குத் தொடர்ச்சி மலையில் வானூர்தி மூலம் வன வளத்தைப் பெருக்க விதை தூவப்பட்டது.

வானூர்தி மூலம் விதை தூவும் நிகழ்ச்சியின் தொடக்கவிழா 14.7.'89 அன்று ஒட்டன்சத்திரத்தில் முதன்மை வனத் துறைத்தலைவர் திரு ஜான்ஜோசப், இ.வ.ப., அவர்கள் முன்னிலையில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு சுந்தரேசன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இராமலிங்கம், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு தண்டபாணி மற்றும் ஒட்டன்சத்திரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு பி. காளியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருச்சி மண்டல வனப் பாதுகாவலர் திரு கி. விசுவநாதன், இ.வ.ப., அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழா முடிவில், திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்ட வன அலுவலர் திரு குணசேகரன் நன்றி கூறினார்.

ஒட்டன்சத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு பி: காளியப்பன் பேசுகையில் கூறியதாவது: ''வன வளம் பெருகினால் மழை வளம் பெருகும். மலைகளை அழித்ததன் காரணமாக கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுக்காலம் மழையின்றிப் போய்விட்டது. வனத்தை அழிப்பவர்கள் மீது கடுமையான தண்டனை விதிக்கப்ப..ல் வேண்டும். பலத்த தண்டனைகளின் மூலம்தான் நாம் காடுகளையும், வனங்களையும் பாதுகாக்க முடியும்''. வனத்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு டி. சுந்தரேசன் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்ததாவது:

''அதிக அளவில் வனப் பகுதிகளை வளப்படுத்துவதற்கும், முன் பருவகாலம் முடியுமுன் விரைவாக விதைகளை விதைப்பதற்காக வானூர்தி மூலம் விதை தூவும் முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டம் பள்ளிகொண்டான்பாளையம் பகுதியில் ஆயிரம் எக்டேர் வனப் பகுதிகளில் வானூர்தி மூலம் விதைகள் தூவப்பட்டன. பருவ மழை தவறியதால் கடந்தாண்டு தூவப்பட்ட விதைகள் சரிவரப் பயன் தரவில்லை.

''தமிழக முதல்வர் அவர்கள் வன வளத்தைப் பெருக்க மிகவும் ஆர்வமாக உள்ள காரணத்தால், இந்த ஆண்டும் வானூர்தி மூலம்-பருவமழை ஆரம்பித்துள்ள இக்கால கட்டத்தில் விதைகள் தூவப்பட்டுள்ளன.

''வானூர்தி மூலம் விதைகள் தூவுவதற்காகத் தமிழகத்திற்காக ரூ.120 கோடி அளவில் திட்டம் தயார் செய்து மைய அரசிற்கு அனுப்பப்பட்டது. மைய அரசிற்குத் திட்டங்களைத் தயார் செய்து அனுப்புவதன்மூலம் வெளிநாட்டின் உதவி கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

''தமிழகத்தில் உள்ள 25 ஆயிரம் எக்டேர் பரப்பில் ஆண்டிற்கு 5 ஆயிரம் எக்டேர் வீதம் 5 ஆண்டுகட்கு வானூர்தி மூலம் விதை தெளிக்கத் திட்டம் தயார் செய்து மைய அரசிற்கு அனுப்பப்பட்டது.

''பருவ மழை தமிழகத்தில் துவங்க ஆரம்பித்துள்ளபடியால் மைய அரசிடம் அனுமதியை விரைவாகப் பெற முயற்சி செய்தோம். கடந்த வாரம் அனுமதி கிடைத்தது.

''இப்பருவ மழைக் காலங்களில் வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் பகுதியில் 5 ஆயிரம் எக்டேர் வனப் பகுதியிலும், பழனி மலை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் 2 ஆயிரத்து 500 எக்டேர் வனப் பகுதியிலும் விதைகள்

தூவ திட்டமிட்டுச் செயல்படுத்தி வருகிறோம்.

"வேம்பு, சீதா, வெல்வேன், இளந்தை, மூங்கில், பரம்பை போன்ற 18 வகையான விதைகளைத் தூவுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 7 ஆயிரத்து 500 எக்டேர் பரப்பில் விதைகள் தூவுவதற்கு ரூ.55 இலட்சம் தேவைப்படுகிறது. வாயுதூத் விமானம் மூலம் ஒரு எக்டேர் நிலப்பரப்பில் விதைகள் தூவுவதற்கு விமானச் செலவு ரூ.55 ஆகும்.

"விமானம் மூலம் விதைகள் தூவுவதற்கு முன், வனப் பகுதிகளில் சீராகக் கிளறிவிடப்பட்டுள்ளது. விதைகள் நன்கு பராமரிக்கப்பட்டு, பெவிகால் தடவி விடப்பட்டுள்ளது. விமானத்திலிருந்து விரைவாகத் தரையை வந்தடையும் வண்ணம் விதைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. விதைகளில் சிறிய அளவு ஈரக்கசிவு இருந்தாலே முளைக்க ஆரம்பித்துவிடும். கோயம்புத்தூர் வனத்துறை ஆய்வுப் பண்ணையில் விதைகள் பெறப்பட்டுள்ளது. விமானம் மூலம் ஒரு எக்டேரில் 10 கிலோ விதைகளை-அதாவது 60 ஆயிரம் விதைகளைத் தூவுவதற்குத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

"கடந்த ஆண்டு வானூர்தி மூலம் தெளித்த விதைகள் பயன்தராததால் இவ்வாண்டும் அப்பகுதிகளில் விதைகள் தூவப்பட உள்ளன. இந்தியாவில் ஆந்திரா, மத்தியப் பிரதேசம் போன்ற பகுதிகளிலும் இம்முறையைச் செயல்படுத்தி வன வளத்தைப் பெருக்கி வருகின்றனர்.

தமிழகத்தில் உள்ள 22 இலட்சம் எக்டேர் வனப் பகுதியில் 6 இலட்சம் எக்டேர் வனப் பகுதிகளில் பசுமையே இல்லை. இப்பகுதிகளை வளப்படுத்த பெரு முயற்சி எடுத்து வருகிறோம். மொத்த நிலப்பரப்பில் 3-இல் ஒரு பங்கு காடுகளாக இருக்க வேண்டும், என்பது தேசியக் கொள்கை மற்றும் வனக் கொள்கையாகும். ஆனால் தமிழ்நாட்டில் 17 சதவீதம் தான் காடுகள் இருக்கின்றன. தற்போது காடுகளின் எண்ணிக்கை ஒரு சதவீதம் உயர்ந்துள்ளது" இவ்வாறு அவர் கூறினார்.

வானூர்தி மூலம் விதைகளைத் தூவும் நிகழ்ச்சிக்கு கன்னிவாடி வனச் சரகத்தின் சார்பில், வனச் சரகர் வெள்ளைச்சாமி ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

கே.பி. நல்லதம்பி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டம்

# தொழில்வளம் பெருக்கும் முயற்சி... தொடர்கிறது.....

**தி.மு.** கழக ஆட்சியில் தொழில் வளத்தில் இந்தியாவில் தமிழகம் 3-வது இடத்தில் இருந்தது. இடைக்காலத்தில் 10-வது இடத்திற்குச் சென்று விட்டது. மறுபடியும் 3-வது இடத்திற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடலூர் சிப்காட் தொழில் வளாகம் இரசாயனம் மற்றும் மருந்து தயாரிக்கும் தொழில்களுக்கெனத் திட்டமிட்டு ரூபாய் மூன்று கோடிக்கு மேல் செலவிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

520 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இந்த வளாகம் சென்னை-இராமேஸ்வரம் இரயில் பாதையில், சிதம்பரம் மற்றும் நெய்வேலிக்கு அருகில் அமைந்துள்ளது.


இவ்வளாகத்தை நிறுவ ரூ. 365 இலட்சம் செலவு செய்யத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சாலை வசதி, தண்ணீர் வசதி, அடிப்படை வசதிக் கட்டடங்கள், கழிவுநீர்த்திட்டம் ஆகிய பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இங்கு நிலம் பெற்றுள்ள 28 தொழில் நிறுவனங்களும் கூட்டாக, சுமார் 100 கோடி ரூபாய் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளார்கள். இந்த நிறுவனங்கள் சுமார் 2,500 நபர்களுக்கு நேரடி வேலையும் அதன் இருமடங்கு அளவுக்குச் சார்புள்ள வேலையும் அளிக்க வாய்ப்புகள் உள்ளன. தற்போது உற்பத்தியைத் துவக்கியுள்ள 12 தொழிற்சாலைகள் ரூ. 34 கோடி முதலீடு செய்துள்ளன. இதனால் 1,500 நபர்கள் நேரடி வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இந்த வளாகத்தின் சிறப்புகளும் வழங்கப்படும் சலுகைகளும்:

- உற்பத்தி துவக்கிய ஐந்து ஆண்டுகளுக்கு மின் சார வெட்டு இல்லை.
- ரூபாய் 20 இலட்சம் உச்சவரம்புக்குட்பட்டு 15 சதம் அரசு மூலதன மானியம்.
- ரூபாய் 3 கோடி உச்சவரம்புக்குட்பட்டு விற்பனை வரி கடன் திட்டம்.
- இந்த வளாகத்திலுள்ள தொழில் பிரிவுகள் இது வரை முதலீடு செய்துள்ளது ரூபாய் 100 கோடி.
- இதுவரை வேலைவாய்ப்புப் பெற்றோர் ஆயிரத்து ஐநூறு நபர்கள்.
- 'கீழ்க்கண்ட அடிப்படை வசதிகளும் திட்டமிடப் பட்டுள்ளன:

துணை மின் நிலையம், தொலைபேசி, டெலக்ஸ் தொடர்பகங்கள், அஞ்சல் நிலையம், தீயணைப்பு, முதலுதவி நிலையங்கள், உணவு விடுதி மற்றும் வீட்டு வசதி.




# சாண எரிவாயுக் கலன் ஒரு சமய சஞ்சீவி!

தஞ்சாவூர் மாவட்டம், பொனவாசல் கிராமத்தில் உள்ளவர்களில் பெரும் பாலோார் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்கள். இந்தக் கிராமத்தின் மக்கட் தொகை 1,851. இதுவரை இந்தக் கிராமத் தில் 47 சாண எரிவாயுக்கலன்கள் நிறுவப் பெற்று நல்ல முறையில் இயங்கிவருகிறது. சாண எரிவாயுத் திட்டத்தின் நன்மைகள் பற்றி இந்தக் கிராமத்தில் களப்பணி யாளர்கள் மூலம் விளம்பரம் செய்ததில், மக்கள் தாங்களாகவே முன்வந்து கலன்கள் அமைக்க ஆர்வமுடனிருக்கின்றனர். இந்தக் கிராமத்தில் ஏறத்தாழ 750 கால்நடைகள் உள்ளன.

இந்தக் கிராமத்திற்குத் திருவையாறு பாரத வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, தஞ்சாவூர் வங்கி கடன் வழங்கி யுள்ளன. மேற்படி வங்கியில் கடன் வாங்கிய வர்கள் தவறாது காலத்தே தொகையைத் திரும்பக் கட்டுகிறார்கள். கலன் அமைக்கும் செலவில் அரசு மானியம் போக மீதமுள்ள தொகை, சம்பந்தப்பட்ட வங்கியில் வழங்கப் படுகிறது.

கடனுதவி பெற்று, சாண எரி வாயுக் கலன் அமைத்தவர்களில், பொனவாசல் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த திருமதி தங்கமணி அம்மாள் அவர்களும் ஒருவர்.

இவர் 3 சி.எம். சாண எரிவாயுக் கலன் அமைத்துள்ளார். இவரிடம் 4 கால்நடைகள் உள்ளன. குடும்பத்தில் 5 நபர்கள் உள் ளனர். அன்றாடச் சமையல் வேலைக்குப் போதுமான அளவு எரிவாயு கிடைப்பதாக வும், கலன் அமைத்ததிலிருந்து எந்த வித மான பிரச்சினையும் இல்லாமல் நன்கு பரா மரிக்கப்பட்டு வருகிறது. கலன் அமைத் ததினால் தங்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் பற்றி அவர் கூறினார்.

''சமையல் செய்ய அதிக நேரம் காத் திருக்க வேண்டியதில்லை. பாத்திரங்கள் கரி பிடிப்பது கிடையாது; புகையில்லாததனால், கண்களுக்குப் பாதிப்பில்லை; கழிவுச் சாணம் நல்ல எருவாகப் பயன்படுகிறது''.

இதே ஊரைச் சேர்ந்த திரு ஆனந்தம் குடும்பத்தினர் 6 சி.எம். சாண எரிவாயுக் கலன் அமைத்துள்ளனர். வங்கிக் கடன் ரூ.8,950ம், அரசு மானியம் ரூ.2,610ம் பெற்றுள்ளார்.

இவர் குடும்பத்தில் 7 நபர்கள் உள் ளனர். 6 கால்நடைகள் உள்ளன. கலன்



## சாண எரிவாயு அடுப்பு


* மாட்டு சாணத்திலிருந்து உண்டாகும் எரி வாயுவின் சக்தியால் எரியும் அடுப்ப புகை அற்றது. செலவற்ற சமையல். வயலுக்கு நல்ல உரம் கிடைக்கும். தினமும் நான்கு வாளி சாணக் கரைசல்தான் வேண்டும். இரண்டு மாடுகள் இருந்தாலே போதுமானது.
* இதை உற்பத்தி செய்யும் கலனை அமைப்பது மிகவும் எளிது. முதல் பணம் எதுவும் தேவை இல்லை. செலவில் பாதியை அரசு மானியமாக வழங்குகிறது. மீதியை கடனாக வங்கித் தருகிறது.
* சாண எரிவாயுக் கலன்கள் அமைத்து பயன் பெறுவர்.

அமைத்த நாளிலிருந்து எந்தக் குறைவுகளு மில்லாமல் நன்கு இயங்கி வருகின்றது என்பதனைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறார்.

எரி பொருட்கள் விலைவாசி ஏறி உள்ள இந்த நாளில், சாண எரிவாயு பயன்படுத்து வதனால் தான் பொருளாதாரச் சேமிப்பு அடைந்துள்ளதாகவும், சமையல் சீக்கிரமாகத் தயாராகி விடுவதாகவும், பாத்திரங்கள் கரி படிவதில்லையெனவும் தெரிவிக்கிறார் இவர்.

திரு. ஆர். மதிவாணன் குடும்பத்தினர் தனது வீட்டில் 8 சி.எம். சாண எரிவாயுக் கலன் அமைத்துள்ளனர். இவர் குடும்பத்தில் 8 நபர்கள் உள்ளனர். இவரிடம் 10 கால்நடைகள் உள்ளன. சாண எரிவாயுக் கலன் அமைக்கப்பெற்றதனால் தானடைந்த நன்மைகளை, ஊரில் உள்ள மற்ற நபர்களுக் கும் விளக்கி, அதிகப்படியான நபர்களைக் கலன் அமைக்க ஊர்நல அலுவலரிடம் அழைத்து வந்துள்ளார்.





சாண எரிவாயுத் திட்டத்தினால் ஏற் பட்ட நன்மை பற்றிக் கூறுகையில், சாண எரிவாயுக் கலத்திலிருந்து வெளியேறிய சாணத்தை வயலுக்கு உரமாகப் பயன் படுத்தியதில் நல்ல மகசூல் கிடைப்பதாக வும்-வயலில் களைகள் முளைப்பதில்லை என்றும் பெருமையுடன் தெரிவிக்கின்றார்.

திரு டி.புருஷோத்தமன் குடும்பத்தினருக் குத் திருவையாறு பாரத வங்கி கடன் உதவி செய்துள்ளது. இவருடைய குடும்பத்தில் 6 நபர்கள் உள்ளனர். 7 கால்நடைகள் உள்ளன.

இவர் சாண எரிவாயுத் திட்டத்தினால் அடைந்த நன்மைகளைப் பற்றி கூறுகையில், சாண எரிவாயுக் கலன் ஆபத்தில்லாதது. சமையல் செய்வதற்கு நேரம் அதிகம் எடுத் துக்கொள்வது கிடையாது. பாத்திரங்கள் கரி அடைவதில்லை. எந்த நேரத்திலும் சாண எரிவாயு கிடைக்கிறது. புகையில்லாததினால் வீடு சுத்தமாக உள்ளது. வெள்ளை அடிக்க வேண்டிய செலவு மிச்சமாகிறது'' என்றார்.

## சாண எரிவாயுக் கலன்:

## தமிழகத்திற்குப் பரிசு

தமிழகத்தில் 1989-90-ஆம் ஆண்டு 12,400 சாண எரிவாயுக் கலன்களை நிறுவுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்காக ரூ.322.40 இலட்சம் மானியத் தொகையாக செலவிடப்படும். அதனையொட்டி, சாண எரிவாயுக் கலன் களை அமைக்கும் திட்டம் முனைப்புடன் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் 1981-82-ஆம் ஆண்டு முதல் சாண எரிவாயுத் திட்டம் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சித் துறை மூலம் தீவிர மாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1988-89-ஆம் ஆண்டு வரை 89,502 குடும்பங்களில் சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேசிய அளவில் இத்திட்டத்தைச்சிறப்புற நிறைவேற்றியதற்காக 1984-85-ஆம் ஆண்டில் இரண்டாவது பரிசையும், அதற்கு அடுத்த 1985-86 மற்றும் 1986-87-ஆம் ஆண்டுகளில் முதல் பரிசுகளையும், தமிழ் நாடு அரசு மைய அரசிடமிருந்து பெற்றது.



# ஈரோட்டில் கொடுமணல் அகழாய்வுக் கண்காட்சி

கொடுமணல் என்ற சிற்றூர் பெரியார் மாவட்டம் பெருந்துறை வட்டத்தில், நொய்யல் ஆற்றின் வடகரையில், ஈரோட்டிலிருந்து தென்மேற்கே 40.கி.மீ. தொலைவிலும், சென்னிமலையிலிருந்து 15.கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூர், சங்க காலத்தில் கொடுமணம் என்னும் பெயரில் அரிய கற்களைக் கொண்டு செய்யப்பட்ட நகைகளுக்குப் பெயர் பெற்றிருந்தது. "கொடுமணம் பட்ட வினை மாண் அருங்கலம்" என்று நாலாவது பதிற்றுப்பத்து வருணிக்கிறது.

இவ்வூரில் உள்ள பழைய நத்தப்பகுதியிலும், ஈமக்காட்டிலும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத்துறை, தமிழ் நாடு அரசு மற்றும் பல்கலைக்கழக நல்கைக் குழு ஆகியவற்றின் நிதியுதவியோடு அகழாய்வை மேற்கொண்டது. இப்பகுதிகளில் கிடைத்துள்ள அரும் பொருட்கள் இப்பகுதியில் கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2ஆம் நூற்றாண்டு வரை சிறப்புற்றிருந்த நாகரிக மேம்பாட்டை விளக்கி நிற்கின்றன.

பெரியார் மாவட்டத்திலுள்ள ஆர்வமுள்ள மாணவர்களும் ஆய்வர்களும் பொது மக்களும் அகழாய்வுப் பணியைக் கண்டு களிக்க ஈரோடு அரசு அருங்காட்சியகமும் பெரியார் மாவட்ட இன்டாக் அமைப்பும் ஒரு அகழாய்வுக் களப்பணி காணல் பயணம் மேற்கொண்டது. அகழாய்வுப் பணிகளில் கலந்து கொண்டோர்க்கு விளக்கிக் கூறப் பட்டது.

அதனைத் தொடர்ந்து, பெரியார் மாவட்ட மாணவர்களும், பொதுமக்களும் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த தொல் பொருட்களைக் காணத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து ஈரோடு அரசு அருங்காட்சியகம், ஈரோடு நகராட்சி முன்னாள் நகர் மன்றக் கூடத்தில் "கொடுமணல் அகழாய்வுக் கண்காட்சி" ஒன்றினை ஜூன் 15 முதல் ஜூன் 17 வரை ஒழுங்கு செய்திருந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம், பெரியார் மாவட்ட ஆட்சியர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் தொடக்கி வைத்தார். மூன்று நாட்களிலும் ஆறாயிரத்திற்கு மேற்பட்டோர் இந்தக் கண்காட்சியைக் 'கண்டு களித்தனர்.

**வே. ஜெயராஜ்,**
**காப்பாட்சியர்,**
**அரசு அருங்காட்சியகம்,**
**ஈரோடு-638 001**

**கண்காட்சியின் முக்கியக் கூறுகள்:**

பெரியார், கோவை ஆகிய மாவட்டங்களில் பெருங்கற்படைச் சின்னங்கள் அமைந்துள்ள இடங்கள், அகழாய்வு செய்யப்பட்ட ஈமக்காட்டுப் பகுதியில் உள்ள பெருங்கற்படைச் சின்னங்களின் புகைப் படங்கள், கல்வறைகள், அகழாய்வுக் காட்சிகள், எலும்புக்கூடுகள், சில சிறந்த அகழாய்வுப் பொருட்கள் ஆகியவற்றின் புகைப்படங்கள் பெரிய அளவில் அமைக்கப் பெற்றிருந்தன. கொடுமணல், இரும்புக்குப் பெயர் பெற்ற தொழிற்கூடமாய் இருந்ததை விளக்க அங்கு கிடைத்த இரும்புத்தாதுகள், இரும்புக் கசடுகள், இரும்பு உலைகள், இரும்புப் பொருட்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

தென்னிந்தியாவில் முதன்முதலில் கொடுமணலில் கிடைத்த குதிரை அங்கவடிக் காட்சியில் இடம் பெற்றிருந்தது. பலவகைப் பளிங்கு, கார்னீலியன் ஆகிய அரிய கல் வகைகளைக் கொண்டு மிகுந்த அளவில் மணிகளும், மோதிரம் போன்ற நகைகளும் உருவாக்கும் தொழில் இங்கு நடைபெற்றதற்குச் சான்றாகப் பல நிலைகளில் அறுக்கப் பட்ட கல் சில்லுகளும், துளையிட்டதும், துளையிடாததுமான மணிகளும், மெருகூட்டப்பட்ட பச்சைக்கல், நீலம், வைடூரியம், ஜாஸ்பர், அகேட், கார்னட் ஆகிய மணிகளும் கண்காட்சிக்கு மெருகூட்டின.

கிடைத்துள்ள தங்கம், செம்பு அல்லது வெண்கலப் பொருட்கள் சிலவே ஆயினும், சிவப்பு, ஊதாக்கல் பதிக்கப்பட்ட வெண்கலப் புலியின் உருவம், வாணலி போன்ற செப்பு வடிகட்டி, கரண்டி, செப்பு அலங்காரப் பூக்கள், கிண்ணம், தங்கச்சுருள், வெள்ளிச் சுருள், தங்கமணிகள் மிகச்சிறந்தவை. செப்பு நாணயங்கள் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

கருப்பு-சிவப்பு மட்பாத்திரங்கள் பல வகைகளில் காட்சியில் இடம் பெற்றிருந்தன. பிராமி எழுத்துக்களும், குறியீடுகளும் அதிக அளவில் பொறிக்கப்பட்ட மட்கல ஓடுகள் மிக அதிகமாகக் கிடைத்த இடம் கொடுமணலே. எழுத்துக்களும் குறியீடுகளும் பொறிக்கப்பட்ட ஓடுகள் சங்க இலக்கியங்களில் வரும் "ஆதன்", "அந்தை" போன்ற பெயர்களைத் தாங்கி இருந்தன.

நெசவுத் தொழிலில் பயன்படுத்திய தக்ளி, எலும்பினால் செய்யப்பட்ட துணிகள் ஆகியவ்வைகளும் காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் மக்கிப் போகாமல் இருந்த எலும்புக்கூடுகள் காட்சியில் புகைப்படமாகவும் பொருட்களாகவும் இடம் பெற்றன.

இவ்விதம் தமிழகத்தின் பழம் வரலாற்றினைத் தெளிவாக்கும் கொடுமணல் அகழாய்வுப் பொருட்கள் பெரியார் மாவட்ட மக்களின் மனதில் நீங்காத நினைவை உருவாக்கியுள்ளன. இக்கண்காட்சி ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்தது அனைவராலும் பாராட்டப்பட்டது.

பெரியார் மாவட்டத்தில்:

# ஊசிமலைக் கிராமம் தத்து எடுக்கப்பட்டது



"**ஊசி** மலை" எனும் அழகிய சிறிய கிராமம் பெரியார் மாவட்டம் பவானி வேளாண் கோட்டம், அந்தியூர்த்தொகுதியில் உள்ள பர்கூர் மலைப்பகுதியில் அமைந்து உள்ளது. இம்மலைப் பகுதி கடல் மட்டத்தி லிருந்து 925 மீட்டர் உயரத்தில் உள்ளது. இம்மலைப் பகுதியில் 33 குக்கிராமங்கள் உள்ளன. 8,537 ஏக்கரில் ஆண்டுதோறும் விவசாயம் இப்பகுதியில் செய்யப்பட்டு வரு கிறது. அதில் மானாவாரி ராகி முக்கிய சாகுபடிப் பயிராக சுமார் 8,000 ஏக்கரில் பயிரிடப்படுகிறது. நெல் சுமார் 150 ஏக்கரிலும், நிலக்கடலை 75 ஏக்கரிலும், கம்பு, சோளம், தினை வகைகள், மஞ்சள் ஆகியன மீதமுள்ள சிறிய நிலப்பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்கள் ஆண்டுதோறும் ஆனி-ஆடிப் பட்டத்தில் மழையை நம்பி ராகி விதையை விதைப் பார்கள். "விளைந்தால் ஆச்சு...போனால் போச்சு" என்று மெத்தனமாக இருக்க வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு. பழைய சாகுபடி முறைகளையே கையாண்டு வந்த இவர்கள் நல்ல விதை மற்றும் உரம் வாங்க வேண்டுமென்றால் சுமார் 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள அந்தியூர் வந்தாக வேண்டும்.

மலைவாழ் விவசாயிகளுக்கு உள்ள பிரச்சனைகளைக் களைய "மலைப் பகுதி மானாவாரி வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்" என்ற பெயரில் ஒரு திட்டம் துவக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட பகுதியில் வேளாண் துறையில் பணியாற்றும் அனைத்து அலுவலர்களையும் மற்றும் பெரியார் மாவட் டத்தில் விற்பனையில் ஈடுபட்டு வரும் அனைத்து உர நிறுவனப் பிரதிநிதிகளையும் கலந்தாலோசித்து, செயல் வடிவமும் நிர்ண யம் செய்யப்பட்டது.

பர்கூரில் உள்ள ஊசி மலையை முதலில் தத்து எடுத்து, அதனை மேம்படுத்த ஆவன செய்ய வேளாண்மைத் துறை மழை வரும் நாளுக்காகக் காத்திருந்தது. பருவ மழையும் வந்தது. 23-7-89 தேதியன்று கனத்த மழை பெய்தபோதும், பலத்த காற்று வீசிய போதும் இத்திட்டம் எவ்விதத் தடையும் தடங்கலுமின்றி மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர் களால் துவக்கி வைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வி. கே. சுப்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் இத்திட்டத்தின் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கினார். சத்திய மங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.கே. சுப்பிரமணியன், அந்தியூர்த் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. வே. பெரியசாமி, அந்தியூர் ஊராட்சித் தலைவர் திரு. எம். குருசாமிக் கவுண்டர், பர்கூர் ஊராட்சித் தலைவர் திரு. ஏ.பி. பாலசுப்பிரமணியன் ஆகிய மக்கள் பிரதிநிதிகள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

இப்பகுதியைச் சேர்ந்த 131 மலைவாழ் குடும்பங்கள் ஊசி மலையில் தேர்வு செய்யப் பட்டன. இவர்கள் சாகுபடி செய்யும் பரப்பு சுமார் 175 ஏக்கர் நிலமும் சர்வே செய்யப் பட்டது. இந்தப் பரப்பில் உள்ள நிலங்களில் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, இலவசமாக ஆய்வு செய்யப்பட்டுப் பரிந்துரைகள் வழங் கப்பட்டன. ஆனி - ஆடிப் பட்டத்தில் விதைக்க சரியான உயர் விளைச்சல் ரகமாக இண்டாப்-5 எனும் ராகி ரகம் தேர்வு செய்யப்பட்டது.

1.25 டன் எடையுள்ள ராகி விதைகள் ஈரோட்டிலிருந்து இப்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருப்பு வைக்கப்பட்டது. ஸ்பிக், இஃப்கோ, பாக்ட், டாக், ராஷ் டிரியா கெமிக்கல்ஸ், மைசூர் கெமிக்கல்ஸ், பி.பி.சி.எல்., ஸ்டேன்ஸ், சாவாலஸ், ஈ.ஐ.டி. பாரி, நெய்வேலி உர நிறுவனம், இந்தியன் பொட்டாஷ் ஆகிய 12 உர நிறுவனங்கள் சுமார் 13 டன் இரசாயன உரங்களை இலவசமாக வழங்கியது. தழைச் சத்தைக் குறைந்த செலவில் பயிருக்கு வழங் கும் உயிர் உரமான "அசோஸ்பைரில்லம்" நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் 700 எண்கள் உடனடியாக ஊசிமலைக்குக் கொண்டு செல் லப்பட்டது. இருப்பு வைக்கப்பட்ட 1.25 டன் ராகி விதைகள், 13 டன் இரசாயன உரங்கள், 700 நுண்ணுயிர்ப் பொட் டலங்கள் அனைத்தும் மலைவாழ் விவ சாயிகளுக்குத் துவக்க விழாவன்று (23.7.89) அவர்களுடைய சாகுபடிப் பரப்புக்குத் தக்கவாறு இலவசமாகப் பகிர்ந்தளிக்கப் பட்டது. மாண்புமிகு சமூக நலத்துறை மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், ரூபாய் நாற்பதாயிரம் மதிப்புள்ள இவற்றை மலைவாழ் மக்களுக்கு வழங் கினார்கள். விழாவிற்கு வந்திருந்த பல விவசாயிகளுக்குச் சூரியகாந்தி, சோயா மொச்சை, காய்கறி விதைகள், பழ மரக் கன்றுகள், தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

அன்றைய தினம் மலைவாழ் மக்களின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியும் உற்சாகமும் அளவிட முடியாதது. விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானிய உதவிகள் பற்றிய சிறப்புக் கண்காட்சியையும், படக்காட்சியையும் இம்மக்கள் பார்த்துப் பயனடைந்தனர்.

இத்திட்டத்தின் மூலம் தற்போது இப் பகுதியில் மானாவாரி ராகியில் கிடைத்து வரும் சராசரி மகசூலான ஏக்கருக்கு 200 கிலோவை நான்கு மடங்கு அதாவது 800 கிலோவாக உயர்த்த முடியும். வீரிய விதை மற்றும் உர உபயோகத்தின் அவசியத்தையும், பயனையும் மலைவாழ் மக்களும் இத்திட்டத் தின்மூலம் கண்கூடாகக் காண்பார்கள். மலைவாழ் மக்களின் வருமானமும் கணிச மாக உயரும். இத்திட்டம், வருகிற ஆண்டு களில் மேலும் பல மலைப்பகுதி கிராமங் களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது.

—மு.நா. கிருஷ்ணசாமி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரியார் மாவட்டம்

# கோழிச் செல்வம் காப்போம்

சமீப காலத்தில் கோழி வளர்ப்புத் தொழில் நம்நாட்டில் மிகவும் முக்கியத்துவம் பெற்று, நடைமுறையில் வெகு வேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது.

பெரும்பாலான பண்ணைகளில் கோழிகளுக்கு வரும் நோய்களைச் சாதாரணமாகக் கருதி, சரியாகக் கவனிப்பதில்லை. இவ்வாறு செய்வதனால் வெகு சீக்கிரத்தில் நோய் தீவிரமடைந்து அனைத்துக் கோழிகளுக்கும் நோய் பரவுவதோடு, பிற பண்ணைகளுக்கும் எளிதில் நோய் பரவ வாய்ப்பு உண்டு.

ஒவ்வொரு சாதாரணப் பணியிலும் கண்காணிப்புடனும், சிரத்தையுடனும் இருந்தால் கோழிப் பண்ணையில் நோய் பரவுவதை விரைவில் தடுத்து நிறுத்தலாம். அவ்வப்போது தடுப்பூசி போடுதல், தேவையான சமயத்தில் மருந்து கலந்து வைத்தல், முறையான விஞ்ஞான பராமரிப்பு விளக்கங்களைக் கடைப்பிடித்தல் போன்றவை நோய் வருமுன் காப்பதற்கு வழிவகை செய்பவை ஆகும்.

### கோழிகளைத் தாக்கும் நோய்களுக்கான நேரடியான காரணங்கள்

1. வைரஸ், பாக்டீரியா, மஞ்சக்காளான், ஒட்டுண்ணிகள் முதலிய நோய்க் கிருமிகள் மூலம் நோய் பரவுகின்றது.

2. தவறான பராமரிப்பு முறைகள், தீவனப் பொருட்கள், உணவுச் சத்து பற்றாக் குறை, நச்சுப் பொருட்களின் சேர்க்கை போன்ற பண்ணைப் பராமரிப்புக் குறைகளும் நோய் வர நேரடிக் காரணங்களாகும்.

### மறைமுகமான காரணங்கள்

குறைந்த காற்றோட்ட வசதி, மிகுந்த வெப்பம், அதிகக் குளிர், குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் கோழிகளை வளர்த்தல், தீனித் தொட்டி மற்றும் குடிதண்ணீர்த் தொட்டி ஆகியவற்றைக் குறைந்த எண்ணிக்கையில் வைத்தல், குறைந்த அளவு தீனி மற்றும் குடிதண்ணீர் அளித்தல் போன்றவை நோய் பரவுவதற்கான மறைமுகமான காரணங்களாகும்.

### கோழிப் பண்ணையில் நோய் பரவும் விதம்

நோய்வாய்ப்பட்ட கோழிகளை வெளியிலிருந்து பண்ணையில் கொண்டு வந்து விடுதல்.

நோய்வாய்ப்பட்டு இறந்த கோழிகளை முறையான வகையில் அப்புறப்படுத்தாமல் அசிரத்தையுடன் இருத்தல்.

நோயுற்ற கோழிகளைத் தொட்டுப் பணி செய்த வேலையாட்கள், நோய் கண்ட கோழிப் பண்ணையிலிருந்து வரும் மனிதர்கள், பல கோழிப் பண்ணைகளுக்குச் சென்று வரும் ஆட்கள், விற்பனையாளர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், பருந்து, காகம் போன்ற வனப்பறவைகள் மூலம் எளிதில் நோய் பரவ வாய்ப்பாகும்.



### நோயுற்ற கோழிகளுக்குப் பயன்படுத்திய உபகரணங்கள்

அசுத்தமான நீர்.

அசுத்தமான தீனி மற்றும் தீனிக் கோணிகள்.

நோயுற்ற கோழிகளின் எச்சம், ஆழ் கூளம், நோய்க் கிருமிகள் அதிகமுள்ள மண், உரம் போன்றவை வெகு விரைவில் நோய் பரப்ப வகை செய்வனவாகும்.

பெருச்சாளிகள், பூச்சிகள் போன்றவை நோய் பரப்பும் காரணங்களாகும்.

நோய்க் கிருமிகள் கலந்த அசுத்தமான காற்று வெகு தூர இடைவெளியில் இருந்தாலும் மிக எளிதில் நோயைப் பரப்புவதாகும்.

நோய் கண்ட கோழிப் பண்ணையிலிருந்து வரும் கோழி முட்டை மற்றும் கோழி இறைச்சி போன்ற பண்ணைப் பொருட்கள் நோய் பரப்ப வகை செய்வனவாகும்.

### நோய் பரப்புதலைத் தவிர்க்கும் முறைகள்

(அ) கோழிகளை ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குக் (பிற பண்ணைகளிலிருந்து புதிய பண்ணைகளுக்கு) கொண்டு போகாமல் தவிர்க்க வேண்டும்.

(ஆ) அநாவசியமாக வெளியாட்களைக் கோழிப் பண்ணைக்குள் அனுமதிக்கலாகாது. (குறிப்பாக, கோழி வியாபாரிகள், விற்பனையாளர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் மற்றும் பிற பணியாளர்கள்) அவசியம் அவர்கள் பண்ணைக்கு உள்ளே வர வேண்டி இருந்தால், தகுந்த முறையில் கை, கால்களைக் கழுவிச் சுத்தம் செய்து கொண்டு கிருமி நாசினி கலந்த நீரில் நனைத்து, பொறுப்பான

## கணேச தரிசனம்

விநாயக சதுர்த்தி வருவதை ஒட்டி 'கணேச தரிசனம்' காண அழைத்தது பூம்புகார்!

போய்ப் பார்க்கிறோம்.

அரச மரத்தடியில் அழகாய் வீற்றிருக்கும் பிள்ளையாரையே பார்த்துப் பழக்கப்பட்டுப் போன நமக்குத்தான், எத்தனை வகையான கணேச விக்கிரகங்கள் இங்கே காட்சியளிக்கின்றன!

தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் கைவண்ணத்தால் உருவான இந்த விக்கிரகங்கள் கலையெழில் மிக்கவை.

கல், மண், துணி, காகிதம், உலோகம், வெள்ளெருக்கு ஆகியவற்றால் செய்யப்பட்ட விநாயகர் சிலைகள் தஞ்சை மாவட்டம் சுவாமிமலை, சென்னைக் கொசப்பேட்டை, வடபழனி, மகாபலிபுரம் ஆகிய இடங்களிலிருந்து தயாராகி வருகின்றன.

சென்னை அண்ணாசாலையில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைகளின் விலை எவ்வளவு தெரியுமா? குறைந்த விலை ரூ. 20. அதிக விலை ரூ. 75,000.

இந்த ஆண்டு, இக்கண்காட்சியையொட்டி சிறப்புத் தயாரிப்பாக 'கணேச தீபம்' என்கிற கணேசர் உருவம் பொறித்த விளக்கை அறிமுகப்படுத்தியிருக்கிறது பூம்புகார். இது காமாட்சி



விளக்கைப் போன்றது. பித்தளையால் செய்யப்பட்ட இந்தத் தீப விளக்கு, சரவிளக்காகவும் கிடைக்கிறது. இது துலக்குவதற்குச் சுலபமாகக் கழற்றி மீண்டும் பொருத்திக் கொள்ளும் வசதியுடையது. இதன் விலை ரூ. 46-லிருந்து ரூ. 1200 வரை. இந்த அழகிய விளக்கு மதுரை மற்றும் நாச்சியார் கோவிலிலிருந்து தயாராகிறது''.

ஆகஸ்டு 21 முதல் 15 நாட்களுக்கு நடைபெற்றது இந்தக் கண்காட்சி.

''கடந்த ஆண்டு இந்தக் கண்காட்சி மூலமாக ரூ. 3 இலட்சம் சிலைகள் விற்பனையாகியுள்ளன. இந்த ஆண்டு ரூ. 3.75 இலட்சம் விற்பனையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக பூம்புகார் கடந்த ஆண்டு ரூ. 5 இலட்சத்துக்குக் கலைப் பொருள்களை ஏற்றுமதி செய்தது. இவ்வாண்டு, ரூ. 10 இலட்சம் விற்பனையாகுமென எதிர் பார்க்கப்படுகிறது'' என்கிறார் பூம்புகார் நிலைய மண்டல மேலாளர் திரு. என். ஆர். இராமலிங்கம்.

கண்காட்சி முடிந்தாலும், கணேசர் சிலைகளை எப்போதும் இங்கே வந்து பெற்றுக் கொள்ளலாம்.

-பி.வி. ஜி.

---

சுகாதார முறையைக் கடைப்பிடித்து பண்ணையினுள் அனுமதிக்க வேண்டும்.

(இ) கோழிப் பண்ணையின் நுழைவாயிலில் சுண்ணாம்புத் தூளைத் தூவியோ அல்லது பார்மலிங் போன்ற கிருமி நாசியினைக் கலந்து வைத்தோ இருக்க வேண்டும்.

கோழிப் பண்ணையினுள் நுழையும் போது கால்களைக் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்து விட்டு வரவேண்டும். ஊர்திகள், வண்டிகள் நுழையும் போதும் கிருமிநாசினி கொண்டு இந்த முறையில் சுத்தம் செய்தல் சிறந்தது.

(ஈ) கோழிக்குஞ்சுகள் மற்றும் கோழிகளைக் கூடுமான வரையில் நம்பகமான, பெயர் பெற்ற, நோயற்ற பண்ணையிலிருந்து வாங்கி வளர்க்க வேண்டும்.

(உ) கோழிகளுக்குச் சுத்தமான தீனியை, அனைத்துச் சத்துக்களும் தேவையான அளவு நன்கு கலந்து புதிய கோணிகளில் பெற வேண்டும்.

(ஊ) கோழி வீட்டினுள் வெளியில் இருந்து எலி மற்றும் பிற வனப் பறவைகள் போகாத வண்ணம் கம்பி வலையால் நன்கு பாதுகாப்பாக அமைக்க வேண்டும்.

(எ) கோழிகளுக்குத் தேவையான ஒளி, வெப்பம் அவற்றின் வயதுக்கேற்பவும் வகைகளுக்கு ஏற்பவும் அளிக்க வேண்டும்.

(ஏ) கோழிகளுக்குத் தேவையான இட வசதி, தண்ணீர்த் தொட்டி, தீவனத் தொட்டியின் அளவு, எண்ணிக்கை போன்ற அனைத்து உபகரணங்களையும் முறையாகக் கோழிகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உபயோகப்படுத்த வேண்டும். சிறந்த பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(ஐ) கோழிகளை அகற்றியவுடன் வீட்டினை நன்கு சுத்தம் செய்ய வேண்டும். கிருமிநாசினி கொண்டு நன்கு தெளிக்க வேண்டும். தரை மற்றும் சுவருக்குச் சுண்ணாம்பு அடித்துச் சுத்தமாக வைக்க வேண்டும்.

(ஒ) கோழிகளுக்குச் சுத்தமான குடி தண்ணீரை எப்போதும் தண்ணீர்த் தொட்டியில் இருக்குமாறு செய்ய வேண்டும்.

(ஓ) தடுப்பூசிகள் மற்றும் தடுப்பு மருந்துகள் போன்றவற்றை அவ்வப்போது முறையாகத் தகுந்த அளவில் கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி பயன்படுத்த வேண்டும்.

நோயுற்ற கோழிகள் இறந்தால், உடனே அவற்றை எரித்து விட வேண்டும் அல்லது குழிகளில் சுகாதார முறையால் சுண்ணாம்புத் தூள் தூவிப் புதைக்க வேண்டும்.

நோயுற்ற கோழிகளைத் தனிமைப் படுத்தி நோய்க்கான காரணமறிந்து சரியான மருந்தளித்தல் வேண்டும். சாதாரணமாக எண்ணிக் கொண்டு அசிரத்தையாக விட்டு விட்டால் நோய் மேலும் வெகு சீக்கிரம் பரவித் தொல்லை விளைவிக்கும்.

மேற்கூறிய முறையில் கோழிப் பண்ணையில் நோய் பரவும் விதத்தை அறிந்து, அவற்றினைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுத்து நோயின் பாதிப்பிலிருந்து கோழிச் செல்வத்தைக் காத்து, கோழிப் பண்ணையைத் திறம்பட நடத்திப் பயன் பெறலாம்.

-(டாக்டர்.இரா. ஆஷாரஜினி,
டாக்டர்.ந. இராமமூர்த்தி,
டாக்டர்.க. இராஜகோபாலன்,
டாக்டர்.இரா. குமாரராஜ்

(கோழியின அறிவியல் துறை,
சென்னை கால்நடை
மருத்துவக் கல்லூரி, சென்னை)

## மாணவர் பக்கம்



# சிறுதொழில் ஒன்றைச் செய்திடுவோம்!

அ. சுப்பையன்

சிறுதொழில் ஒன்றைச் செய்திடுவோம்!
சிறப்புற வாழ்வை அமைத்திடுவோம்!
வருமா னத்தைப் பெருக்கிடவே
வழிகள் நாமும் கண்டிடுவோம்!

நல்ல தொழிலாய்த் தேர்ந்தெடுத்து
நாடி நாமும் செய்திட்டால்
எல்லா மனிதரும் விரும்பிடுவர்;
ஏற்றம் பெற்றே உயர்ந்திடுவர்.

எந்தத் தொழிலும் செய்யாமல்
இருப்பது பெரிய பாவமன்றோ?
குந்தித் தின்றால் கோபுரமும்
குறையும் என்பது உண்மையன்றோ?

நிந்தனை செய்யும் தொழிலதனை
நினையோம் என்றும் கனவிலுமே!
சிந்தனை செய்வோம்; செயல்படுவோம்!
சீரும் சிறப்பும் பெற்றிடுவோம்!


## விளையும் பயிர்:

சென்னை சாந்தோம் மான்போர்டு பள்ளியில் 5-ஆம் வகுப்புப் பயிலும் மாணவன் எஸ்.கே. முகமது ரபி.

ஒன்பது வயதான இம்மாணவன், நீச்சல் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்று உள்ளான்.

அண்மையில் பெங்களூரில் தேசிய அளவில் நடந்த நீச்சல் போட்டியில் தங்கம், வெள்ளி, இரண்டு வெண்கலம் ஆகிய நான்கு பரிசுகளைப் பெற்று அனைவராலும் பாராட்டப்பட்டான்.

தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத்தின் நீச்சல் பயிற்றுநர் திரு. டி. சந்திரசேகர் இத்துறையில் இவனுக்குத் தக்க பயிற்சி அளித்து வருகிறார்.



## பொது அறிவுச் சுடர்

1. இரண்டாவது உலகப் போரில் பங்கு பெறாத நாடு எது?
2. தமிழில் தோன்றிய முதல் மாத இதழ் எது? தோன்றிய ஆண்டைக் குறிப்பிடு.
3. உலகிலேயே மிகப் பெரிய தீவு எது?
4. இந்தியாவிற்கு வருகை புரிந்த முதல் அமெரிக்க ஜனாதிபதி யார்?
5. அமெரிக்க நாட்டின் முதல் ஜனாதிபதி யார்?
6. இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?
7. உலகிலேயே மிகப் பெரிய பறவை எது?
8. நீந்தத் தெரியாத நான்கு கால் பிராணி எது?
9. திரவங்களின் ஒப்படர்த்தி காணப்பயன்படும் கருவியின் பெயர் என்ன?
10. கடலின் ஆழத்தைக் கண்டறியப்பயன்படும் கருவியின் பெயர் என்ன?
11. இப்பொழுது உலகெங்கும் பயன்படுத்தப்படும் காலண்டருக்கு என்ன பெயர்?
12. முன்பு பாபிலோனிய என்று அழைக்கப்பட்ட பிரதேசத்தில் இன்று இருக்கும் நாடு எது?
13. 'நடு இரவு சூரியன்' என்றழைக்கப்படும் நாடு எது?
14. 'லிரா' என்பது எந்த நாட்டு நாணயம்?
15. தமிழில் தோன்றி அழிந்து போன முதல் இலக்கண நூல் எது?

-கிருஷ்ண முத்துராமலிங்கம்

### விடைகள்:

1. கனடா;2. தமிழ்மாகசீன், ஆண்டு-1831;3. கிரீன்லாந்து;4. ஐசன்ஹோவர்; 5. ஜார்ஜ் வாஷிங்டன்;6. ராகேஷ் சர்மா; 7. நெருப்புக் கோழி;8. ஒட்டகம்;9. ஹைட்ரோ மீட்டர்;10. ஃபாத்தோ மீட்டர்;11. கிரிகோரியன் காலண்டர்;12. இராக்;13. நார்வே;14. இத்தாலி;15. குமரவேல் இயற்றிய 'குமரம்'

# குழந்தைப் பாடல்கள் எப்படி இருக்க வேண்டும்?



குழந்தைப் பாடல்களில் தெளிவு, எளிமை இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் குழந்தைப் போக்காக அழகுணர்ச்சியும் இருத்தல் வேண்டும்.

குழந்தைகள் எப்படி, சின்னச் சின்னக் கற்பனைகள் செய்யுமோ, அதைப்போலக் கவிஞன் நினைத்து எழுத வேண்டும்.

குழந்தை மழையில் நனைய ஆசைப்படுகிறது. பெரியவர்கள் அதைத் தடுக்கிறார்கள். ஆனால் பூ மழையில் நனைகிறது. குழந்தை அதைப் பார்க்கிறது. மழையில் நனைவது ஒரு சுகம். அதைப் பாடலாக-குழந்தை செய்வதுபோல அமைக்க வேண்டும்.

குழந்தைப் பாடல்களில் எளிய சொற்கள் இடம் பெற வேண்டும். குழந்தைகளின் வாயில் நுழைவதற்கேற்பச் சொற்கள் சிதையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, இன்றைய குழந்தைகளுக்கு ஏற்பவும் சொல்ல வேண்டும். காலத்துக்கு ஏற்ப குழந்தைகளின் மனநிலை மாறுபடுவதை நாம் பார்க்க வேண்டும்.

நல்ல கருத்துக்களைக் குழந்தைகளுக்குச் சொல்ல வேண்டும். ஆனால், அது பாடப் புத்தகம் போல் ஆகிவிடக் கூடாது.

உபதேசப் பாடல்கள், நேரடியாக உபதேசம் செய்வதுபோல இல்லாமல், குழந்தை தானாகவே புரிந்து கொள்வதுபோல அமைக்க வேண்டும். அதாவது, இன்னொரு குழந்தை சொல்வது போல அதைப் பக்குவமாகச் சொல்ல வேண்டும். பாங்காகவும் சொல்ல வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக குழந்தை எழுத்தாளருக்குக் குழந்தை உள்ளம் வேண்டும். அதுதான் முக்கியம். குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் குழந்தை இலக்கியத்துக்காகவே வாழ்ந்தார். அவர் வழியைக் குழந்தை எழுத்தாளர்கள் பின்பற்ற வேண்டும்.

**-குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய கூட்டத்தில் சாகித்திய அகாடமியின் முன்னாள் துணைச் செயலாளரும், குழந்தை எழுத்தாளருமான திரு. தம்பி சீனிவாசன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.**

# முதன்மை வகித்த இந்தியப் பெண்கள்



| | | |
|---|---|---|
| முதல் பெண் பிரதமர் | : | இந்திரா காந்தி (1967-1984) |
| முதல் பெண் முதலமைச்சர் | : | சுஜாதா கிருபாளினி (உத்திரப் பிரதேசம்) |
| முதல் பெண் கவர்னர் | : | சரோஜனிநாயுடு (உத்திரப் பிரதேசம்) |
| முதல் பெண் மத்திய மந்திரி (கேபினெட்) | : | ராஜ் குமாரி அமிர்த கவுர்(சுகாதார மந்திரி 1957) |
| முதல் பெண் கமிஷனர் | : | எஷா பசந்தி கஷாஷி (ஐ. ஏ. எஸ்.) உத்திரப்பிரதேசம்-1966. |
| முதல் பெண் மேயர் | : | அருணா ஆசப் அலி, ஏப்ரல் 1958 டில்லி முனிசிபல். |
| முதல் பெண் ஐ.ஏ.எஸ். | : | அண்ணா ராஜம் ஜார்ஜ், கேரளா-1950. |
| முதல் பெண் தூதர் | : | விஜயலட்சுமி பண்டிட், ரஷ்யா (1947 — 1949.) |
| முதல் பெண் ஐ. எப். எஸ். | : | சி.பி. முத்தம்மா 1970 — 1975 ஹங்கேரி நாட்டில் தூதுவராகப் பதவி வகித்தார். |
| முதல் பெண் ஐ. பி. எஸ். | : | திருமதி. கிரான்பேடி, புது டெல்லியில் பதவி வகித்தார். |
| முதல் பெண் ஐ.நா. சபைத் தலைவர் | : | விஜயலட்சுமி பண்டிட், 1953. |
| தேர்தலில் நின்ற முதல் பெண் | : | கமலா தேவி சட்டோபாத்யா 1926-இல் நின்றார். குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். |
| முதல் பெண் டாக்டர் | : | ஆனந்த்பாய் ஜோசி 1865 1887. அமெரிக்காவில் பட்டம் பெற்று குறைந்த வயதிலேயே இறந்தார். |
| முதல் பெண் இஞ்சினீயர் | : | ஏ. லலிதா 1937 (சிவில்) |
| முதல் பெண் வக்கீல் | : | ரெஜினா குப்தா, 1922. |
| முதல் பெண் துணை வேந்தர் | : | ஹான்ச மேத்தா, பரோடா பல்கலைக் கழகம் |
| முதல் பெண் முதல்வர் | : | குமுதினி தாஸ். 1930. |
| முதல் பெண் பைலட் | : | கேப்டன் துர்கா பானர்ஜி. |



ஆதாரம்:
Gandhi's Indian Records

-தகவல்: இராய. பரமசிவம்
II பி. ஏ., (வரலாறு)
அரசினர் கலைக் கல்லூரி,
நந்தனம்,
சென்னை-35

# நூல்நயம்

### மகாகவி பாரதி-சில சிந்தனைகள்

ஆசிரியர்: நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப.,
வெளியீடு: ஸ்ரீபுவனேஸ்வரி பதிப்பகம்,
2,மாடல் ஹவுஸ் லேன்,
சி.ஐ.டி. நகர்,
சென்னை-600035.

விலை ரூ. 10/- பக். 128.

பாரதியாரின் கருத்துகளைப் பல்வேறு கோணங்களில் கண்டு ஆய்ந்து தெளிந்து எழுதப்பட்ட பதின்மூன்று கட்டுரைகளைக் கொண்ட சிறந்த நூல் இது.

பாரதியாரின் கல்விக் கண்ணோட்டம், விஞ்ஞானச் சிந்தனைகள், சுற்றுப்புறச்சூழல் கண்ணோட்டம் என்பன காலத்திற்கேற்ற பயனுள்ள புதிய தலைப்புகள். பள்ளிகள் அமையவேண்டிய முறை, செயல்பட வேண்டிய முறை பற்றிய பாரதியாரின் கருத்துகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. கிராமப்புறக் கல்வி வளர்ச்சியில் அவருக்கிருந்த ஆர்வம் விளக்கப்படுகின்றது. இன்றைய பல பிரச்சினைகளுக்குத் தீர்வையும் அது சுட்டிக்காட்டுகிறது.

மாணவரும் இளைஞரும் அறிவியல் துறையில் ஈடுபட்டு, உலக அரங்கிலே பீடு நடைபோட வேண்டும், கல்வி என்பது வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் அமையவேண்டும் என்றெல்லாம் விரும்பிய பாரதியின் சிந்தனைகள் போற்றப்படுகின்றன. அனைவரும் படித்துப் போற்ற வேண்டிய நூல்.

-சிவஅரசி முத்துக்காளத்தி

### உயில்பற்றிய சட்டங்கள்

ஆக்கியோர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு
வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்,
தணிகாசலம் சாலை, தியாகராய நகர்,
சென்னை-600 017.

விலை:ரூ.13.50 பக்கம்:140

உயில் என்று சொல்லப்படும் விருப்ப ஆவணம் குறித்துப் பல்வேறு தகவல்கள் இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

உயில் எழுதும் முறை, பின்னர் உயிலை நீக்கும் விதம், சிறப்புரிமை பெற்ற உயில், உயிலின் அவசியம் ; பொய் உயில், இணை உயில், உயில் எழுதத் தகுதியுள்ளவர்கள், கொடைக்கும் உயில் வழி உரிமைக்கும் உள்ள வேறுபாடு, இப்படிப் பல்வேறு செய்திகள் தக்க வகையில் விளக்கப்பட்டிருக்கின்றன இந்நூலில்.

உயிலின் மாதிரிகள் இந்நூலில் தரப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

எவரும் புரிந்துகொள்ளக்கூடிய எளிய நடையில் எழுதப்பட்டிருப்பது சிறப்புக்குரிய தாகும்.

—எஸ்.எஸ். சுந்தரம்.

### போலீஸ் சட்டங்கள்

ஆசிரியர்: டாக்டர் சோ.சேஷாசலம்
வெளியீடு: குமரன் பதிப்பகம்
2, முத்துக் கிருஷ்ணன் தெரு
தியாகராய நகர்,
சென்னை-600017

விலை:ரூ. 6. பக்கம்:71

அரசு அமைப்புகளின் சட்டதிட்டங்கள் பற்றி பல்வேறு நூல்கள் வெளிவந்துள்ளன. காவல்துறையின் சட்டதிட்டங்கள் குறித்து சராசரி மனிதனும் அறிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தெளிவான முறையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

குற்றங்களுக்கான தண்டனைகள், நீதி மன்றத்தின் கடமை, காவல்துறையின் பணி, காவல்துறை மற்றும் நீதிமன்றங்களில் பயன்படுத்தப்படும் சட்ட சம்பந்தமான வார்த்தைகள் ஆகியவற்றுக்கான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

-வி. இராவணன்.

### முன்னேற முன்னூறு:

ஆசிரியர்: கவிஞர் டாக்டர் இராசதேவன்
வெளியீடு: சாந்தினி பதிப்பகம்,
2 கண்ணப்பர் சாலை,
அசோக் நகர்,
சென்னை-600 083

விலை:ரூ.15 பக்கம்:102

'வாழ்க்கை வாழ்வதற்கே' முதல் 'வாழ்க்கையில் முன்னேற முத்தான பத்து யோசனைகள்' வரை 12 கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

நூலாசிரியர் காவல்துறை உயர்அதிகாரி. காக்கிச்சட்டைக்குள்ளும் கனிவான எண்ணங்கள் உதயமாகலாம் என்பதை எடுத்துக் காட்டுவது போல அமைந்துள்ளது நூல். ஒவ்வொருவரும் வாழ்வில் வெற்றிபெறத் தக்க வழிவகைகள் இந்நூலில் அணிவகுக்கின்றன. நல்வாழ்வுக்கான வெளிச்சக் கருத்துக்கள் ஒளிசிந்துகின்றன.

இளைஞர் முதல் முதியோர் வரை, இதனைப் படித்துப் பயன்பெறலாம்.

—'சோழராஜா'

### இந்து சமயப் பெரியார்கள்

ஆசிரியர்: புலவர் அண்ணாமலை
வெளியீடு: பம்மி பதிப்பகம்
32, வெங்கட்டரங்கம்
பிள்ளைத் தெரு
சென்னை-5

விலை:ரூ.9 பக்கம்:92

முன்னோர்களின் வாழ்க்கை வரலாறுகள், நம் வாழ்க்கையைப் பண்படுத்த உதவுபவை. குறிப்பாக இளஞ்சிறார்களுக்கு வழிகாட்டியாக விளங்குபவை. அந்த வகையில், இந்த நூலில் ஆதிசங்கரர், மாணிக்கவாசகர், ஆண்டாள், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரின் வரலாற்றை ஆசிரியர் நயம்பட எழுதியுள்ளார். மாணவர்கள் படித்துப்பயன்பெற வேண்டிய நூல்.

—பி.வி. கிரி

### 'வேப்பிலை'

ஆசிரியர்: எஸ். குலசேகரன்
வெளியீடு: அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர்
வேலூர் (வ.ஆ) 632 001.

விலை:ரூ.12.50 பக்கம்:124

சிறு நாடகங்களின் தொகுப்பு இந்நூல். இந்நாடகங்கள்யாவும் வானொலியில் ஒலி பரப்பப்பட்டவை.

சற்று வித்தியாசமாய் வறுமைக்கோட்டுக்குக் கீழே உள்ளவர்களையும், எளியவர்களையும் விவரிக்கின்றன இந்நாடகங்கள்.

செருப்புத் தைப்பவர்கள், கழிப்பறை சுத்தம் செய்வோர், வீடு வீடாக விற்பனைக்கு ஏறி இறங்கும் விற்பனையாளர்கள் என்று பல பாத்திரங்களின் குறிக்கோள்கள், ஆசாபாசங்கள், அவர்களுக்கே அமையும் சூழ்நிலைகள் என்று பல சம்பவங்களை இந்நாடகங்களில் பிணைத்திருக்கிறார் ஆசிரியர்.

கதையை நாடகங்கள் மூலம் சொல்லத் தேவையான பாத்திரங்கள், உரையாடல்கள், சம்பவங்கள் ஆகியவை மிகையின்றி அளவோடு கையாளப்பட்டிருக்கும் சிறப்பு பாராட்டுக்குரியது.

—என். குமாரசாமி,

# வெள்ளை மனம் கொண்ட அண்ணா

புலவர் தமிழ்ப்பித்தன்

சங்கீதப் பேச்சொலியால் சத்தியச் சொல்தந்து
சமத்துவ விருந்து படைத்து
சந்தித்த செயலெல்லாம் சிந்தித்து முடிவாக்கி
சதிகாரர் தீச்செயல் வென்று

மங்காத பேரன்பு மாசற்ற தோர்நண்பு
மறவாத தாய்மொழித் தொண்டு
வளமாரத் தொடுத்து உளமாரக் கொடுத்து
வாழ்நாளில் வாய்மையொடு நின்று

கங்காத ரன்கந்தன் கடல்வண்ணன் எனநீண்ட
கடவுளர்தம் பட்டியல் கண்டு
கனிவான ஒருதேவன் இனிதாக உண்டென்று
கருத்தாழம் நெஞ்சிற் கொண்டு


வெங்காரச் சொல்வெடியை மாற்றார்கள் வெடித்தாலும்
விருப்பாக அவர்பால் பழகும்
வெள்ளைமனத் துரையே!எமைக் கொள்ளையிடும் திருவே
வெள்ளம்நிகர் காஞ்சி அண்ணனே!

'தம்பீ' எனத் தயவாய்த் தாய்த்தமிழால் அழைத்து
தகவுடனே நாள்தோறும் உரைசெய்து
தணியாத கடமை அணியாக அணிந்து
தாயினும் சாலப் பரிந்து

'நம்பீ! உனை நம்புகிறேன் நல்லவனே' என்றுரைத்து
நாகரிகப் பாடம் உணர்த்தி
நலமெல்லாம் சேர்ந்துவர பலமெல்லாம் மிகுந்துவர
நன்மைதரும் பாதை அமைத்து

வம்பீதென ஒதுங்கும் மாந்தர்க்கு நம்நாட்டு
வரலாற்றுச் சேதி படித்து
வலுவான இனமென்று மாற்றாரும் ஒப்பிவர
வகையாக வெற்றி படைத்து.

வெம்பீஉயிர் விட்டொழியும் வேதனைக் காரருக்கு
விரிவாக விளக்கம் செய்யும்
வெள்ளைமனத் துரையேஎமைக் கொள்ளையிடும் திருவே
வெள்ளம்நிகர் காஞ்சி அண்ணனே!



# தீர்ப்பளியுங்கள்!

என் நண்பர், மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளை, கோர்ட்டிலே மட்டுந்தான் கோபமாகக் காணப்படுவார், அதைக்கூட அவர் கோபமென்று ஒப்புக்கொள்வதில்லை. நீதியின் உருவம்! என்று கூறுவார். ''என்னமோ மருது! நீதி இப்படி மிரட்டும் உருவிலே இருப்பது எனக்குப் பிடிப்பதில்லை'' என்று நான் கூறுவதுண்டு—கோர்ட்டு நேரத்தில் அல்ல.

அன்று மாலை, மருதவாணம் பிள்ளை, என்னைக் கண்டதும், ''வா, வா! உன்னைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். நாளைக்கு ஒரு வழக்கிலே தீர்ப்பளிக்க வேண்டும். உன்னிடம் அதைக்கூறி, உன் தீர்ப்பு என்ன என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்'' என்று கூறினார்.

''இதுதானா எனக்கு வேலை! உனக்குத்தான் சர்க்காரிலே சம்பளம் தருகிறார்கள். சட்டத்தைப் பரிபாலனம் செய்ய, எனக்கேன் அந்த வேலை?'' என்று நான் கேலியாகக் கூறினேன்.



''உனக்கே மாஜிஸ்ட்ரேட் வேலை கிடைத்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளேன்'' என்றார் மருதவாணம், மாலை வேளையிலே அவருக்கு இயல்பாகவே மலரும் மகிழ்ச்சியுடன்.

''எனக்கு அந்த வேலை கிடைத்தால்தானே!'' என்று நான் கொஞ்சம் கம்பீரமாகக் கூறினேன். மருதவாணர், மாஜிஸ்ட்ரேட் குரலிலே ஆரம்பித்தார்:

''பெயர் மகாலிங்கம், வயது முப்பது. தொழில் நிலையாக ஒன்றுமில்லை; குற்றச்சாட்டு, பித்தளைச் சங்கிலியைத் தங்கச் சங்கிலி என்று ஏமாற்றி விற்றான்- இதுதான் வழக்கு, இதிலே தீர்ப்புக் கூற வேண்டும்."

''சரி! மகாலிங்கத்தின் வாக்குமூலம் என்ன?'' என்று கேட்டேன், ஒரு அதிகாரி போலவே.

''அதிலே சிக்கல் ஒன்றும் இல்லை. அவன் ஒப்புக் கொள்ளுகிறான்'' என்றார் மருதவாணம்.

''இவ்வளவுதானா? இதிலே யோசனைக்கு என்ன இடமிருக்கிறது? குற்றவாளி, குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறான். உடனே சட்டப்புத்தகத்திலே, அந்தக் குற்றத்திற்காகச் செக்ஷன் என்ன, அதற்கான தண்டனை என்ன என்று பார்க்க வேண்டியதுதானே! இதற்கு என்னைப் பரீட்சிக்க என்ன இருக்கிறது?'' என்று நான் கூறினேன்.

''தங்கச் சங்கிலி என்று முலாம் பூசியதை விற்றிருக்கிறான். ஒப்புக்கொண்டுமிருக்கிறான், சாட்சியங்களும், அதேபோல அப்பு அழுக்கு இல்லை என்றாலும் இது சிக்கலான பிரச்னை'' என்றார் மருதவாணர்.

''வேடிக்கையாகவன்றோ நீர் பேசுகிறீர்'' என்று நான் கொஞ்சம் மரியாதையாகவே சொன்னேன்; நண்பரின் முகத்திலே, கோர்ட்டுக்களை தட்டுவது கண்டு; கொஞ்ச நேரம் மௌனமாகவே இருந்தார் மருதவாணர். கவலையுடன் காணப்பட்டார், எனக்கு ஏதாவது பேசி வைப்போம் என்ற எண்ணம் உண்டாயிற்று.

# பேரறிஞர் அண்ணா

''மகாலிங்கம் என்ற ஆள்-தெரிந்தவனா?'' என்றேன் நான். உடனே மருதவாணரின் உடல் குலுங்கிற்று. முள் தைத்தவர் அலறுவதுபோன்ற குரலிலே, ''தெரிந்தவனானால் என்ன, தெரியாவிட்டால் என்ன? நீதியின் கண்களுக்குச் சிநேகிதன், பந்து, இவைகள் உண்டா? பைத்தியக்காரா?! எனக்கு எப்போதும் அம்மாதிரி எண்ணம் வருவதே கிடையாது, யாருக்கும் வரக்கூடாது. நீதியின் சக்கரம் சாமான்யமானதல்ல'' என்று கூறினார். இதேது, இன்று இரவு நெடுநேரம் வரையிலே இவருடைய உபதேசத்தைக் கேட்கவேண்டும் போலிருக்கிறதே'' என்று நான் சற்று பயந்தேன்.

''மகாலிங்கம் கள்ளன், அயோக்கியன், குடியன் இவற்றிற்கு ருஜூ இருக்கிறது'' என்று தனக்குத் தானே கூறிக் கொள்பவர்போலப் பேசினார் என் நண்பர்.''

''சரி! ருஜூ இருக்கும்போது, கள்ளனை, அயோக்யனைத் தண்டிக்க வேண்டியதுதானே, இதிலே தயவு தாட்சணியம் என்னமோ இல்லை. கூடாது. இன்னம் யோசனை ஏன்?'' என்று நான் மாஜிஸ்ட்ரேட்டானேன், மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளையோ ஒரு விசித்திர வக்கீலானார்.

''மகாலிங்கம் கள்ளன், அயோக்யன், குடியன் என்பதற்கு எப்படி ஆதாரம் இருக்கிறதோ, அதே போலவே அவன் சாது, யோக்யன், ஏமாந்தவன் என்பதற்கும் ருஜூ இருக்கிறது'' என்றார்.

உண்மையிலேயே இது சிக்கலான பிரச்னைதான், என் நண்பர் கவலைப்படுவதற்குக் காரணம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

வேடிக்கையாக இருக்கிறதே சொல்வது! யோக்யன், அயோக்யன், என்று ஒரே ஆளை எப்படி கூறுவது? அமாவாசை,பௌர்ணமி தினத்தில் எனக்கூறுவதுபோன்று இருக்கிறதே!'' என்று நான் உவமையை உதவிக்கு இழுத்தேன்.

மருதவாணர் அதிலும் சளைக்கவில்லை. ''பச்சை ஓணான், அடிக்கடி நிறம் மாறும், தெரியுமா?'' என்று கேட்டார்.

''ஆமாம் என்று நான் இருந்தேன். என்ன ஆமாம்! எதற்கும் ஆமாம்சாமி போடுகிறாய். ஊரைக் கொளுத்துவது தவறுதானே?'' என்று வேறோர் கேள்வியைக் கேட்டார். திடுக்கிட்டு, ''நிச்சயமாகத் தவறுதான்'' என்றேன். ''தவறுதான்''! ஆனால் இலங்கா தகனம் புண்ய காரியமாகப் பாவிக்கப்படவில்லையா?'' என்றார் நண்பர். இதேது வம்பு வளர்ந்தபடி இருக்கிறதே என்று அஞ்சி, ''அது வேறு விஷயம்! அரக்கனுடைய ஊரை அனுமார் கொளுத்தினார், அது ...'' என்று முடிக்கவே அவசியமில்லாத வாசகத்தை வீசினேன். ''அது கடவுள் விஷயம், அது தானே உன் வாதம்'' என்று என் நண்பர் என் வாசகத்தை முடித்துவிட்டு, மேலே பேசலானார்; ''மகாலிங்கம் யோக்யன்தான், அயோக்கியனுந்தான்! ஏமாற்றினான் என்பதும் உண்மை, ஏமாந்தான் என்பதும் உண்மைதான்!'' என்றார்.

''எனக்கு விளங்கவில்லையே! கோர்ட்டிலே வந்த சாட்சிகள், அவன் யோக்யன், சாது, ஏமாந்தவன் என்றா சொன்னார்கள்?'' என்று கேட்டேன். அதுதானே கிடையாது! கோர்ட்டிலே அவ்வித சாட்சியே கிடையாது'' என்று கூறிவிட்டு, உள்ளே சென்றார். சில கடிதங்களுடன் வந்து சேர்ந்தார், ஒன்றை எடுத்தார்.

''இதோ பார். இது குலாப்சந்த் சௌகார் சாட்சியம். ''கொஞ்சம் இருட்டு. நம்பள் கடையிலேயும் விளக்குச் சரியா இல்லை. எண்ணெய் ரேஷன் காலம். சங்கிலி கொடுத்தான். எத்தனை சவரன்? இது நம்பள் கேட்டது. எடை போட்டு பார் சேட்! அவன் சொன்னான். நம்பள்கி சந்தேகம். என்னா? சங்கிலி கொண்டாந்தவுன் எடை சொல்லாமே ஏன் இருக்கான்னு யோசிச்சான், நம்பள் சந்தேகம் வந்தாச்சா, உடனே போலீசுக்கு ஆள்விடுவான். பத்து வருஷமா நம்பள் வியாபாரம் இப்படித்தான், சாயா சாப்பிட்டு வர்ரேன்னு சொல்லி போனேன். 308 கான்ஸ்டெபிள் மூலைக் கடைப்பக்கம் இருந்தான், கூப்பிட்டு வந்து காட்டினேன், லாக்கப் ஆனான் நம்பள், ராம்ஜீ தயவிலே ஆபத்திலே மாட்டாமே தப்பினான்.''

இது மற்றொரு சாட்சி, சதாசிவம் வாக்குமூலம்:

''தங்க மூலாம் பூசிய சங்கிலியை விற்றுத் தந்தால் எனக்குப் பாதி பாகம் தருவதாக மகாலிங்கம் என்னைக் கூப்பிட்டான், சங்கிலியையும் காட்டினான். நாம் இம்மாதிரி திருட்டுக் காரியத்துக்கு உடந்தையாக இருக்க முடியாதென்று சொல்லிவிட்டேன்.

308 நம்பர் கான்ஸ்டெபிள், ''சேட் வந்தழைத்ததும், நான் கடைக்குப் போனேன். என்னைப் பார்த்த உடனே இவன் முகத்திலே பயம் வந்துவிட்டது. ஏதடா சங்கிலி என்று கேட்டேன். பதில் சொல்லாமல் மரம் போலிருந்தான். இதற்குள் சேட், உரைத்துப் பார்த்து, ''அரரே! இது பொன் இல்லை, பித்தளை என்று சொன்னார். உடனே இவனை லாக்கப் செய்தேன்'' இப்படியே சாட்சியங்கள் உள்ளன-என்று மருதவாணர் கூறிவிட்டு, ஆயாசத்தோடு இருந்தார். இவ்வளவு வெள்ளையாக வழக்கு இருக்க, இவர் ஏன் வேதனைப்படுகிறார் என்பது விளங்கவில்லை எனக்கு.

''சரியானபடி சிக்கிக்கொண்டிருக்கிறான். இனி என்ன இருக்கிறது, நான் கூற'' என்று சொன்னேன்.

''எனக்கோ கடுமையான ஜுரம்! வைத்தியர்கூட மிரண்டுவிட்டார். 'மார்புச்சளி அதிகமாக இருக்கிறது. சுவாசம் வருவதுகூடச் சிரமமாக இருக்கிறது என்று கூறினார். என் மனைவி என்ன செய்வாள்? அவள் மேலே, ஒரு நகையும் கிடையாது. இருந்தது ஒரு வளையல், அது போனமாதம் தீர்ந்துவிட்டது. வீட்டிலே பாத்திரங்கள்கூடக் கிடையாது, இந்த நிலையிலே, பத்து ரூபாயாகும் ஊசி போட என்று டாக்டர் கூறி

விட்டார். கையிலே பணம் வந்தாக வேண்டும் என்றார். நிர்க்கதியாக விடப்பட்ட நான், பிராண அவஸ்தையிலே இருப்பதை எடுத்துச் சொல்லி, நான் வண்டியோட்டும் முதலாளியிடம் போய் அழுதாள் என் மனைவி. பத்து நாளாகப் படுத்த படுக்கையாக இருக்கிறானே, பாதிப் பிராணன் போய் விட்டதே என்று ஈவு இரக்கம் கொஞ்சமும் இன்றி, அந்தக் கொலைக்காரப் பாதகன், ஒரு பைசாகூடத் தரமுடியாது. அவன் ஏற்கனவே ஆறு ரூபாய் பாக்கி என்று கூறிவிட்டான். மாங்கலியப் பிச்சை தர வேண்டும் என்று என் மனைவி கேட்டாளாம். அதற்குக் கோயில் சுற்று என்று சொல்லித் துரத்திவிட்டானாம்! மாடாக உழைத்தேன் உனக்கு உயிர் போகிறது என்றால் பத்து ரூபாய்தர மறுத்துவிட்டான். இப்படிப்பட்ட கன்னெஞ்சர்கள் வாழ்கிறார்கள். கஷ்டாளிகள் கால்வயிற்றுக்குக் காலமுழுவதும் உழைக்கிறார்கள். சரி, சாகவேண்டியதுதான், என்று எண்ணி ஏங்கினேன். நான் மாண்டுபோனால் மங்காவின் கதி என்னாவாகும்? என் ரங்கன், நாலு வயதுப் பையன், அவன் தெருவிலே அலைவான். இந்த லட்சணத்திலே அவள் எட்டாம் மாதம்! இந்த உலகிலே- என்னைக் காப்பாற்ற- மரணத்திலிருந்து என்னைத் தப்பவைக்க யாரும் இல்லை. மங்கா அழுதபடியே இருந்தாள். அந்த நேரத்திலே, புண்யமூர்த்தி மகாலிங்கம் வந்தான். அவன் பூர்ணாயுசுடன் நோய் நொடியின்றி வாழவேண்டும். என் நிலைமையைக் கண்டதும், கோவெனக் கதறினான். வரதா! உனக்கு இவ்வளவு அதிகமாக ஜூரம் என்று எனக்குத் தெரியாமல் போச்சே என்று விசனித்தான். ''அக்கா! அழாதே, ஆண்டவன் நல்வழி காட்டுவார்'' என்று என் மனைவிக்குத் தேறுதல் கூறினான். அவனுடைய அன்பு எனக்கு ஆயிரம் டாக்டர்களின் உதவியைவிட மேலானதாக இருந்தது. உயிருக்கு ஊசலாடிக்கொண்டு, ஊரிலே ஒருவர் உதவியின்றி வேலை செய்துவந்த இடத்திலே கைவிடப்பட்ட இந்த தர்மக்கட்டையிடம் தயைகாட்டி, ஆறுதல் கூறினான். அவனுடைய தர்ம சிந்தனையைப் பார்த்தபோது கை தூக்கிக் கும்பிட்டேன். அதுவரையிலே அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்டினாள், என் மனைவி.



**★ ஒரு மூட்டை தூக்குவதில் பாரத்தினால் வேதனைப்பட்டிருப்பேனே தவிர, மூட்டை தூக்குவது அவமானம் என்று ஒரு போதும் வேதனைப்பட்டதில்லை.**

''ஆண்டவன் எனக்கு என்ன வழியப்பா காட்டப் போதிறார்? ஆண்டவன் இருக்கிறானா? எங்கே இருக்கிறான்! இதோ என் புருஷர் வதைகிறார். கண்ணைத் திறக்கிறேன்! கலம் கண்ணீர் விடுகிறேன்! தெய்வம் என்ன செய்கிறது? தெருவிலே ஏழைகளை அலையவைக்கிறது. தெய்வமாம் தெய்வம்! திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை என்பது பாட்டி கதை'' என்று அழுதுகொண்டே கூறினாள்.

''அழாதே அக்கா? ஆண்டவன் இருந்துதான், என்னை இங்கே அனுப்பி வைத்தார்'' என்று சொன்னான் அந்தச் சார்ந்த மூர்த்தி. ''ஆமாம் உன்னைப் போல ஈரமுள்ள நெஞ்சு கொண்டவர்கள் வந்துதான் ஆண்டவனின் மானத்தைக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது'' என்று அவள் பதறிப் பேசினாள். பத்து ரூபாய் கேட்கிறார் டாக்டர் என்பதைக் கூறினாள். பத்து ரூபாய் என்றதும் பாவம், மகாலிங்கம் பயந்து போனான். அவனிடம் ஏது அவ்வளவு பணம்? அவன் என்னைப் போல் ஒரு ஏழை. எனக்காவது ஒரு குழந்தை. அவனுக்கு நாலு. எனக்கு ஒரு இடம் இருந்தது வேலை செய்ய, அவனுக்கோ ஒரு வேலையும் நிலையாக இருப்பதில்லை. நோயாளி மனைவி, வயதான தாய், வருமானம் கட்டை. இந்த லட்சணத்திலே பத்து ரூபாய் தர முடியுமா அவனுக்கு? ''அப்பா நீ பக்கத்திலே இருந்தாலே போதும். பத்து ஆயிரம் கொடுத்த மாதிரிதான். என் பிராணன் போகிற சமயத்திலே, உன்னைப் போன்ற ஒரு உத்தமச் சினேகிதன் பக்கத்திலே இருந்தால், அதுவே என் மரண வேதனையைக் குறைக்கும் என்று நான் ஈனக் குரலிலே கூறினேன். எழுந்தான். ''இதோ வருகிறேன்?'' என்றான். வெளியே போனான். வேதனையைக் காணச் சகியாமல் வெளியே போனான் என்று நான் நினைத்தேன். அரை மணி நேரத்திற்கெல்லாம், டாக்டருடன் வந்தான். ஊசி போட்டார். என்னைப் பணம் கேட்கவில்லை. அதிலிருந்து ஜ"ரம் படிப்படியாகக் குறையத் தொடங்கிற்று. நான் எழுந்து நடமாடும் சக்தி பெறுகிறவரையிலே, ரொட்டியும் அவன் தான் வாங்கித் தந்தான். 'ஏது மகாலிங்கம் பணம்?' என்று எத்தனையோ தடவை கேட்டேன். பதிலே சொல்லவில்லை அந்த தர்மசீலன், தயாளமூர்த்தி, புண்யாத்மா, அவதார புருஷன், என் உயிரைக் காப்பாற்றினான். ஏழை, ஏழைக்கு உதவி. ஏழையே, ஏழைக்கு உயிர் கொடுக்கும் தெய்வம். மகாலிங்கம் சாதாரண பிறப்பல்ல, அவன் தெய்வப் பிறப்பு.''

இது, வண்டிக்கார வரதன் வாக்குமூலம்-கோர்ட்டில் சொன்னதல்ல. என்னிடம் நேரில் சொன்னான். காலில் விழுந்து, ''எப்படியாவது அந்தக் காருண்யவானைக் காப்பாற்றவேண்டும்'' கெஞ்சிக் கேட்டான், உண்மையிலேயே ஒரு டாக்டருக்கு, ஒரு உயிர் போகுமே, நம்மாலான உதவி செய்வோம் என்ற எண்ணம் தோன்றவில்லை. நம்மிடம் நாய்போலக் கிடந்தானே, உயிருக்கு ஆபத்தாக இருக்கிறதாமே, ஒரு பத்து ரூபாய் கடன் தருவோம் என்ற எண்ணம், ஒரு பணக்காரனுக்குத் தோன்றவில்லை. பராரி மகாலிங்கத்தின் மனதிலே, அவ்வளவு அன்பு ததும்பி இருந்தது. ஒரு உயிர் துடிப்பதைக் கண்டு அவன் துடித்தான், ஒரு குடும்பத்தின் கண்ணீரைக் கண்டு கலங்கினான். மகாலிங்கம் யோக்யன், தர்மவான், குணசீலன், அந்த வரதன் சொன்னது போல அவன் தெய்வப் பிறப்பு-என்று இந்த வாக்குமூலம் ஒன்றைக் கொண்டே சொல்லிவிடலாம்'' என்று கூறிவிட்டுப் பெருமூச்செறிந்தார் மாஜிஸ்ட்ரேட். நான் ஆச்சரியத்தால் என்னையே மறந்தேன். மகாலிங்கம் எவ்வளவு பெரிய கர்மயோகி! அவன் மனதிலே எவ்வளவு கருணை! அவனுடைய செயல் எவ்வளவு சிலாக்கியமானது! என்று புகழ்ந்தேன்.

''ஆனால் மறந்துவிடாதே, மகாலிங்கம் செய்திருக்கும் குற்றத்தை'' என்று மாஜிஸ்ரேட் கவனப்படுத்தினார். 'ஆம்! அவன் தண்டிக்கப்பட வேண்டியவன்' என்பதை நினைத்ததும், என் உடல் குலுங்கிற்று. இப்படிப்பட்டவனுக்குத் தண்டன்னை!! அவன் காட்டிய

சினேகவாஞ்சை, மனிதாபிமானம், ஆபத்தில் உதவுதல், இவைகளுக் குப் பரிசு கிடையாதா? இவை களைக் கவனிப்பவர் இல்லையா? இல்லை! ஏன்! அவன் திருடன்! தியாக புருஷன் திருடனானான்! பௌர்ணமியிலே அமாவாசை இருக்க முடியுமா என்று நான் கேட்டேன் பைத்தியக்காரத்தனமாக! இதோ இருக்கிறதே!! கருணையைப் பொழிந்த மகாலிங்கம், களவுமாடியிருக்கிறான்!!

''இன்னொரு வாக்குமூலம் கேள்: 'தர்மதுரையே! மகாலிங்கம், மகாயோக்கியனுங்க. பெரிய குடும் பம், பிழைப்புக்காக, யார் காலால் இட்ட வேலையையும் தலையால் செய்பவனுங்க என் மகன். அவன் சின்ன வயசிலிருந்தே யோக் யனுங்க, கஷ்ட ஜீவனம், அந்தக் கஷ்ட ஜீவனத்திலேயும், பசி என்று சொல்லி யாராவது வந்துட்டா போதுங்க, தன் வயிற்றுக்குப் போதாவிட்டாலும் பரவாயில்லை என்று சொல்லி, அவர்களுக்குச் சோறு போடுவானுங்க. கெட்ட நினைப்பே கிடையாதுங்க. அவனை நீங்க காப்பாற்றாம போனா, நாலு குழந்தையோடு அவன் பெண்ஜாதி நடுத்தெருவிலே நிற்கும். நானும் அப்படித்தான், வயசு அறுபதுக்கு மேலே ஆகுதுங்க'' என்று கூறி என் காலில் விழுந்து அழுதாள் மகாலிங்கத்தின் தாய். அவள் வாக்குமூலத்திலிருந்து மகாலிங்கம் சாது, யோக்யன், அன்பு காட்டு பவன் என்று ஏற்படுகிறது. ஆனால் வழக்கோ விளக்கமாக இருக்கிறது. அவன் கள்ளன், அவனே குற்றத்தை ஒப்புக்கொண் டுமிருக்கிறான். இப்படிப்பட்ட யோக் யன் ஏன் அயோக்யனானான்!'' என்று மருதவாணர் கேட்டார். ''எனக்குத் தலை சுழலுகிறது இதைக் கேட்க'' என்று நான் சொன்னேன். உண்மையாகவே எனக்கு அப்படித்தான் இருந்தது.

''நம்ம வீட்டுத் தோட்டக்காரன் இருக்கிறானே துரைசாமி. அவன் சொன்னதே இதைவிட அதிகம். மகாலிங்கம் எப்போதும் ஏழை களுக்கு உதவி செய்வானாம். யாராவது வீதியிலே, தூக்கமுடி யாமல் பாரமான மூட்டையை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டால் அவன்தான், உதவிக்கு வரு வானாம். போக்கிரி எவனாவது யாரிடமாவது வம்புக்குப் போனால் இவன் போய்ச் சமாதானம் செய் வானாம்! அனாதைகள் இருந்தால், வீடுவீடாகப் பிடிசோறு எடுத்து, அவர்களுக்கு உணவளிப்பானாம். ஒரு தடவை, நம்ப தோட்டத்திலே தேங்காய் திருடிவிட்டானாம் எவனோ. மகாலிங்கந்தான் திருடினான் என்று நினைத்துக் கொண்டு, துரைசாமி, மகாலிங்கத்தைச் சண்டைக்கு இழுத்துப் பலமாக அடித்து விட் டானாம், மகாலிங்கம் அவ்வளவு அடியும் பட்டுக்கொண்டு, சத்திய மாக நான் திருடவில்லை என்று சொன்னானாம். கடைசியில் திரு டன் வேறு ஒருவன் என்று தெரிந் ததாம். நம்ம துரைசாமிக்கு மனந் தாளாமல், மகாலிங்கத்திடம் போய் மன்னிப்புக் கேட்டானாம். ''இது என்ன பிரமாதம்! என்னமோ விஷக்கடி வேளை'' என்று மகா லிங்கம் பொறுமையாகப் பேசினா னாம். அப்படிப்பட்ட பொறுமை சாலியை நான் கண்டதே கிடை யாதுங்க.ரொம்ப யோக்யன், எப் போதாவது அதிகக் கஷ்டமான வேலை செய்தால் குடிப்பான். ஆனால் குடித்துவிட்டுக் கூத்தாடு கிறவனுமல்ல. 'என் கையிலே பணம் ஏராளமாக இருந்தால் ஏழைகளுக்கெல்லாம் உபகாரம் செய்வேன். நான் இல்லாதவன். என்ன செய்வது' என்று ஏக்கப் படுவானாம் மகாலிங்கம்'' என்று கூறினார் மாஜிஸ்ட்ரேட், துரை சாமி சொன்னான் என்று.

''ஐயோ பாவம்! இப்படிப் பட்டவனுக்கு ஏன் கெட்ட எண் ணம் பிறந்தது'' என்று நான் பரி தாபத்துடன் கேட்டேன்.

''அதை ஏன் கேட்கிறாய்! அதைச்சொன்னால் நீ மூர்ச்சை யாகிவிடுவாய். எங்கெங்கு விசா ரம் இருந்ததோ அங்கெல்லாம் மகாலிங்கம் முன்னாலே நின்று உதவி செய்தான். நோயாளி களுக்கு மருந்து வாங்கித் தருவான். ஏழையின் வீடு இடிந்தால், இவன் கூலி இல்லாமல், வெறும் கூழுக்கே வேலை செய்வான். குழந்தை ஏதா வது தவறி வந்துவிட்டது என்றால், வீடு கண்டுபிடித்துக்கொண்டு போய்ச் சேர்க்கிற வரையிலே, வேறு வேலையைக் கவனிக்கமாட் டான். இப்படி மற்றவர்களுக்கு உதவி செய்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்ததால் அவனுக் குக் கிடைக்கும் வேலையும் நிலைப் பதில்லை. பரோபகாரி வருகிறார். இவருக்கு வேலை வெட்டி, எதற்கு? என்று கண்டித்து அனுப்பி விடுவார்கள். குடும்பமோ பெரிது. அதை நடத்திக்கொண்டு போவதே சிரமம். தன் சக்தியையும் உண

> * ஒருநாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.
>
> —தந்தை பெரியார்.
>
> * பெருந்தன்மையோடு கூடிய பொதுவாழ்வு வெற்றியையன்றி வேறெதையும் தந்திடாது.
>
> —பேரறிஞர் அண்ணா

ராமல் உதவி செய்யும் சுபாவம். அதற்கு வேறு செலவு. இந்த நிலையிலே, நடந்திருக்கிறது இவன் வாழ்க்கை. இச்சமயத்திலே, இவன் அதிர்ஷ்டச் சீட்டுக் கட்டியிருந் தான். அதிலே நூறு ரூபாய் கிடைத்தது. ஆனந்தமடைந்தான். கடன் தீரும், குடும்பத்துக்குச் சௌகரியமாகும். மற்றவர்களுக்கு உதவி செய்யவும் முடியும் என்று மகிழ்ந்தான். அழுக்கு உடையும், தலைவிரி கோலத்துடனும் தள் ளாடி நடந்துகொண்டு, யாரோ ஒருவன், மகாலிங்கத்துடன் வந்து சேர்ந்தான் சனியன்போல. அவ னுடைய நிலைமையைக் கண்டதும், மகாலிங்கத்தின் மனம் பாகாய் உருகி விட்டது. ''ஐயோ! சாப் பிட்டு எத்தனை நாளாயிற்றோ? பார்க்கவே பரிதாபமாக இருக் கிறதே'' என்று சொல்லித் தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போயிருக்கிறான். அவன் தண்டச் சோற்றைத் தாராளமாகத் தின்று விட்டு, ஐயா! நான் பர்மாவி லிருந்து கால்நடையாக வந்தவன், ரங்கூனில் பெரிய வியாபாரி. போறாத வேளையால் இந்தக் கோலம் வந்தது'' என்று தன் கதையைக் கூறலானான். பர்மாவி லிருந்து பயங்கரமான ஆபத்துக் குள்ளாகிப் பல மக்கள் வதைப் பட்டதை மகாலிங்கம் ஏற்கனவே கேள்விப்பட்டவன். பத்து நாள் அன்னாகாரம்இல்லாமல் அவதிப் பட்டவர்கள்-பாம்பு கடித்து இறந் தவர்கள்-பாம்புக்குப் பலியான வர்கள்- காட்டு ஜாதியரால் கொலை யுண்டவர்கள்-என்று பல சோகச் சேதிகளைக் கேட்டிருந்தான். ஆகவே, பர்மாவிலிருந்து வந்தேன் என்று சொன்ன உடனே மகாலிங்கத் துக்குக் கண்ணிலே நீர் ததும்பிற்று.

வந்தவன், ''என் குடும்பம் அடியோடு நாசமாகிவிட்டதப்பா!'' என்றான். மகாலிங்கம் அழுது விட்டான். ''எப்படியோ நான் வந்து சேர்ந்தேன். திக்கு இல்லை



# அடக்கத்தின் திருவுரு

எளிய குடும்பத்தில் பிறந்து, நல்ல மாணவராக, ஆற்றல்மிகு பேச்சாளராக, சிறந்த எழுத்தாளராக, உள்ளம் கவர்ந்த பத்திரிகை ஆசிரியராக, நல்ல நூலாசிரியராக, நாடக ஆசிரியராக, நாடக நடிகராக, பண்பட்ட அரசியல்வாதியாக, நிகரற்ற பகுத்தறிவாளராக, உத்தமத் தலைவராக, ஒப்பற்ற வழிகாட்டியாக, நாடு போற்றிய முதல் அமைச்சராக, பல்துறை ஆற்றல் நிரம்பப் பெற்ற அறிவுலக மேதையாக ஓங்குபுகழ் எய்தியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இவர், தமிழால் தமிழனைத் தட்டி எழுப்பிய அறிவுச்சுடர்; ஏழை எளிய மக்களிடையே தம் பேச்சாற்றலால் அறிவுப்புரட்சியை உருவாக்கிய சாமான்யர்களின் தலைவர்;

ஆடம்பரத்தை அறவே வெறுத்தவர்; எளிமையின் திருவுரு; புகழ்ச்சிச் சொற்களைக் கேட்டு, அதிகமாக மகிழ்ச்சி அடைந்திடவும் மாட்டார்; வசைச் சொற்களைக் கேட்டு, பொங்கி எழவும் மாட்டார்; இரண்டிற்கும் பதில் புன்னகைதான்! எளிமையும், கனிவும் அவருக்குப் பிறவிக்குணம்; அவர் வளர்த்துக் கொண்ட சகிப்புத்தன்மை அனைவருக்கும் வழி காட்டவல்லது. தவறு செய்பவர்களிடமும், தம்மை எதிர்ப்போரிடமும் அனுதாபம் காட்டினார். 'மன்னிப்போம், மறப்போம்' என்றார். 'பிறரைத் தாக்கி வளராதே, பிறர் தாக்குவதைத் தாங்கி வளர்'' என்ற பாதையைத் தொண்டர்களுக்கு வகுத்துத் தந்தார்.

தமிழகத்தின் தனித்தன்மையையும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளையும், வலியுறுத்தி வந்த நீதிக் கட்சியில் சேர்ந்தார்; 1925-ஆம் ஆண்டில், காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டு, சமுதாய மறுமலர்ச்சிக்கும் 'தமிழர் நலனுக்கும் பாடுபட்ட பகுத்தறிவுத் தந்தை பெரியாரைத் தனது ஒரே தலைவராக ஏற்றுக் கொண்டார். பட்டம், பதவி, பணம், கல்விச்சிறப்பு இவைகள் மட்டுமே நிலவி இருந்த நீதிக்கட்சியினை, வரலாற்றுத் தொலைநோக்குடன் மாற்றி-திராவிடர் கழகமாக, பாமரரும் நாடி வந்து போற்றிய மக்கள் இயக்கமாக மலரச் செய்தார்.

நாடகமாடிகள் என்று கலைஞர்கள் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகியிருந்த நேரத்தில், சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து சாம்ராஜியம், நீதிதேவன் மயக்கம், சந்திரோதயம், ஓர் இரவு, காதல் ஜோதி, வேலைக்காரி போன்ற பல அரசியல் சமூக, சீர்திருத்த நாடகங்களை எழுதி, தமிழ்ச் சமுதாயத்தில் விழிப்புணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் உருவாக்கினார். நாடகங்களை எழுதியதுமட்டுமல்ல. சில நாடகங்களில் நடிக்கவும் செய்தார்.

நாடகங்கள் எழுதியதோடு, திரைப் படங்களுக்குக் கதைவசனம் எழுதி, சுயமரியாதைக் கொள்கைகளை, சீர்திருத்தக் கருத்துக்களை மக்களின் இடையே அண்ணா பரப்பினார்.

15-9-1909 அன்று காஞ்சிபுரத்தில் எளிய குடும்பத்தில் பிறந்து, ஏழை எளிய நடுத்தர மக்களிடையே அறிவுப் புரட்சியை உருவாக்கி, மக்கள் நிலை உயர, நினைப்பு உயர, அயராது பாடுபட்டு, தேனருவிப் பேச்சால் எழுத்தாற்றலால், இனிய பண்பால், இலட்சக்கணக்கான மக்களின் இதயங்களில் குடி கொண்ட ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா, 3-2-1969 அன்று உடலால் நம்மை விட்டுப் பிரிந்தார், ஒளியாக நம் நெஞ்சில் நிறைந்திருக்கிறார்.

— வ. இராசமனோகரன்.

---

திசை தெரியவில்லை, நீ கிடைத்தாய் பழனியாண்டவர் போல'' என்று சொல்லிக் கும்பிட்டான். ''ஐயோ! பெரியவங்க நீங்க இந்தப் பஞ்சைப் பயலைக் கும்பிடாதிங்க. நான், என்ன பிரமாதமான உதவி செய்துட்டேன் உங்களுக்கு'' என்று மகாலிங்கம் கூறினான். அப்போதுதான், வந்தவன், மெதுவாக மடியிலிருந்து, சங்கிலியை எடுத்தான். ''அப்பா, இது மூணு சவரன், இதை விற்க வேண்டும். விற்றால் நான், ஊர் சேர்ந்து ஏதாவது கடை வைத்துக் கொண்டு பிழைப்பேன். இந்த ஊருக்கோ நான் புதியவன். கடை வீதிக்கு நகையை எடுத்துக் கொண்டு போனால், சுலபத்திலே வாங்க மாட்டார்கள். அதிலும் நான் இருக்கிற அலங்கோலத்தைக் கண்டால் இது திருட்டுச்சொத்தோ என்று கூடச் சந்தேகப்படுவார்கள். இன்றைய விலையிலே இருநூறு ரூபா தாளும். எனக்கு ஒரு நூறு ரூபாய் கொடு போதும். சங்கிலியை நீ எடுத்துக் கொள் என்று கெஞ்சினான்.

மகாலிங்கம் மறுக்கவில்லை. அதிர்ஷ்டச் சீட்டுப் பணத்தை அப்படியே அந்தப் பர்மா அகதிக்குக் கொடுத்தனுப்பி விட்டான். அந்தச் சங்கிலியைத் தான் பிறகு மார்வாடி கடையிலே விற்க வந்தான், பிடிபட்டான். இது, மகாலிங்கத்தின் மனைவி, தன் நாலு மக்களோடு என் காலில் விழுந்து சொன்ன வாக்குமூலம்'' என்றார். நான் சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து, இந்த வாக்குமூலத்தைக் கொண்டே, ''மகாலிங்கத்தை விடுவித்து விடலாமே'' என்று சொன்னேன். மருதவாணர் சிரித்துக் கொண்டே எப்படி தீர்ப்பளிக்க முடியும்? சட்டம் இடந்தராதே மேலும் பர்மா அகதியாக நடித்தவன் யார் என்று தெரியவில்லை. அதுமட்டுமல்ல முலாம் பூசுவதற்கான சாமான்கள் மகாலிங்கத்தின் வீட்டிலேயிருந்து போலீசார் கண்டு பிடித்து எடுத்திருக்கிறார்கள்'' என்று கூறினேன். ''இருக்கலாம்! ருஜு வேண்டாமா! மகாலிங்கம் நிரந்தரமான தொழிலற்றவன். அவன் முலாம் பூசிய நகையை விற்க முயற்சித்தான். அதை அவனே ஒப்புக்கொள்கிறான். அவன் வீட்டிலே முலாம் போடும் கருவி கிடைத்தது. தண்டனைக்கு ஏற்றபடி ருஜுக்கள் உள்ளனவே நான் என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''சிக்கலான பிரச்னைதான்!'' என்று மட்டுமே என்னால் சொல்ல முடிந்தது. நானா தீர்ப்பளிக்க வேண்டியவன்! என் தீர்ப்பு நெடு நாட்களுக்கு முன்பே பதிவாகி விட்டது. ஒரு வழக்குக்கு மட்டுமல்ல. பொதுவாகவே, அதாவது ஏழைகள் செய்யும் குற்றங்களுக்குக் காரணம் அவர்களின் ஏழ்மை; ஆகவே தண்டிக்கப்பட வேண்டியது, ஆட்களல்ல, பொருளாதார பேத அமைப்பு முறை. இது என் தீர்ப்பு. ஆனால் மாஜிஸ்ட்ரேட் மருதவாணம் பிள்ளை, சட்டப்படி, இந்த மகாலிங்கம் வழக்கிலே என்ன தீர்ப்பு அளிப்பது என்று கேட்கிறார்! சொல்லுங்கள் பார்ப்போம்!! ('சிறுகதைகள்' நூலிலிருந்து)

# அண்ணாவின் கடைசிக் கட்டுரை



— திருவாரூர் முத்துராமன்

**1965**-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் கடைசி வாரம்.

ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தில் தயாரிப்பு நிர்வாகியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன் நான். பேரறிஞர் அண்ணா அவர்களின் இளமைநாள் தொட்டு அவருடன் தொடர்பு கொண்டிருந்த நண்பர் சுந்தரேசன் அங்கு ஒரு மாலை நேரத்தில் வந்தார்.

"அண்ணா அழைக்கிறார், வருகிறீர்களா?" கேள்வியை அவர் சாதாரணமாகத்தான் கேட்டார். ஆனால் எனக்கு அது மின் அதிர்வுபோல ஒரு அதிர்ச்சியை-ஒரு படபடப்பை ஏற்படுத்தியது. 'என்னையா? அண்ணாவா அழைக்கிறார்?' பூமி எது, வானம் எது என்றே எனக்குப் புரியாத அளவுக்குத் தடுமாற்றம்!

"உங்களைப்பற்றித் தாமரை கூறினார்; நான் அண்ணாவிடம் எல்லாம் சொல்லி விட்டேன்; ஒன்றும் சிரமம் இல்லை; 'புரூப்' மட்டும் தான் பார்க்க வேண்டும்; இப்போதே புறப்பட வேண்டும்" என்றார் சுந்தரேசன். தாமரை என்ற புனைபெயருக்குச் சொந்தக்காரரான ஓவியர் வைத்திலிங்கம் என்னைக்கூடக் கேட்காமல் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்!

நேராக நுங்கம்பாக்கம் இல்லத்துக்குச் செல்கிறோம்; அண்ணா மாடியிலிருந்து சொல்லி அனுப்புகிறார். 'காஞ்சிபுரத்துக்கு அழைத்துப்போ' என்று! அண்ணாவைப் பார்க்கவில்லை. காஞ்சிபுரத்துக்கு இரவு எட்டு மணி அளவில் போய்ச் சேர்ந்தோம்.

'காஞ்சி'-அலுவலகத்தில், ஆசிரியர் இருக்கையில் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக இருந்த மா.கி. தசரதன் அவர்கள் அமர்ந்து அந்தக் கிழமைக்கான 'காஞ்சி' இதழின் புரூப்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு நான் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறேன். புரூப்கள் கைமாறுகின்றன.

நாட்கள் நகரத் தொடங்கின. பிழை திருத்தும் பொறுப்போடு, அவ்வப்போது இடங்களை நிரப்புவதற்காகச் சிறுசிறு துணுக்குகள்-கட்டுரைகளையும் எழுதவேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஒருநாள் நள்ளிரவில், அன்றைய பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரிக்கு, வெள்ளை மாளிகை, அமெரிக்காவுக்கு வருமாறு விடுத்திருந்த அழைப்பு குறித்தும், நிபந்தனைகள் குறித்தும் விமர்சனக் கட்டுரையொன்று எழுதிக்கொண்டிருக்கிறேன். அன்று மாலை டெல்லியிலிருந்து சென்னை திரும்பி இருந்த அண்ணா அவர்கள், காஞ்சிபுரத்துக்கு வந்த அந்த நள்ளிரவில் அலுவலகத்துக்குள் நுழைகிறார். நான் அமர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன். 'முத்துராமன், எதைப்பற்றி எழுதுகிறாய்?' கரகரப்பான அந்தக் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்துப் படப்படப்புடன் எழுந்து நிற்கிறேன். "சாஸ்திரி அமெரிக்கா செல்லப் போவது குறித்தும், அமெரிக்க நிபந்தனை குறித்தும், செஸ்டர் பௌல்சின் விளக்கம் குறித்தும் விமர்சனக் கட்டுரை எழுதுகிறேன்" என்றேன். 'எழுதி, எனக்கு அனுப்பிவை!' என்று கூறி விட்டுத் திரும்பிவிட்டார்.

சுமார் முப்பது பக்கங்கள் கொண்ட கைப்பிரதியை மறுநாள் இளங்கோவன் அவர்கள் மூலம் அண்ணா அவர்களுக்கு அனுப்பினேன். அன்றிரவே அது திரும்பி வந்தது. சுமார் எட்டுப் பக்கங்களில் குறுக்காகக் கோடுகள் இழுத்து, வேண்டாம் என்பதற்கு அடையாளமாக அடித்துவிட்டிருந்தார். மறுநாள் கட்டுரையை அச்சகத்துக்கு அனுப்பிவிட்டு, அண்ணாவைச் சந்திக்க வீட்டுக்குச் சென்றேன். பேத்தி கண்மணியுடன் கொஞ்சிக் கொண்டிருந்தார், என்னைக் கண்டதும், "முத்துராமன், இப்போதைக்கு நாம் சீனாவைத் தொடவேண்டாம்; அதனால்தான் சீனாவைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்த பகுதிகளை அடித்து விட்டேன்; என்ன தலைப்பு போடப் போகிறாய்?" என்றார். நான் யோசித்துக் கொண்டிருக்கும்போதே "இந்தியா சிந்திக்குமா?" என்று போடு! என்கிறார். வணக்கம் செலுத்திவிட்டுத் திரும்பிவிட்டேன்.

1969-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 4-ஆம் நாள் மாலை.

அந்த ஆண்டு 'காஞ்சி' இதழின் பொங்கல் மலருக்காகப் பேரறிஞர் அண்ணா அவர்களிடம் கட்டுரை கேட்பதற்காகச் சென்றேன்.

1968, ஆகஸ்டில் வரவேண்டிய 'காஞ்சி' இதழின் ஆண்டுமலர்,



# எங்கள் அண்ணா இமயமலையே!

— பி.வி. கிரி

தென்னக வானில்
தோன்றிய துருவம்
மண்ணக வாழ்வில்
மங்கா உருவம்

கன்னித் தமிழைக்
கண்ணாய்க் கொண்டு
தன்னை ஈந்த
தமிழர் செல்வம்

ஏட்டில் தமிழை
எழிலாய் வளர்த்து
நாட்டில் அறிவை
நல்கிய திலகம்

மேடைப் பேச்சில்
மழையாய்ப் பொழிந்த
சோடை இல்லாச்
சுந்தர மேகம்

கடமை மூச்சாய்க்
கொண்டே வாழ்ந்து
மடமை போக்கிய
மக்கள் தலைவன்

எங்கள் அண்ணா
இதய தெய்வம்
எங்கள் அண்ணா
இமய மலையே!

அண்ணா அவர்கள் அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றதாலும், திரும்பிய பின்னரும் அவரைப் பலவீனம் தொடர்ந்து கொண்டே இருந்ததாலும், அண்ணா அவர்களின் எழுத்தோவியம் இடம்பெறாமல், ஆண்டு மலர் வெளிவரக் கூடாது என்ற நோக்கத்தாலும் அந்த மலர் நிறுத்தப் பட்டுவிட்டது.

எனவே, பொங்கல் மலரில் அண்ணாவின் பொன்னோவியம் கட்டாயம் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற இளங்கோவன் அவர்களின் அன்புக் கட்டளையால் நான் சென்னை சென்று இருக்கிறேன். நள்ளிரவு 12 மணி அளவில்தான் அண்ணா அவர்களைப் பார்க்க முடிந்தது. மலர் பற்றி நினைவுறுத்தினேன். ஒரு அலட்சிய சிரிப்பு! 'இந்த நிலையில் என்னை எழுதச் சொல்கிறாயா?' என்று கேட்பது போன்ற ஒரு பார்வை! கட்டிலின்மீது சாய்ந்து கொண்டு நெஞ்சைத் தடவி விட்டுக் கொண்டிருந்த காட்சியைச் சில நிமிடங்கள் வரையில் மௌனமாக நின்று கவனித்துக் கொண்டிருந்தேன். 'நாளைக்குப் பார்க்கலாம்' என்று இரத்தினச் சுருக்கமான பதில் கிடைக்கிறது.

அன்று மாலை நான் அண்ணாவின் அறையில், அவரைப் பார்த்தபோது, சிட்டிபாபு எம்.பியும், செயலாளராக இருந்த சொக்கலிங்கமும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அண்ணாவின் முக பாவங்கள் மூலம் நோய் உபாதை அதிகமாக அவரை வாட்டுகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தாலும், பொங்கல் மலர்-அண்ணாவின் கட்டுரை இவைபற்றிய சுயநலம் காரணமாகத்தான் இரவு 12 மணி அளவில் கட்டுரை பற்றி நினைவுறுத்தினேன்.

'நாளைக்குப் பார்க்கலாம்' - பதில் கிடைத்துவிட்டது எனக்கு. என் பேராசைக்குச் சிறகு முளைத்து விண்வெளியில் வட்டமிடத் தொடங்கியது. அந்தச் சந்தர்ப்பத்தில் அண்ணா அவர்கள் கட்டுரை எழுதினால், சிகிச்சையின் பொருட்டு அவர் அமெரிக்கா சென்று வந்த அனுபவங்களை எழுத்தாக்கி விடுவார் என்ற ஒரு நம்பிக்கை எனக்கும், இளங்கோவன் அவர்களுக்கும்!

மறுநாள் பிற்பகல் 4 மணி அளவுக்கு மீண்டும் அண்ணாவைப் பார்க்கிறேன். ''இன்னைக்கு இராத்திரி எழுதறேன்; மற்றதெல்லாம் முடிஞ்சு போச்சுதா?... யார் யார் எழுதி இருக்காங்க?''

மலர் பற்றிய நிலைமைகளையும், யார் யார் எது எது குறித்து எழுதி இருக்கிறார்கள் என்ற விவரங்களையும் விளக்கிக் கூறுகிறேன்.

'காலையிலே முடிச்சுக் கொடுத்திடறேன்' என்று கூறிவிட்டுச் சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி கண்களை மூடிக்கொண்டார்கள்.

இரவு இரண்டு மணி இருக்கும். அருகில் பெஞ்ச் ஒன்றில் படுத்திருந்த நான், எழுந்து மெல்ல அண்ணாவின் அறைக்குள் பார்வையை விரட்டுகிறேன். அண்ணா எழுதிக் கொண்டிருக்கிறார்! எனக்குத் தூக்கம் வந்துவிட்டது. காலையில் நான் எழுந்தபோது, 'காலை 4 மணிக்குத்தான் கட்டுரையை முடித்துவிட்டு அண்ணா படுத்தார்,' என்று அண்ணியார் இராணி அம்மையார் குறிப்பிட்டார்கள். அது 1969 ஜனவரி 6-ஆம் நாள்.

மறுநாள் 10 மணி அளவில் அண்ணா அவர்களை மறுபடியும் சந்திக்கிறேன். அவரது அறை முகப்பில் ஒரு சாய்வு நாற்காலியில் அவர் அமர்ந்திருக்கிறார். மருத்துவக் குழுவினர் வந்து அண்ணா அவர்களின் உடல் நிலையை ஆய்வு செய்கிறார்கள். விதவிதமான மாத்திரைகளையும், மருந்துக் கலவைகளையும் கொடுத்துக் கொண்டு இருந்தனர், நோய் உபாதை அதிகமாகிவிட்டிருந்ததற்கு அவை அடையாளங்கள்! 'இரவு நீங்கள் கண் விழித்திருக்கக்கூடாது' என்கிறார் ஒரு மருத்துவர்! அந்தச் சமயத்தில் அண்ணாவின் பார்வையில் நான் பட்டுவிட்டேன்.

உடனே . அவர்களே, தடுமாறிக் கொண்டே அறைக்குள் சென்று கட்டுரையை எடுத்துவந்தார்கள். ''தமிழர் திருநாள்'' என்று தலைப்பு எழுதிக்கோ!'' என்று சொல்லியவாறு என்னிடம் தந்தார்கள்.

''தமிழர் திருநாள்'' உடன் பேரறிஞர் பெருந்தகையின் தமிழ்க் கட்டுரை நின்று விட்டது! அதுவே அவரது கடைசிக் கட்டுரை!

எழுதி எழுதித் தமிழ் நிலத்தைத் தட்டி எழுப்பிய கை, ''தமிழர், திருநாள்'' உடன் ஓய்ந்துவிட்டது! தமிழ்க் கட்டுரை எழுதுவதற்காக அவர் பேனாவைப் பின்னர் திறக்கவே இல்லை!

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

பொருள்:- கூட்டுறவுத்துறையில் கூட்டுறவுச் சங்கங்களின் தற்காலிக இளநிலை ஆய்வாளர்களை அப்பணியில் நிரந்தரம் செய்வதற்கான சிறப்பு தகுதித்தேர்வு.

★ ★ ★

*18.7.1989* அன்றைய நாளிதழில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய விளம்பர எண் 37-இல் கூட்டுறவுத்துறையில் பணியாற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் தற்காலிக இளநிலை ஆய்வாளர்களை அப்பணியில் நிரந்தரம் செய்வதற்காகச்சிறப்பு தகுதித் தேர்வுக்கு அனுமதிக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. தேர்வுக்கான மையம், தேதி மற்றும் பிற விவரங்கள் கீழ்வருமாறு:-

| | | |
|---|---|---|
| தேர்வுத்தேதி | : | 1989-ஆம் ஆண்டு<br>அக்டோபர் மாதம் 15-ஆம் நாள்<br>ஞாயிற்றுக்கிழமை. |
| தேர்வு விவரங்கள் | : | மேல்நிலைக் கல்வித் தகுதியில் ஆங்கிலத்தாள்<br>மூன்று மணி நேரம்<br>முற்பகல் 10.00 மணி முதல்<br>பிற்பகல் 1.00 மணி வரை<br><br>பொது அறிவுத்தாள் - பகுதி 1<br>(கொள்குறி வரைதல்) (Objective type)<br><br>பொது அறிவுத்தாள் - பகுதி 2<br>(விவரிப்பு வகை) (Descriptive type)<br><br>இரண்டு மணி நேரம்<br>பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை |
| தேர்வு மையம் | : | சென்னையில் மட்டும். |

**விண்ணப்பதாரர்களுக்கான அனுமதிக் குறிப்பாணை (நுழைவுச்சீட்டு) தேர்வுத்தேதிக்கு 10 நாட்களுக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படும். எனினும், 8.10.1989-க்குள் அனுமதிக் குறிப்பாணையைப் பெறத் தவறியவர்கள், சமீபத்தில் எடுக்கப்பட்ட அவர்களது நிழற்படத்தின் நகல் ஒன்றுடன் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 என்ற முகவரிக்கு எழுதி அனுமதிக் குறிப்பாணையைப் பெற்றுக்கொள்ளலாம்.**

DIPR 1806/MS/89/RS.

# சகலலோகச் சக்கரவர்த்தி



தமிழ்நாட்டின் வரலாற்றில் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தொண்டை மண்டலம் சோழர்களின் ஆளுகைக்கு உட்பட்டது.

பிற்காலச் சோழர்களுள் முதல்வராகிய விஜயாலயனது புதல்வன் முதலாம் ஆதித்தனால் தொண்டை மண்டலம் வென்று கொள்ளப்பட்டதால், தொண்டை மண்டலம் சயங்கொண்ட சோழ மண்டலம் எனும் புதியதோர் பெயரைப் பெற்றது. பல்லவர்கள் குறுநில மன்னர்கள் ஆயினர். சோழ மன்னனுக்குத் திறை செலுத்திவந்த பல்லவர்குலச் சிற்றரசர்களும், தலைவர்களும் சயங்கொண்ட சோழ மண்டலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் பலர் சோழ மன்னர்களின் அமைச்சர்களாகவும் படைத் தலைவர்களாகவும் நிலவியதோடு சில உண்ணாடுகளையும் தனியூர்களையும் ஆட்சி புரியும் உரிமையும் பெற்றிருந்தனர்.

காவல் பணியில் ஈடுபட்டு, அதற்குரிய ஊதியமாய்ப் 'படிக்காவல்' என்ற வரியைச் சோழ அரசனால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பகுதிகளில் வரியீட்டி வந்தார்கள். நாளடைவில் தனியுரிமை பெற்றவர்களாக வ்ளர்ந்தனர். இவர்களே சோழப் பேரரசில் பதவிகள் ஏற்றனர். நாளடைவில் குறுநில மன்னர்களாக உருவெடுத்தனர்.

சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தொண்டைநாட்டுக் கோட்டங்களுள் ஒன்றான பல்குன்றம் கோட்டத்தில் சம்புவராயர் என்ற குறுநில மன்னர் நாடு காவல் புரிந்து வந்தனர். பல்குன்றக் கோட்டம் பாலாற்றுக்கும் தென் பெண்ணையாற்றுக்கும் இடையில் பவளமலையை மேல் எல்லையாகக் கொண்டிருந்தது. பவளமலை இப்போது 'சவ்வாது மலை' என்ற பெயருடன் வடஆர்க்காடுமாவட்டத்தில் உள்ளது. பல்குன்றக் கோட்டத்துச் சம்புவராயருக்குப் படைவீடு தலைநகராக விளங்கிற்று. அவரது ஆட்சி கிழக்கே திருக்கழுக்குன்றத்தையும் விழுப்புரத்துக்கு வடகிழக்கிலுள்ள திருவரசிலியையும் தன்னகத்தே கொண்டிருந்தது.

வடார்க்காட்டில் போரூரிலிருந்த வேலூருக்குச் செல்லும் பெருவழியில் சந்தைவாசல் என்னும் அழகிய ஊர் உள்ளது. அதற்கு மேற்கில் கிழக்கொழிய ஏனை மூன்று பக்கங்களிலும் உயர்ந்த மலைகளால் சூழப்பட்ட இடைநிலத்தில் படைவீடு காட்டாறு ஒன்றின் கரையில் இருக்கிறது. அந்த ஆறு ஆரணியாறு என்னும் படைவீட்டாறு என்று வழங்கப்படுகின்றது. சிறு காடு படர்ந்து பசுந்தழை போர்த்து நிற்கும் குன்றுகளின் அடியில் மணல் பரந்த ஆற்றங்கரையில் நின்று திகழும் இவ்வூர் படைவீடு என்று பெயர் தாங்கியிருப்பது மிகவும் பொருத்தமாகும். ஒரு காலத்தில் செல்வம் சிறந்த திருநகரமாய் விளங்கியதைக் காட்டும் சின்னங்கள் பல இன்றும் உள்ளன.

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டின் இறுதிவரை சம்புவராயர்களின் ஆட்சி மிக்க புகழ் படைத்து விளங்கிற்று. சம்புவராய மன்னர்களுள் செங்கேணி மீண்டான் அத்திமல்லன் சம்புவராயன் என்பவனே மிகப்பழமையானவன்.

ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளுக்குமேல் சம்புவராய மன்னர்கள் கீர்த்தி மிகுந்தவர்களாக இருந்தனர்.

## மாமூலன்

சம்புவராயர் எனும் அரச மரபினர் கி.பி. பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டில் சுய ஆட்சி பெற்று வடார்க்காடு மாவட்டத்திலுள்ள விரிஞ்சிபுரத்தைத் தலைநகரமாகக் கொண்டும் போரூருக்கு அருகிலுள்ள படைவீட்டில் கோட்டை அமைத்துக் கொண்டும், தற்போதுள்ள வட ஆர்க்காடு மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம், சித்தூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஆட்சிப் பரப்பை ஆட்சி செய்து வந்திருக்கின்றனர். கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலேயே சம்புவராயர் பற்றிய செய்திகள் கல்வெட்டுகள் வாயிலாகக் கிடைக்கின்றன. அப்போது இவர்கள் அரசு அதிகாரிகளாகவோ அல்லது ஒரு சிறு பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னர்களாகவோ இருந்தனர். தன்னாட்சி பெற்ற அரசாட்சி செய்திருக்கின்றார்கள் என்பது கல்வெட்டுக்கள் கூறும் செய்தியாகும்.

சம்புவராயர் குறுநில மன்னர்களாக இருந்தும் முதலில் சோழர்களுக்

# சம்புவராயர்

கும் பின்னர் பாண்டியர்களுக்கும் துணையாக இருந்து போர்க் காலங் களில் உதவி புரிந்தும் வந்துள்ளனர். பின்னர், சோழர்களின் ஆதிக்கம் தாழத்தொடங்கியபோதும், சோழர் களின் ஆட்சியை நிலைநிறுத்த போர் முகத்தில் அணி வகுத்துச் சென்றதோடு, சிறந்த தவ வலிமை கொண்ட முனி வர்களைக் கொண்டு வேள்வி செய்தும் சோழப் பேரரசை நிலைநிறுத்திய தோடு, காப்பாற்றியும் இருக்கிறார்கள் என்ற செய்திகள் கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றன. பின்னர் சோழர் ஆட்சி நிலை குலைந்து பாண்டியர் ஆட்சி தலைதூக்கியபோது பிற குறுநில மன்னர்களோடு இவர்களும் பாண்டி யர் ஆட்சிக்கு உதவி செய்ய முற் பட்டிருக்கின்றனர். அதற்குப் பிறகு தமிழகத்தின் வட பகுதியில் தங்களுக் கென ஒரு சிறு பகுதியை வகுத்துக் கொண்டு தாங்களே சுய ஆட்சி செய்ய முயன்றிருக்கின்றனர்.

**சோழர் காலத்தில் சம்புவராயர்கள்:-**

சோழப் பெருமன்னன் விக்கிரம சோழனின் (கி.பி. 1116-1135) 16-ஆம் ஆட்சியாண்டு முதல் முதலில் செங்கேணி நாலாயிரவன் அம்மையப் பன் என்னும் இராசேந்திர சோழ சம்புவராயன் குறிப்பிடப்படுகின்றான். இவர் 2-ஆம் குலோத்துங்கனின் (கி.பி. 1133 முதல் 1150 வரை) 5-ஆம் ஆட் சியாண்டுக் கல்வெட்டிலும் குறிக்கப் படுகின்றான். பிறகு இரண்டாம் இராஜராஜ சோழனின் 4-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் செங்கேணி அம்மையப்பன் அத்திமல்லன் என்னும் இராஜேந்திர சோழ சம்புவராயன் காணப்படுகின்றான். இக்கல்வெட்டு வந்தவாசிக்கு அருகிலுள்ள மடம் என்ற ஊரிலிருந்து படியெடுக்கப்பட்டிருக் கிறது. இரண்டாம் இராஜராஜன் 18-ஆம் ஆட்சி ஆண்டு வரை இரா ஜேந்திர சோழ சம்புவராயன் குறிக்கப் படுகிறான்.

இரண்டாம் இராஜராஜனின் 7-ஆம் ஆட்சியாண்டில் அம்மையப்பன் பாண்டி நாடு கொண்டான் என்னும் கண்டர் சூரியன் சம்புவராயன் என்ற மன்னன் காணப்படுகின்றான். இம்மன்னன் காலத்தில், செங்கேணி அம்மையப்பன் பல்லவராயன், செங்கேணி அத்தி மன்னன், செங்கேணி அம்மையப்பன் எதிரியன் சோழ சம்புவராயன் போன்ற சம்புவராய மன்னர்களும் குறிக்கப்படு கின்றனர்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் செங்கேணி வீர சோழன் அத்திமல்லன் என்னும் குலோத்துங்க சோழ சம்புவராயன் என்பவனும், இராஜ நாராயண சம்புவராயன் என்பவனும், செங்கேணி அம்மை யப்பன் வன்னியநாயன் என்பவனும் குறிக்கப்படுகின்றனர்.

மூன்றாம் குலோத்துங்கச் சோழ னுக்கு அடுத்து வந்த மூன்றாம் இராஜ ராஜ சோழன் காலத்திலும் சம்புவராய அழகிய சீயன் என்பவனும் குறிக்கப் படுகின்றான். இவர்களுக்குப் பிறகு சம்புவராயர் தனி ஆட்சி செய்யத் தொடங்கிய வென்று மண்கொண்ட சம்புவராயன் என்பவனும், இராஜ நாராயண சம்புவராயன் என்பவனும் ஆட்சி செய்திருக்கின்றனர். வென்று மண் கொண்ட சம்புவராயன் கி.பி. 1321 முதல் 1339 வரையிலும், இராஜ நாராயண சம்புவராயன் கி.பி. 1339 முதல் 1363 வரையிலும் ஆட்சி புரிந்தனர்.

**சம்புவராயர் வீழ்ச்சி:**

விஜய நகரப் பேரரசனின் முதலாம் புக்கனின் மகனான குமார கம்பணன் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத் தின் மீது படையெடுத்து மதுரை வரை சென்று வெற்றி பெற்றதைக் காவிய வடிவில் அவனது பட்டத்து அரசியான கங்காதேவி, 'மதுரா விஜயம்' என்னும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். அந் நூலில் குமார கம்பணன், சம்புவராய ரோடு எதிர்த்துப் போராடிய நிகழ்ச்சி களையும் சித்திரித்துள்ளார். வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசிக்கு அருகிலுள்ள மடம் என்ற ஊரில் காணப்படும் கல்வெட்டில் குமார கம்பணன் இரண்டாம் வென்று மண்கொண்ட சம்புவராயனைத் தோற் கடித்து அவனது ஆட்சியைக் கைப் பற்றியதைத் தெரிவிக்கிறது.

“நிர்வாக வசதிகளை முன்னிட்டு தமிழகத்தில் பெரிய மாவட் டங்கள் பிரிக்கப்பட்டு புது மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு வரு கின்றன. அந்த வரிசையில் தற்போது வடஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்றும், வேலூர்- அம்பேத்கார் மாவட்டம் என்றும் இரு மாவட்டங்களாக மலர உள்ளது.

சம்புவராயர்கள் குறித்தும், தமிழக வரலாற்றில் அவர்கள் பெற்றிருந்த சிறப்பு குறித்தும் கட்டுரைகள் விளக்குகின்றன.”

**சம்பவராய மன்னர்களும்' அவர்களது பட்டப்பெயர்களும்:**

சம்புவராயர்கள் தமிழகத்தில் வட பகுதியை ஆட்சி செய்தபோது முகலாயப் பேரரசின் பிரிதிநிதியான மாலிக்காபூர் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்தார். அவரை ஏகாம்பர நாதர் சம்புவராயர் தோற்கடித்துச் சகல லோகச் சக்ரவர்த்தி என்ற பட்டத்தைத் தரித்துக் கொண்டார். இவருக்குப் 'பொன்னின் பெருமாள்' என்ற பட்டப் பெயரும் வழங்கப்பட்டுள்ளது. அவனது இராஜ்யத்தின் பல இடங்களில் முகமதிய படையெடுப்பில் தொல்லைக்கு ஆளான மக்களுக்குப் பாதுகாப்பு அளித்துப் புகலிடம் ஏற்படுத்தி இருக்கிறான். அவனது அருமை மைந்தன் இராஜநாராயண சம்புவராயன் என்பவன் ஆவான். அவன் 24 ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கிறான். அவனது கல்வெட்டுக்கள் வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு செங்கல்பட்டு மாவட்டங்களில் சுமார் 200-க்கு மேற்பட்டு காணப்படுகின்றன.

இராஜ நாராயணனுக்கு 'இராஜ கம்பீரன்' என்னும் பட்டப் பெயரும் உண்டு. அதன் காரணமாக அவனது ஆட்சிப் பகுதிக்கு இராஜ கம்பீர இராஜ்யம் என்ற பெயர் வழங்கப் படலாயிற்று. இவருக்கு மேலும் 'மல்லிநாதன்', 'உதார குணராமன்', 'பொன்னின் தம்பிரான்', 'சர்வஞ்ஞன்' போன்ற பெயர்கள் இருந்தன என்பது கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது. இவரது காலத்தில் பல ஊர்களுக்கும் நகரங்களுக்கும் அவரது பெயர் அமைக்கப்பட்டு இருந்ததை 'இராஜ நாராயணன்பேட்டை' என்று வழங்கப்பட்டிருப்பதாகவும், சதரஸ் என்ற ஊருக்கு 'இராஜ நாராயணன்' 'பட்டணம்' என்ற பெயர் கல்வெட்டில் காணப்படுவதாலும் அறியலாம். இவன் தனது தந்தையான வென்று மண்கொண்ட சம்புவராயனின் சாம்பலைத் தம் அலுவலர் மூலம் காசிக்குக் கொண்டு சென்று கங்கையில் கரைத்தமை தெரியவருகிறது.

**கல்வெட்டுக்கள் காட்டிடும் காட்சிகள்:**

சம்புவராயர் ஆட்சிக் காலத்தில் பல நல்ல பணிகள் தமிழகத்தில் நிகழ்ந்து இருந்ததையும் கல்வெட்டின் மூலம் அறிய முடிகிறது. இராஜ நாராயணன் 5-ஆம் ஆட்சி ஆண்டில் தற்போது சென்னையில் ஒரு பகுதியாக இருக்கும் திருவொற்றியூர் சிவன் ஆலயத்தில் இஷபத்னியார்களுக்கும் தேவரடியார்களுக்கும் ஏற்பட்ட வழக்கு தீர்த்து வைக்கப்பட்டது என்பது திருவொற்றியூர் கோயிலிலுள்ள கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. மேலும் செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டம் திருப்புலிவனம் என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டில் நீர்ப் பங்கீடு பற்றி சில ஊர்களுக்கு இடையே ஏற்பட்ட பிணக்கு தீர்க்கப்பட்டு ஓர் உடன்பாடு ஏற்பட்டது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவன் காலத்தில் பல கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றன.

> ஆராய்ச்சிப் பேரறிஞர் சதா சிவப் பண்டாரத்தார் எழுதிய ''கல்வெட்டுகள் கூறும் உண்மைகள்'' என்ற நூலும், பேராசிரியரும் ஆராய்ச்சி அறிஞருமான டாக்டர் மா. இராசமாணிக்கனார் எழுதியுள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளும், வரலாற்று ஆசிரியர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் விஜய நகரப் பேரரசின் நிருவாக அமைப்பைப் பற்றி எழுதிய நூல்களும், வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்ட ஆலயங்களில் காணப்படும் கல்வெட்டுகளும் சம்புவராயர் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.
>
> பேராசிரியர் டாக்டர் பெருமாள் அவர்களும் சம்புவராயர் பற்றிய செய்திகளைத் தொகுத்துள்ளார்.

சம்புவராயர்கள் சமயப்பொறை உடையவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள். வட ஆர்க்காடு மாவட்டம் போளூர் வட்டம் திருமலையில் சமணத் தீர்த்தங்காரரின் உருவம் ஒன்று இராஜ நாராயணனின் 12 ஆம் ஆட்சியாண்டில் செய்து அமைக்கப்பட்டுள்ளது.

வீரசம்பன் குளிகை என்ற காசு இவன் காலத்திலும், இவனது தந்தை வென்று மண்கொண்ட சம்புவராயர் காலத்திலும் வழங்கி வந்திருக்கிறது. இக்காசு 'வாசிபடா வீரசம்பன் குளிகை' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் செங்கேணி அம்மையப்பன் வள்ளிநாராயணன் என்பவனால், கோயிலுக்கு நிலக்கொடை அளிக்கப்பட்டது தெரிவிக்கிறது. மேலும், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவக்கரை பெருமாள் கோயிலில் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் கண்டர் சூரியன் திருமண்டபம், திருக்கோபுரம் ஆகியவைகளைப் பாண்டிய நாடு கொண்டான் சம்புவராய மன்னன் என்பவனால் எடுப்பிக்கப்பட்டிருப்பது தெரியவருகிறது.

சம்புவராய மன்னர்களைப் பற்றி ஏகாம்பரநாதர் உலாவில் சில செய்திகள் கிடைக்கின்றன. ஏகாம்பர நாதருக்கு அப்போது காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த மல்லிநாத சம்புவராயன் என்ற மன்னன் மணி மகுடமும், தேர், உலா மண்டபம் ஆகியவையும் செய்து அமைத்ததை ஏகாம்பர நாதர் உலா குறிக்கிறது.

**ராஜகம்பீரன் மலை!**

மேலும் சம்புவராய மன்னர்கள் கட்டி வாழ்ந்த கோட்டையில் அடிப்பகுதிகளும், கோட்டைச் சுவர்ப் பகுதிகளும் வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள படைவீட்டின் மேற்குப் பகுதியில் 'கோட்டை மேடு' என்ற பகுதியில் காணப்படுகின்றன. இக்கோட்டை மேடு சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பில் இடம் பெற்றுள்ளது. இக்கோட்டையில் சுவர்ப் பகுதி நன்கு தெரிகிறது. இச்சுவர் செங்கல் கட்டடத்தை உள்ளடக்கி கருங்கல் கொண்டு இரு பக்கங்களிலும் பாவப் பெற்றதாகத் தெரிகிறது. தற்போது இக்கோட்டையின் மேட்டுப் பகுதி அனைத்தும் தனிப்பட்டோர்களின் வேளாண்மைப் பகுதியாக மாற்றப்பட்டு வேளாண்மை செய்யப்பட்டு வருகிறது. வேளாண்மை செய்வதற்காக இக்கோட்டையில் சுவரை அழித்து வருகின்றனர். நாளடைவில் இக்கோட்டை அடிச்சுவடு தெரியாமலேயே போகக்கூடுமென்று தெரிகிறது. கோட்டை மேட்டில் உள்ள பகுதிகளைச் சீர் செய்கின்றபோது பெருமளவில் செங்கற்கள் எடுக்கப்படுகின்றன. மேலும் உரல் கற்கள் மற்றும் சந்தனம் அரைக்கும் கற்கள், போன்ற பல பொருள்கள் நிலத்தைச் சீர்செய்கையில் கண்டெடுக்கப்பட்டு உள்ளன. இக்கோட்டைக்கு சுமார் இரண்டு கல் தொலைவில் மேற்குப் பகுதியில் ஒரு மலை உள்ளது. இது 'இராஜ கம்பீரன் மலை' என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

இரட்டைப்புலவர்களால் பாடப் பெற்ற கலம்பகம் கொண்ட ஏகாம்பரச் சம்புவராயன் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை அரசாண்டவன்.

காஞ்சியில் எழுந்தருளியுள்ள மாமூலனார் (ஏகாம்பர நாதர்) திருக்கோயிலுக்கு அரிய பெரிய திருப்பணிகள் ஆற்றிய இம்மன்னன் சம்புவராயர்களின் வழித்தோன்றல்களில் ஒருவன்.

# ராஜ கம்பீர ராஜ்யம்

**நடன. காசிநாதன்**, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர்.

**கி.பி.** 13-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாண்டியர் செல்வாக்கு முற்றிலும் குறைந்தபோது தமிழகத்தில் பல சிற்றரசர்கள் சிறு சிறு பகுதிகளைத் தம் கீழ்க் கொண்டு தன்னாட்சி செய்ய முற்பட்டனர். இவர்களுள் ஒரு பிரிவினர் சம்புவராயர் எனப்படுவர். இவர்கள் தொண்டை நாட்டின் வட பகுதியில் தங்களுடைய தன்னாட்சியை நிறுவி கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் செல்வாக்கோடு ஆட்சி செய்துள்ளனர். இவர்களுடைய தலைநகரமாகப் படைவீடு என்ற பகுதியும் அதையுள்ளடக்கிய ராஜ்யமும் விளங்கியது. இந்த ராஜ்யம் 'ராஜ கம்பீர ராஜ்யம்' என்று வழங்கப்பட்டுள்ளது. வேலூரிலிருந்து 25 கி.மீ. தொலைவில் தெற்கிலும், ஆரணியிலிருந்து 8 கி.மீ. தொலைவில் மேற்கிலும், ஆர்க்காட்டிலிருந்து 30 கி.மீ. தொலைவில் தென் மேற்கிலுமாக அமைந்துள்ள படைவீடு இன்றும் தனது பழம் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

தற்போது ஒரு சிறு ஊராட்சி அளவுக்கு இவ்வூர் சிறுத்துக் காணப்பட்டாலும், இவ்வூரில் நடு நாயகமாக விளங்கும் ரேணுகாம்பாள் அம்மன் ஆலயமும், இவ்வூரின் மேற்கே அமைந்துள்ள ராம ஆலயமும், அவ்வாலயத்திற்கு மேற்கே அமைந்துள்ள மேடும், அதற்கும் மேற்கே இரண்டு கி.மீ. தொலைவிலுள்ள ராஜ கம்பீரன் மலையும் படைவீட்டின் பழம் பெருமையைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளன.

ரேணுகாம்பாள் அம்மன் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டிருக்கிறது. இதற்குப் பக்கத்திலேயே பழைய ஆலயம் ஒன்று தெற்குத் திசை நோக்கிக் காணப்படுகிறது. இவ்வாலயம் அம்மையப்பேஸ்வரர் கோயில் என்று கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இக்கோயிலிலிருந்து மூன்று கல்வெட்டுகள் படி எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கல்வெட்டு சக ஆண்டு 1180 அதாவது கிபி. 1258-இல் எழுதப்பட்டிருக்கிறது. அம்மையப்பேஸ்வரருக்கு ராஜ கம்பீர சம்புவராயர் தேவதானமாக நிலக் கொடை வழங்கியது எழுதப்பட்டிருக்கிறது. மற்றொரு கல்வெட்டில் விஜய நகர மன்னர் வீர தேவராய மகாராயர் காலத்தில் சக ஆண்டு 1356 அதாவது கி.பி. 1434-இல் அம்மையப்ப நாயனாருக்கு மாதவயாவனார் தர்ம சாதனம் எழுதிக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. மூன்றாம் கல்வெட்டு (இதே மன்னன் காலத்தியது) கி.பி. 1435-இல் எழுதப்பட்டிருக்கிறது. இதுவும் அம்மையப்ப நாயனாருக்கு, கலவைப் பற்று உலகளந்த வேல் சூரிய தேவன் தர்ம சாதனம் செய்து தந்ததைக் குறிப்பிடுவதாகக் காணப்படுகிறது.

படைவீடில் சோமநாதர் ஆலயம் என்னும் ஓர் ஆலயம் உள்ளது. அவ்வாலயத்தில் இருந்தும் ஒரு கல்வெட்டு படி எடுக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு சக ஆண்டு 1371-இல் அதாவது கி.பி. 1449-இல் பொறிக்கப்பட்டுள்ளது. இது தேவமகாராயர் காலத்தியது. இக்கல்வெட்டில் 'தொண்டை மண்டலத்துப் படை வீடு ராஜ்யத்து நடுவர் வலங்கையும், இடங்கையும் மகாஜனமும் ராஜ கம்பீரம் மலைக்கடைந்த முருக மங்கலப் பற்று மருதாசா படைவீடு உடையார் சோமநாதஸ்வர நயினார் கோயிலில் நிறைவற கூடி' இருந்ததைக் குறிப்பிடுவதாக உள்ளது. இக்கல்வெட்டின் பிற்பகுதி சிதைந்து காணப்படுகிறது.

இவ்வூரின் மேற்கே உள்ள இராமர் ஆலயம் கிழக்குப் பக்கம் ஒரு கோபுரத்தைக் கொண்டு விளங்குகிறது. இவ்வாலயத்தின் கருவறையில் இராமர் யோக நிலையில் பத்மாசனத்தில் அமர்ந்து 'சின்' முத்திரையுடன் காணப்படுகிறார். இடப்பக்கம் சீதை, அமர்ந்த நிலையிலும், வலப்பக்கம் இலக்குமணன் நின்ற நிலையிலும் காணப்படுகின்றனர். எதிர்ப்பக்கம் ஆஞ்சநேயர், சுவடியை இரு கைகளில் ஏந்தியவராய் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார். உண்ணாழியின் முன்பாக உள்ள அர்த்த மண்டபத்தின் வடக்குப் பக்கத்தில் தாயார் சன்னதி உள்ளது. அச்சன்னதிக்கு முன்பாக தரைக்குக் கீழே ஒரு அறை காணப்படுகிறது. அது தற்பொழுது கற்கள் இட்டு மூடப்பட்டுள்ளது. இவ்வறையில் இருந்து பதினொரு செப்புத் திருமேனிகள் கண்டெடுக்கப்பட்டதாகக் கோயில் நிர்வாகத்தினர் கூறுகின்றனர். இந்தச் செப்புத் திருமேனிகள் தற்பொழுது ரேணுகாபரமேஸ்வரி ஆலயத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. இவை திருமால், பூதேவி, ஸ்ரீதேவி, மற்றுமொரு திருமால், காளியமர்த்தனர், ஹனுமான், இலட்சுமி நரசிம்மர் ஆகிய செப்புத் திருமேனிகள் ஆகும். முதல் திருமால், பூதேவி, ஹனுமான், காளியமர்த்தனர், இலட்சுமி நரசிம்மர் ஆகியவை கி.பி. 13-ஆம் நூற்றாண்டையும் பிற, கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டையும் சேர்ந்தவை.

இவ்வாலயத்திற்கு மேற்கே ஒரு கி.மீ தொலைவில் உள்ள கோட்டை மேட்டுப் பகுதியில் கோட்டை மேட்டு தலையாரி கோயில் என்ற ஒரு கோயிலும், வேணுகோபால் கோயிலும் உள்ளன. கோட்டைத் தலையாரி கோயில் என்று அழைக்கப்படும் இடத்தில் ஐயனார் என்று ஊகிக்கப்படும் சிலை சுமார் 5 அடி உயரத்தில்- நின்ற நிலையில் வலக்கையில் நீண்ட கதையையும், தலையில் ஜடா பாரத்தையும் கொண்டதாகக் காணப்படுகிறது. இச்சிற்பத்திற்கு அருகில் சுமார் இரண்டு அடி உயரத்தில் பெருமாள் சிற்பம் நின்ற நிலையிலும் காணப்படுகிறது. இச்சிற்பத்தில் மூன்று கரங்கள் உடைந்துள்ளன. இடது கீழ்க்கரம் ஊருஹஸ்தமாக உள்ளது: வேணுகோபால் ஆலயம் என்று அழைக்கப்படும் இடத்தில் வேணுகோபால் கால்களைச் சதுர வடிவில் வைத்து, மேல் இரு கரங்களும் புல்லாங்குழல் பிடித்து ஊதுகின்ற நிலையிலும் வலது கீழ்க்கரத்தில் சக்கரத்தையும் இடது கீழ்க்கரத்தில் சங்கையும் தாங்கியவராய்க் காட்சியளிக்கிறார். அருகில் காணப்படும் ருக்மணி இரு கரங்களுடன், இடக்கரத்தில் தாமரை மலர் ஏந்திய வண்ணம் காணப்படுகிறார். இவர்களுக்குப் பக்கத்தில்

## சம்புவராயர் எனும் பட்டம் ...

**பண்டைத் தமிழ் மன்னர்கள் தம்மிடம் பணியாற்றிய அமைச்சர்கள், உயர் அலுவலர்களுள் தக்கோருக்குப் பட்டம் அளித்துச் சிறப்பித்தலை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த வழக்கத்தைச் சோழவேந்தர்கள் பின்பற்றினர். சோழ மன்னர்கள், தமது அமைச்சர்கள், உயர் அலுவலர்கள் தம் ஆட்சிக்கு உட்பட்டுத் துணை நிற்கும் குறுநில மன்னர்கள் ஆகியோரில் ஆற்றல்மிக்கவர்களாக - அரிய பணி செய்தவர்களாக இருந்தால் அவர்களுக்குச் சிறப்புப் பட்டங்கள் வழங்கினார்கள்.**

**அந்தப் பட்டங்களில் சிலதாம், மாராயன், பல்லவராயன், காளங்கராயன், தொண்டைமான், காடவராயன், சம்புவராயன் முதலியன. இப்பட்டங்களோடு அரசனின் இயற்பெயர், சிறப்புப் பெயர் அல்லது அரசனின் முன்னோரின் பெயர் ஆகியவற்றில் ஒன்றைச் சேர்த்து வழங்குவது வழக்கமாக இருந்தது. இந்த முறையில்தான் சம்புவராயர் பெயர்கள் வழக்கில் வந்தன.**

**சம்புவராயர் என்ற சொல்லை சம்பு + அரையர் என்று பிரிக்கலாம். சம்பு என்பது சம்பு குலத்தையோ, சிவபெருமானையோ குறிப்பிடுவதாக அமையும். அரையர் என்பது தலைவர் என்ற பொருளைத் தருவதாகும்.**

இரண்டு அடி உயரத்தில் உள்ள சிறு சிற்பம் சதாசிவர் என்று கருதப்படுகிறது. நான்கு தலைகள் காணப்படுகின்றன. வலது மேற்கரத்தில் மான் ஏந்தியுள்ளார்.

கோட்டைத் தலையாரி கோயில் சிற்பத்திற்கு வடக்குப் பக்கத்தில் செங்கல் குவியல் காணப்படுகிறது. அக்குவியல் அதற்குப் பக்கத்திலிருந்த ஒரு கட்டடத்தை அழித்துக் குவிக்கப்பட்டதாக அந்நிலத்தின் சொந்தக்காரரிடம் விசாரித்ததில் தெரியவந்தது. இது போன்று பல கட்டடங்கள் இன்னமும் மண்ணுக்குள் புதைந்திருக்கும் போலத் தெரிகிறது. இவ்விடத்தில் அகழாய்வு செய்து பார்த்தால் மேலும் பல கட்டடங்கள் கண்டுபிடிக்கப்படலாம். ஆனால், இப்பகுதி அனைத்தும் தற்போது தனிப்பட்டோரின் பட்டாவாக ஆக்கப்பெற்று வேளாண்மை செய்யப்படுகிறது.

இத்தகைய சிறப்பான ஒரு கோட்டையை அமைத்து இங்கு ஆட்சி செய்த மன்னர்கள் வென்று மண்கொண்ட சம்புவராயர், அவனது அருமை மைந்தன் இராஜநாராயண சம்புவராயர் ஆகியோரும் அவர்களது முன்னோர்களும் ஆவார்கள். வென்று மண் கொண்ட சம்புவராயர் கி.பி. 1322-இல் இருந்து 1339 வரை ஆட்சி செய்து இருக்கிறார். இவருக்கு அடுத்து இவரது மைந்தன் இராஜ நாராயண சம்புவராயர் சுமார் இருபத்தைந்து ஆண்டுக் காலம் ஆட்சி செய்துள்ளார். இவனது ஆட்சிக் காலம் 1337-லிருந்து தொடங்கி கி.பி. 1362-இல் முடிவுற்றதாகும். இவனுடைய ஆட்சிப் பகுதி தற்காலத்திய வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கல்பட்டு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகத் தெரிகிறது. இவன் காலத்திய கல்வெட்டுகள் மேற்காணும் எல்லா பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. இம்மன்னன் காலத்தில் பல அறப்பணிகளும், சமுதாயப் பணிகளும் நடைபெற்று இருக்கின்றன என்பது கல்வெட்டுகள் மூலம் புலனாகிறது.



**திண்டுக்கல் பஸ் நிலையம் அருகில் 'அன்னை நியூஸ் மார்ட்' என்ற பெயரில் நூல்கள் விற்பனை செய்து வருகிறார் திரு. வி. செல்வராசன் 'தமிழரசு' இதழ் ஆரம்பித்த நாள்முதல் இவருடைய தந்தை திண்டுக்கல் நகரில் மட்டும் 1,800 பிரதிகள் விற்பனை செய்துள்ளார். தற்சமயம் இவர் திண்டுக்கல்லில் 500 பிரதிகள் விற்பனை செய்து வருகின்றார். 'தமிழரசு' பிரதிகளை 1.1.90-ஆம் தேதிக்குள் 5 ஆயிரம் பிரதிகள் விற்பனை செய்யப் பெரும் முயற்சி எடுத்து வருகின்றார்.**

இவனது மகன் இரண்டாம் வென்று மண்கொண்ட சம்புவராயர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் விஜய நகர வேந்தன் குமார கம்பணனால் தோற்கடிக்கப்பட்டு, இவர்களது மலையான ராஜ கம்பீர மலையும், கோட்டையும் அரண்மனையும் கைப்பற்றப்பட்டன. இச்செய்திகள் அனைத்தும் வட ஆர்க் காடு மாவட்டம் வந்தவாசி வட்டம், மடம் என்னும் ஊரில் உள்ள தடாக புரீசுவரர் ஆலயக் கோபுரத்தில் எழுதப்பட்டிருக்கும் இரண்டு கல்வெட்டுகளில் கூறப்படுகின்றன. முதல் கல்வெட்டில் வீர கம்பனமுடைய படைத்தளபதி கண்டர்கள், மாராய நாயக்கர், சம்புவராயர் அரசனுடைய பல அரண்களை அழித்து சமீப அரசனையும் கைக்கொண்டு மற்றுமுள்ள குறும்பர்களையும் வெற்றி பெற்றதாக் கூறப்படுகிறது. இரண்டாம் கல்வெட்டு, "ஸ்ரீவீர மிக்க உடையார் குமாரர் ஸ்ரீ மதுகம்பன உடையார் மகா பிரதானம் சோம பதலையாக்கர் குமாரர் ஸ்ரீமதுகண்டர் கூறி மாராய நாயக்கர் வென்று மண்



தியாகச்சுடர் சிதம்பரனாரின் பிறந்த நாளை ஒட்டி, சென்னை துறைமுகம் அருகேயுள்ள அன்னாரின் சிலைக்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் மாலை அணிவித்தார். துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு. ஏ. பால்ராஜ், தமிழக அரசுச் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் ஆகியோர் உடன் உள்ளனர்.(5.9.1989)

---

கொண்ட சம்புவராயரையும் ஜெயித்துக் கைப்பிடியாகப் பிடித்து ராஜ கம்பீரன் மலையும் கொண்டதுக்கு பரிசாக, அண்டப்பள்ளி என்ற ஊரை அளித்ததைத் தெரிவிக்கிறது. இவ்விரு கல்வெட்டுகளும் கி.பி. 1363-இல் பொறிக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், குமாரகம்பனனின் பட்டத்தரசி கங்காதேவியால் எழுதப்பெற்ற 'மதுரை விஜயம்' என்ற நூல் குமாரகம்பனன் சம்புவராய மக்களைத் தோற்கடித்த செய்தியை விளக்கிக் கூறுகிறது. மேலும், திக்கனசோமயாஜியால் எழுதப்பெற்ற 'நிர்வசனோத்ர ராமாயணம்' என்ற தெலுங்குக் காவியமும் சோழனான இரண்டாம் மன்மசத்தியின் தந்தை சம்புவராயர் போன்ற மண்டவீகர்களை வென்ற வீரச் செயலைப் புகழ்ந்து பாடுகிறது. ஆதலால் மேற்குறிப்பிட்டுள்ள சம்புவராயர், விஜய நகரப் பெருமன்னன் குமாரகம்பனனால் தோற்கடிக்கப்பெற்று, தம்முடைய அரசை இழந்தான் என்பது திட்டவட்டமாகத் தெரிய வருகிறது. அவ்வாறு சம்புவராயனைத் தோற்கடித்த குமாரகம்பனன் தமிழகத்தின் தென்பகுதிக்குச் சென்று மதுரையில் ஆட்சி செய்து வந்த சுல்தான் மன்னனை வென்று தமிழ்நாட்டை மீண்டதாக மதுரா விஜயம் என்னும் நூல் விளக்குகிறது.

ஆதலால், சுமார் 40 ஆண்டுக் காலம் படைவீடு பகுதி 'ராஜகம்பீர ராஜ்யம்' என்று அழைக்கப்பெற்று ஒரு சிறந்த ஆட்சி மையமாக விளங்கி வந்தது என்பதை நாம் இலக்கியங்கள் வாயிலாகவும், கல்வெட்டுகள் வாயிலாகவும் மற்றும் படைவீட்டுக் கோட்டைமேட்டில் காணப்படும் வரலாற்றுத் தடயங்கள் மூலமாகவும் அறிய முடிகிறது. அந்தக் கம்பீரத் தன்மை இழந்து தற்போது வெறும் மண்மேடாகக் காட்சி அளிப்பது வரலாற்றாய்வாளர்களின் நெஞ்சை நெருடுவதாக உள்ளது.

## சம்புவராயர் வரலாற்றுச் செய்திகள்




தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் - திரு நடன. காசிநாதன் சம்புவராயர்கள் பற்றி டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்.

முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள் சம்புவராயர் பற்றிய செய்திகளைத் தொகுத்துள்ளார்கள்.



★ சேவை என்பது மற்றவர்கள் நன்மை அடைவதைப் பார்த்து, மகிழ்ச்சியும், திருப்தியும் அடைவதற்காகவே செய்யப்படும் காரியம்.

★ நல்ல குடும்பம் என்பது, வரவுக்கு மிஞ்சி செலவு செய்யாமல் இருப்பதாகும். தமது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பம்தான் கண்ணியமான குடும்பம்.

★ யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதனை அப்படியே ஏற்றுக் கொள்வது என்றால், மனிதன் வளர்ச்சி அடைய மாட்டான்.

—தந்தை பெரியார்.

# வெண்பாப் போட்டி

## 3. அண்ணாவே சொன்னார் அறிந்து

'அண்ணாவே சொன்னார் அறிந்து' என்னும் ஈற்றடிக்கு வந்திருந்த ஏராளமான வெண்பாக்களில் பரிசுபெற்ற வெண்பாவும், வெளியிடுதற்குத் தகுதிபடைத்த வெண்பாக்களும் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

''தம்பி இருந்த தவச்சிறைக் கூடம்யான்
நம்பி வணங்கிவரும் நற்றலமாம்-இம்மண்ணில்
முன்வரைந்தேன் அத்தியாயம்! முற்றாய்
அவன் வரைவான்''
அண்ணாவே சொன்னார் அறிந்து!

-பல்லவன், திருக்கழுக்குன்றம்.

''மாற்றாரைப் போற்றி மதித்தொழுகல், வீசுகின்ற
வேற்றார் பழிச்சொல்லை வென்றெழுதல்-போற்றுமுயர்
வண்ணப் பொதுவாழ்வு வாய்ந்தார் கடமை''யென்(று)
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-புலவர் குறளன்பன், திருச்சி.

''சாதிச் சனியனைச் சங்கமெனும் தொட்டிலிட்டு
நாதமிசைத் திங்கே நனிவளர்ப்பர்-தீதன்றோ?
மண்ணில் குலமொன்றே மாத்தமிழர் நாமென்றே!''
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-மைதிலி ராகவன், திருக்கழுக்குன்றம்

அன்னை மொழிப்பற்றும்; ஆய கலைப்பற்றும்;
தென்னர் இனப்பற்றும்; தேவையாம்- என்றந்த
எண்ண மெழுந்து எழுச்சியுரம் நாம்பெற
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-து. கோமதி, சேலம்

''எண்ணிலாக் காக்கைகள் இந்நாட்டில் வாழ்ந்தாலும்
வண்ணமயில் ஒன்றைநாம் வாழ்த்துதல்போல்-
வண்டமிழை
எண்ணுவீர் நாட்டோரே!'' என்றந்நாள் மேலவையில்
அண்ணாவே சொன்னார் அறிந்து!.

-கவிஞர் ஆரோக்கியசாமி, மட்டப்பாறை.

வாழ்ந்த வரலாற்றை வையத்தில் தானிழந்தே
தாழ்ந்த நிலையுற்ற தம்வாழ்வை-ஆழ்ந்தறிந்தே
எண்ணாத மக்கள் எழுச்சி யுறும்வழியை
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-கவியரசர் இளங்கம்பன், பழனி.

கம்பன் கருப்பொருளைக் கச்சிதமாய்த்
தொட்டெடுத்தால்
வம்பு வருமென்றே வாய்திறவார்- கும்பிட்டார்!
ஒன்பது டோசாக ஒண்பொருளைப் பாரென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ம.ஆ. துரைசாமி, சேலம்-7.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் தன்னாட்சி
உத்தியை அஞ்சாமல் ஓதியவர் - முத்தமிழே
மண்ணுலகில் மூத்த மொழியெனும் தத்துவத்தை
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-கவிஞர் செல்லப்பாண்டியன், போடிநாயக்கனூர்.

''பாரதி மாக்கவியும் பாவேந்தாம் தீக்கவியும்
பாரதிரப் பூத்திட்ட பாப்பூக்கள்- நேரெதிரே
நின்றிங்கு நம்நாட்டில் நீள்புரட்சி செய்யு'' மென
அண்ணாவே சொன்னார் அறிந்து.''

-வே. அருணாதேவி, வடமாதிமங்கலம்.

''கத்தியைத் தீட்டாதே! கற்பவை கற்றறிந்து
புத்தியைத் தீட்டு! புகழ்தேடு- நித்தமும்,
எண்ணும் வினைமுடிப்பாய்'' என்றன்றே, பேரறிஞர்
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ப.அ. இசுமாயில், மேலப்பாளையம்.

''மூடத் தனங்கள் முழுதும் தொலைந்திட்டால்
நாடிவரும் நல்லாற்றல் நாட்டிற்குள்- தேடிவரும்
நன்மைகள்; தேர்ந்திடுவீர்; நற்காலம் வாய்க்கு'' மென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-கோ. இராமலிங்கம், சத்தியவாடி

''கடைவிழி காட்டுகின்ற காரிகையும், கானில்
இடைவழி நிற்கின்ற நண்பனும்- கேடொன்றே
எண்ணுவோனும் நஞ்சுநிறை நாக''மென நம்மறிஞர்
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ஏ.ஆர். சுப்பிரமணியன், அனுப்பபட்டி.

''குற்றாலம் சென்று குழாயடியில் போய்க்குளிக்கும்
சிற்றறிவை வேண்டற்க செந்தமிழா- குற்றமிலாப்
பண்டைத் தமிழர்போல் பண்பில் சிறந்தி'' டென
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-புலவர்.க. முத்துக்கருப்பன், சங்கரன்கோவில்.

''கட்டி முடித்த கலைக்கோ புரம்நேரு
கட்டுதற்குக் கொட்டியகல் நா''னென்றே- தேட்டமுடன்
சென்னை நகரினிலே செய்த உரைநடுவில்
அண்ணாவே சொன்னார் அறிந்து.

-ஞா. முத்துகிருஷ்ணன் சேர்வை, மெய்த்தலைவன்பட்டி.

''கூழைத் தினம்குடித்துக் கும்பி கழுவுகின்ற
ஏழை உயரவகை எண்ணிடுக- ஏழையர்
எண்ணக் களிப்பில் இறைவனையே கண்டிடலாம்''
அண்ணாவே சொன்னார் அறிந்து.

—கு. பிச்சை முத்து, எரசினம் பாளையம்.

(மீதி அடுத்த இதழில் வெளிவரும்)

**பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்**

கவிஞர் பல்லவன்,
29, திருவள்ளுவர் நகர்,
திருக்கழுக்குன்றம் - 603 109
செங்கை - அண்ணா மாவட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை

அதி / நவீன / பாலியெஸ்டர் / வகைகள்




உங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

DIPR/1786/MS88/HTA

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

Black

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

